www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஆகஸ்டு 2009
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 10.00









## மைக்கேல் ஜாக்சன்:

## மரணத்தைப் பரிசாகப் பெற்ற முதலாளித்துவக் கலைஞன்!





படிப்பகம்

www.padippakam.com

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!**

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர் : **27**
- குரல் : **1-3**
- ஜூன்-ஆக. 09

உள்நாடு: ரூ. 10.00
ஆண்டுச் சந்தா: ரூ. 150.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா ரூ. 750.00

*சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.

தொலைபேசி: 044-23718706
9941175876

மின் அஞ்சல் முகவரி:
pukatn@gmail.com.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

*அட்டை வடிவமைப்பு:*
ஸ்பார்ட்டகஸ்

# சங்கர மடத்தை சட்டத்தால் தண்டிக்க முடியுமா?

**பா**சிச ஜெயா காலத்தில் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்ட சங்கர ராமன் கொலை வழக்கில் சங்கராச்சாரி ஜெயேந்திரன் கைதானபோது அதிர்ந்து போனது தமிழகம். சங்கராச்சாரி கொலை செய்வாரா என்ற சந்தேகத்தைக் காட்டிலும், இரு பார்ப்பன மையங்கள் மோதிக் கொண்ட அதிசயம்தான் பலருக்கும் அதிர்ச்சி யைத் தந்தது. புதிராகவும் இருந்தது. இரு மையங்களுக்கும் இடையிலான கட்டைப் பஞ்சாயத்து, பொருளாதார முரண்பாடுகள் மற்றும் பாசிச ஜெயாவின் தனிப்பட்ட குணாதிசயங்கள் காரணமாக இந்த ‘வரலாற்றுப் புகழ்’ வாய்ந்த கைது அன்று நிகழ்ந்தது.

எல்லா ஊடகங்களும் பெரியவாள், பால பெரியவாளின் லீலைகளை விலாவாரி யாக எழுதியதும், சங்கரராமனைக் கொன்றதை ஜெயேந்திரன் பெருமையாக ஒத்துக் கொண்டதும் நக்கீரன் இதழில் வெளியான போது, சங்கர மடத்தின் அதிகாரம் சரிந்து விடும் போலத் தெரிந்தது. ஆனால் முதலாளிகள், அரசியல்வாதிகள், அதிகார வர்க்கங்கள், இந்து மதவெறி அமைப்புகள் ஆகியவற்றின் தரகு, கட்டைப் பஞ்சாயத்து மையமாகத் திகழும் சங்கர மடம் தனது அதிகாரத்தைச் சற்றே இழந்திருந்தாலும், அது தற்காலிகமானதே என்பதை இவ்வழக்கின் தற்போதைய நிலைமைகள் எடுத்துக் கூறுகின்றன.

சங்கரராமனைக் கொன்ற கூலிப்படையினரைக் கண்ணால் கண்ட சாட்சிகள் வரத ராஜப் பெருமாள் கோவில் ஊழியர்கள். சங்கரராமனது மனைவி, மகன் மற்றும் மகளும் வீடு தேடி விசாரிக்க வந்த கொலையாளிகளைப் பார்த்திருக்கின்றனர். இந்த அடிப்படையில் போலீசார் கூலிப்படையையும், மடாதிபதிகளையும் கைது செய்து வழக்கு போட்டனர். இந்த வழக்கு தமிழகத்தில் நடந்தால் தங்களுக்கு நீதி கிடைக் காது என்றும் வழக்கு விசாரணையை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டுமென்றும் கூறி உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தது ஜெயேந்திரன் தரப்பு. வழக்கை புதுச் சேரிக்கு மாற்றுமாறு உச்சநீதி மன்றமும் வழிமொழிந்தது. விசாரணையின் போக்கு எப்படி இருக்கும் என்பது அப்போதே ஏறத்தாழத் தெரியத் தொடங்கி விட்டது.

மாநிலத்தில் ஆட்சி மாற்றம் நடக்கும் வரையில் வழக்கு விசாரணையை நடத்த விடக் கூடாது என்பதற்காக எல்லா வகையான நீதித்துறை தகிடுதத்தங்களையும் செய் தது சங்கரமடம். திமுக ஆட்சி வந்தவுடன் சங்கரமடத்தினர் பெரு மகிழ்ச்சி அடைந்த தாகவும், இனி வழக்கு தங்களுக்கு சாதகமாக அமையுமென்று உற்சாகம் கொண்டி ருப்பதாகவும் பல பத்திரிகைகள் எழுதின. வழக்கைக் கொண்டு செல்வதில் அரசு தரப்பு காட்டிய மெத்தனம் இந்தக் கூற்றுகளை மெய்ப்பிப்பதாகவே அமைந்திருந்தது.

தற்போது, புதுச்சேரி முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடந்துவரும் விசாரணை யில், கொலையை நேரில் பார்த்த சாட்சிகளான கோவில் ஊழியர்கள் தமது முந்தைய வாக்குமூலத்தை மறுத்து கொலையாளிகளைப் பார்க்கவில்லை என்று கூறி, ‘பிறழ் சாட்சி’களாக மாறி விட்டனர். இந்த நாடகத்தின் உச்சமாக சங்கரராமனது மனைவி யும், மகனும், மகளும் கூட கொலையாளிகளை நேரில் பார்க்கவில்லை எனக் கூறி பிறழ் சாட்சியங்களாக மாறி விட்டனர்.

பெஸ்ட் பேக்கரி வழக்கில் ஜகீரா பானு பிறழ் சாட்சியமாக மாறியதற்காக தண்டிக் கப்பட்டார். வழக்கில் மறு விசாரணை நடத்தப்பட்டது. சங்க பரிவாரம் மற்றும் மோடி யின் அதிகார பலத்தையும், ஆள் பலத்தையும் மீறி அப்படியொரு தீர்ப்பைப் பெறுவ தற்கு அசாத்தியமானதொரு போராட்டத்தை தீஸ்தா சேதல்வாத் நடத்த வேண்டியிருந் தது. அப்படிப்பட்டதொரு போராட்டம் இல்லையேல் அது நிச்சயம் சாத்தியமாகி இருக்காது. தற்போதும் பிறழ் சாட்சிகளாக மாறி விட்ட இவர்களை அரசு தரப்பு தீவிர மாகக் குறுக்கு விசாரணை செய்ய இயலுமென்றாலும், அரசு தரப்பு அதைச் செய்யுமா என்பதுதான் கேள்வி.

பணபலமும் அரசியல் அதிகார பலமும் கொண்ட ஆளும் வர்க்கத்தினர் சட்ட வழிமுறைகள் மூலம் தண்டிக்கப்படுவது அரிதினும் அரிது. ‘‘பிரம்மம் தான் உண்மை யானது; நாம் காணும் இந்த உலகம் மாயை’’ என்றான் ஆதிசங்கரன். அந்த ஆதிசங்க ரன் பெயரிலேயே போலி டாக்குமெண்டு தயார் செய்து, காஞ்சி மடத்தை உருவாக்கி யவர்கள் அல்லவா கும்பகோணத்துப் பார்ப்பனர்கள்! இதோ கண்ணால் கண்டதெல் லாம் பொய் என்று நிரூபிக்கப்பட்டு விட்டது. இனி உண்மை எது, பிரம்மம் எது? ஏ.டி.எம். மா, உருட்டுக் கட்டையா?

www.padippakam.com

# தனியார்மயத்தின் தோல்வி: விமான முதலாளிகளின் வேலைநிறுத்தம்!

**விமானப் பெட்ரோலின் விலையைப் பாதியாகக் குறைக்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. விமானப் பெட்ரோலின் இன்றைய விலை என்ன தெரியுமா? லிட்டர் 36 ரூபாய். அதாவது இரு சக்கர வாகனங்களுக்கு நாம் போடும் பெட்ரோலின் விலையை விட மலிவு. பெரும்பான்மை மக்கள் பயன்படுத்தும் பெட்ரோலுக்கும், டீசலுக்கும், மண்ணெண்ணெய்க்கும், எரிவாயுக்கும் மானியம் கொடுத்தே அழிந்து போவதாக அழுது கொண்டிருக்கும் அரசு, விமான கம்பெனிகளுக்கு வழங்கியிருக்கும் 'மானியம்' இது.**

முதலாளிகள் வேலை நிறுத்தம்! இப்படி ஒரு சொற்றொடரை நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? முதலாளிகள் எனப்படுவோர் ஆட்குறைப்பு செய்வார்கள், ஆலைமூடல் செய்வார்கள், கேள்விப்பட்டிருக்கிறோம். வேலை நிறுத்தம்? இப்படி ஒன்றை இதுவரை நாம் கேள்விப்பட்டதில்லை. ஊதியம் போதவில்லை என்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வார்கள், பார்த்திருக்கிறோம். இலாபம் போதவில்லை என்று வேலை நிறுத்தம் செய்கிறார்கள் முதலாளிகள்.

''வேலை செய்பவன் தானே அதை நிறுத்த முடியும்? வேலையே செய்யாத முதலாளி எதை நிறுத்த முடியும்?'' என்று தொழிலாளிகள் கேட்கக் கூடும். காசோலையில் கையெழுத்து போடுவது, பங்குச் சந்தையில் சூதாடுவது, அதிகாரிகள் மந்திரிகளுக்கு பார்ட்டி வைத்து குளிப்பாட்டுவது போன்ற வேலைகளை, 'வேலைகள்' என்ற கணக்கில் சேர்க்க நாம் மறுக்கலாம். ஆனால் உலகம் முழுவதும் குறுக்கு நெடுக்காகப் பறந்து இப்படியான வேலைகளை முதலாளிகள் செய்கிறார்கள் என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது.

தொழிலாளிகளுடைய வேலை நிறுத்தங்களால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைகின்றது என்றும், நாடு வல்லரசாவது தள்ளிப்போகின்றது என்றும் கூறி வேலை நிறுத்தங்களைத் தடை செய்யப் பல சட்டங்களை இயற்றியிருக்கிறது அரசு. அத்தியாவசிய சேவைகளில் வேலை நிறுத்தம் செய்வதைத் தடுக்க எஸ்மா என்றொரு சட்டம் நிரந்தரமாகவே உள்ளது. ஆனால் முதலாளிகளின் வேலை நிறுத்தத்தைத் தடை செய்ய சட்டம் எதுவும் இல்லை.

சரி, விசயத்துக்கு வருவோம். ஆகஸ்டு 18-ஆம் தேதியன்று இந்தியாவில் உள்ள தனியார் விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் எல்லாம் அடையாள வேலை நிறுத்தம் செய்யப் போவதாகவும், தங்கள் கோரிக்கைகள் நிறைவேறவில்லையென்றால், தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகவும் அந்த நிறுவனங்களின் முதலாளிகள் ஆகஸ்டு மாதத் துவக்கத்தில் அறிவித்தனர். கிங் ஃபிஷர், ஜெட் ஏர்வேஸ், கோ ஏர், ஸ்பைஸ் ஜெட், ஏர் டெக்கான், பாராமவுண்ட் ஏர்வேஸ், இண்டிகோ, ஜெட் லைட் போன்ற தனியார் விமான கம்பெனி முதலாளிகளின் 'தொழில் சங்கம்' இந்த வேலை நிறுத்தத்தை அறிவித்திருக்கின்றது. இந்தத் தனியார் விமான கம்பெனிகள்தான் இந்தியாவின் உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் 80%-ஐ இன்று கட்டுப்படுத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



விமான முதலாளிகளின் கூட்டம்

**''வேலை செய்பவன்தானே அதை நிறுத்த முடியும்? வேலையே செய்யாத முதலாளி எதை நிறுத்த முடியும்?'' என்று தொழிலாளிகள் கேட்கக் கூடும். காசோலையில் கையெழுத்து போடுவது, பங்குச் சந்தையில் சூதாடுவது, அதிகாரிகள் மந்திரிகளுக்கு பார்ட்டி வைத்து குளிப்பாட்டுவது போன்ற வேலைகளை, 'வேலைகள்' என்ற கணக்கில் சேர்க்க நாம் மறுக்கலாம். ஆனால் உலகம் முழுவதும் குறுக்கு நெடுக்காகப் பறந்து இப்படியான வேலைகளை முதலாளிகள் செய்கிறார்கள் என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது.**

முதலாளிகளின் கோரிக்கைகள் என்ன? விமானத்துக்கான பெட்ரோலின் விலையைப் பாதியாகக் குறைக்க வேண்டும். விமான நிலையங்களைப் பயன்படுத்துவதற்கு விதிக்கப்படும் கட்டணத்தையும் குறைக்க வேண்டும். நட்டத்தில் நடக்கும் தங்களது கம்பெனிகளைக் கைதூக்கி விட அரசாங்கம் நிதி உதவியும் செய்ய வேண்டும். இல்லையென்றால் வேலைநிறுத்தம். ''தனியார் விமானங்கள் பறக்காவிட்டால் அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை அரசாங்கத்துக்கும், பயணிகளுக்கும் நாங்கள் புரிய வைப்போம்'' என்றார் கிங் பிஷர் விமான கம்பெனியின் முதலாளியும் பிரபல சாராய ஆலை அதிபருமான விஜய் மல்லையா.

சோற்றுக்கில்லாத தொழிலாளியைக் காட்டிலும் ஆத்திரம் கொண்டு சீறுகின்றார் முத



படிப்பகம்

www.padippakam.com

லாளி மல்லையா. இந்த ஆண்டின் துவக்கம் முதலே பெரும்பான்மையான விமான கம்பெனிகள் நட்டத்தில் நடக்கின்றனவாம். 2009-இல் மட்டும் 10,000 கோடி ரூபாய் நட்டம் ஏற்படும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்களாம். அதனால்தான் இந்தக் கோபம். ‘கட்டுப்படியாகவில்லையென்றால் கம்பெனியை மூடிவிட்டுப் போக வேண்டியதுதானே’ என்று நீங்கள் எதார்த்தமாகக் கேட்கலாம்.

அதெல்லாம் சின்ன முதலாளிகளுக்குத்தான் பொருந்தும். நம் ஊர் கடை வீதியை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு மாதமும் நான்கைந்து கடைகள் திவாலாகி இழுத்து மூடப்படுகின்றன. அப்புறம் அந்த இடத்தில் புதிதாக யாராவது கடை திறக்கின்றார்கள். பிறகு நட்டப்பட்டு மூடுகிறார்கள். எந்தக் கடைக்காரரும் ‘என்னைக் கைதூக்கி விடு’ என்று அரசாங்கத்திடம் கேட்பதுமில்லை. அரசாங்கம் அப்படி யாரையும் கைதூக்கி விடுவதும் இல்லை. போட்டியைச் சமாளிக்க முடியவில்லை என்றோ, எதிர்பார்த்த அளவு வியாபாரம் ஓடவில்லை என்றோ, வாஸ்து சரியில்லை என்றோ ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி திவாலான கடைக்காரர்கள் தமக்குத்தாமே சமாதானமடைந்து கொள்கிறார்கள்; அவ்வளவுதான். இதெல்லாம் சின்ன முதலாளிகளின் தலையெழுத்து. ஆனால் நாட்டின் தலையெழுத்தையே தீர்மானிக்கும் பெரிய்ய முதலாளிகளுக்கு இந்த நியாயம் பொருந்துமா என்ன?

தொழிலாளிகளை எடுத்துக் கொள்ளுங்களேன். சம்பள உயர்வு கேட்டால், ‘‘இவ்வளவுதான் சம்பளம். இதற்கு மேல் கொடுக்க முடியாது. கட்டுப்படியாகாவிட்டால் வேலையை விட்டு நின்று கொள்’’ என்பதுதான் தொழிலாளிகளுக்கு முதலாளிகள் சொல்லும் பதில். ‘‘தொழிற்சங்கம், குறைந்தபட்ச ஊதியம், வேலை நிறுத்த உரிமை போன்றவையெல்லாம் இருப்பதனால்தான் நம்முடைய நாட்டில் தொழில் வளர்ச்சி தாமதப்படுவதாகவும், இதையெல்லாம் ஒழித்துக் கட்டும் வகையில் புதிய தொழிலாளர் கொள்கை உருவாக்கப்பட வேண்டும்’’ என்றும் நம்முடைய பிரதமர் மன்மோகன் சிங் தொடர்ந்து திருவாய் மலர்ந்து கொண்டிருக்கிறார். தொழிலாளிக்குப் பொருந்தும் இந்த நீதியெல்லாம் முதலாளிக்குப் பொருந்தாதா என்று நீங்கள் கேட்கலாம். முதலாளிக்கும் தொழிலாளிக்கும் ஒரே நீதியா, அதெப்படி?

கிங் பிஷர் விமான கம்பெனியும் மற்ற கம்பெனிகளும் பைலட்டுகள் முதல் பணியாட்கள் வரை தனது ஊழியர்கள் அனைவரின் சம்பளத்தையும் 20% அதிரடியாகக் குறைத்து விட்டன. ஜெட் ஏர்வேஸிலிருந்து தினந்தோறும் 50, 60 ஊழியர்கள் ஆட்குறைப்பு செய்யப்படுகின்றார்கள். தங்கள் விமானங்களுக்கு பெட்ரோல் போட்ட வகையில் கடந்த ஒரு ஆண்டாக இந்த விமான கம்பெனிகள் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு வைத்திருக்கும் கடன்




**இவர்கள் இஷ்டத்துக்கு விமானம் வாங்கிப் பறக்க விடுவார்களாம்; அந்த விமானங்களில் டிக்கெட் ஏற்றி ஃபுல்லாக்குவதற்கு, ‘டில்லி, மும்பய், கல்கத்தா..’ என்று முண்டாசு கட்டிக் கோண்டு அரசாங்கம் கூவ வேண்டுமாம். இல்லையென்றால், இவர்களுக்கு இலாபம் வருவதை உத்திரவாதம் செய்யும் வகையில், மக்களுடைய வரிப்பணத்திலிருந்து அரசாங்கம் மானியம் வழங்க வேண்டுமாம்.**

2225 கோடி ரூபாய். கடனுக்கு எண்ணெய் போட்டுப் போட்டு பணம் வராமல், ‘‘ஐயா, தவணை முறையிலாவது அடையுங்கள்’’ என்று கேட்டு அதுவும் நடக்காமல், வேறு வழியே இல்லாமல் கடைசியாக ‘‘இனிமேல் பணம் கொடுத்தால்தான் பெட்ரோல்’’ என்று அறிவித்து விட்டன பொதுத்துறை நிறுவனங்கள். மல்லையாவின் கோபத்துக்கு இதுவும் ஒரு காரணம்.

விமானப் பெட்ரோலின் விலையைப் பாதியாகக் குறைக்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. விமானப் பெட்ரோலின் இன்றைய விலை என்ன தெரியுமா? லிட்டர் 36 ரூபாய். அதாவது இரு சக்கர வாகனங்களுக்கு நாம் போடும் பெட்ரோலின் விலையை விட மலிவு. பெரும்பான்மை மக்கள் பயன்படுத்தும் பெட்ரோலுக்கும், டீசலுக்கும், மண்ணெண்ணெய்க்கும், எரிவாயுக்கும் மானியம் கொடுத்தே அழிந்து போவதாக அழுது கொண்டிருக்கும் அரசு, விமான கம்பெனிகளுக்கு வழங்கியிருக்கும் ‘மானியம்’ இது. நடப்பவனை விடப் பறப்பவனுக்கு அதிக மானியம் கொடுத்தால்தான் நாடு வேகமாக வல்லரசாகும் என்பது மன்மோகன் சிங் கொள்கை. முதலாளிகளுக்கோ இந்த மானியமும் போதாதாம். விமானப் பெட்ரோலின் விலையை 18 ரூபாயாகக் குறைக்க வேண்டுமாம்.

டீசல் விலை ஏறினால் உடனே பேருந்துக் கட்டணத்தை உயர்த்துகிறது அரசு. அதே போல விமான கட்டணத்தையும் முதலாளிகள் ஏற்றிக் கொள்ள வேண்டியதுதானே என்று நீங்கள் கேட்கலாம்.

‘‘பறக்கிற விமானங்களில் 100 க்கு 40 சீட்டுகள் காலியாகக் கிடக்கின்றன. இந்த இலட்சணத்தில் டிக்கெட் விலையை ஏற்றினால் அப்புறம் எவன் விமானத்தில் ஏறுவான்?’’ என்று எதிர்க் கேள்வி கேட்கிறார் ஜெட் ஏர்வேஸ் முதலாளி நரேஷ் கோயல்.

100 கிலோ தக்காளி வாங்கிக் கொண்டு வந்து கடை விரித்து, 40 கிலோ விற்காமல் அழுகிப் போனால் அந்த வியாபாரி அரசாங்கத்திடம் நிவாரணம் கேட்கிறாரா? வியாபாரம்னு வந்தா லாபமும் நட்டமும் சகஜம்தான் என்று அந்த நட்டத்தை அவர் சகித்துக் கொள்கிறார். ‘‘இந்த ரூட்டில் டிக்கெட் ஏறவில்லை. வண்டி ஃபுல் ஆகவில்லை. எனவே டீசல் விலையைக் குறைக்க வேண்டும்’’ என்று எந்த பஸ் முதலாளியாவது கேட்பதுண்டா? ஆனால் விமான கம்பெனி முதலாளிகள் இதைத்தான் கேட்கிறார்கள்.

இவர்கள் இஷ்டத்துக்கு விமானம் வாங்கிப் பறக்க விடுவார்களாம்; அந்த விமானங்களில் டிக்கெட் ஏற்றி ஃபுல்லாக்குவதற்கு, ‘டில்லி, மும்பய், கல்கத்தா..’ என்று முண்டாசு கட்டிக் கொண்டு அரசாங்கம் கூவ வேண்டுமாம். இல்லையென்றால், இவர்களுக்கு இலாபம் வருவதை உத்திரவாதம் செய்யும் வகையில், மக்களுடைய வரிப்பணத்திலிருந்து அரசாங்கம் மானியம் வழங்க வேண்டுமாம்.



படிப்பகம்

www.padippakam.com

‘‘இலாபமோ, நட்டமோ அதற்கு நான் பொறுப்பு என்று ‘ரிஸ்க்’ எடுத்து, முதல் போட்டுத் தொழில் நடத்துவதனால்தான் எங்களுக்குப் பெயர் - முதலாளி’’ என்று தொழிலாளி வர்க்கத்திடம் தெனாவெட்டாகப் பேசுகிறதே முதலாளி வர்க்கம், அதன் உண்மையான முக விலாசம் இதுதான்.

தனியார் முதலாளிகளின் இந்த வேலை நிறுத்த அறிவிப்பு ‘ஒரு பிளாக் மெயில் நடவடிக்கை’ என்று கூறி, இந்தப் பிரச்சினையின் பின்புலத்தை விளக்குகிறது ஏர் இந்தியா ஊழியர் சங்கம். இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் விமான சேவைகளை நடத்தி வந்த ஏர் இந்தியா நிறுவனத்தை தனியார்மய தாராளமயக் கொள்கைகள் மூலம் படிப்படியாக முடக்கி விட்டது இந்திய அரசு. இன்று இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் விமான சேவைகளில் 82%-ஐ பன்னாட்டு விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் கைப்பற்றி விட்டன. உள்நாட்டு விமான சேவையிலும் 80%-ஐ தனியார் நிறுவனங்கள் கட்டுப்படுத்துகின்றன. பயணிகள் வரத்து அதிகம் இல்லாத நகரங்களுக்கு தனியார் விமானங்கள் செல்வதில்லை. ஏர் இந்தியாதான் அத்தகைய நகரங்களுக்கு விமான சேவையை அளித்து வருகிறது.

இப்படி அரசாங்கத்தின் கொள்கைகளால் திட்டமிட்டே திவால் நிலைக்குத் தள்ளப்பட்டு, ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கக் கூட முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறது ஏர் இந்தியா நிறுவனம். நிறுவனத்தை இழுத்து மூடினால் அரசாங்கத்தின் யோக்கியதை அம்பலமாகி விடும் என்பதால், ஏர் இந்தியாவுக்கு கொஞ்சம் நிதி உதவி கொடுத்து கைதூக்கி விட முடிவு செய்திருக்கின்றது மன்மோகன் அரசு. ‘‘இந்த நிதி உதவியைத் தடுத்து, ஏர் இந்தியாவை இழுத்து மூட வைப்பதன் மூலம், உள்நாட்டு விமான சேவையில் தங்களுடைய முழு ஏகபோகத்தை நிறுவிக்கொள்ள வேண்டும் என்பதுதான் விமான கம்பெனி முதலாளிகள் அறிவித்திருக்கும் வேலை நிறுத்தத்தின் உண்மையான நோக்கம்’’ என்கிறார்கள் ஏர் இந்தியா ஊழியர்கள்.

‘‘ஏர் இந்தியாவுக்கு நிதி உதவி செய்து கைதூக்கி விடும் அரசாங்கம், தனியார் விமான கம்பெனிகளை மட்டும் கைதூக்கி விட மறுப்பது ஏன்?’’ என்று ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் ஆத்திரமாகக் கேள்வி எழுப்பினார் கிங் பிஷர் விமான கம்பெனியின் முதலாளி விஜய் மல்லையா. ‘‘உன் பெண்டாட்டிக்கு மட்டும் சேலை எடுத்துக் கொடுக்கிறாயே, என் பெண்டாட்டிக்கு ஏன் எடுத்துத் தரவில்லை?’’ என்பதைப் போன்ற கேள்வி இது.




விமான அமைச்சர் பிரஃபுல் பட்டேலுடன் விஜய் மல்லையா.

**‘‘ஏர் இந்தியாவுக்கு நிதி உதவி செய்து கைதூக்கி விடும் அரசாங்கம், தனியார் விமான கம்பெனிகளை மட்டும் கைதூக்கி விட மறுப்பது ஏன்?’’ என்று ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் ஆத்திரமாகக் கேள்வி எழுப்பினார் கிங் பிஷர் விமான கம்பெனியின் முதலாளி விஜய் மல்லையா. ‘‘உன் பெண்டாட்டிக்கு மட்டும் சேலை எடுத்துக் கொடுக்கிறாயே, என் பெண்டாட்டிக்கு ஏன் எடுத்துத் தரவில்லை?’’ என்பதைப் போன்ற கேள்வி இது.**

‘‘ஐயா, அது அரசாங்க நிறுவனம். அதில் இலாபம் வரும்போது அரசாங்கத்துக்குப் போகின்றது. எனவேதான் நட்டம் வரும்போது அரசாங்கம் உதவி செய்கின்றது. உங்கள் விமான கம்பெனி என்பது உங்களுடைய தனிப்பட்ட சொத்து. அதை எதற்கு அரசாங்கம் கைதூக்கி விட வேண்டும்? நீங்கள் இலாபம் சம்பாதிக்கும்போது அரசாங்கத்திடமா கொடுக்கின்றீர்கள்?’’ என்று தொலைக்காட்சி பேட்டியாளர் எதிர்க்கேள்வி எழுப்பியிருக்க வேண்டும். எழுப்பவில்லை. எழுப்பவும் மாட்டார்கள்.

‘‘விமான கம்பெனி முதலாளிகளின் பிரச்சினையை அரசாங்கம் புரிந்து கொண்டிருக்கின்றது. இருந்தாலும், இதற்கு வேலை நிறுத்தம் தீர்வல்ல’’ என்றார் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் பிரபுல் படேல். முதலாளிகளின் கஷ்டத்தைப் புரிந்து கொண்டு, கிங் ஃபிஷர் விமான கம்பெனிக்கு மேலும் 9 புதிய வெளிநாட்டுத் தடங்களில் சேவையைத் தொடங்க அனுமதி வழங்கி, ஏர் இந்தியாவை காவு கொடுத்திருக்கின்றது மத்திய அரசு.

இது மட்டுமல்ல, பெட்ரோல் பில் கட்ட முடியாத கிங் ஃபிஷர் நிறுவனத்துக்கு 500 கோடி ரூபாய் கடனும் கொடுத்திருக்கிறது பாரத ஸ்டேட் வங்கி. மற்ற முதலாளிகளுக்கு வேறு என்னென்ன திரை மறைவு உதவிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது இதுவரை வெளிவரவில்லை.

இப்படிப்பட்ட இரத்தக்காவுகள் கொடுக்கப்பட்ட பிறகு, ‘‘பொது மக்களுக்கு ஏற்படக் கூடிய சிரமத்தைக் கணக்கில் கொண்டு வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்கின்றோம்’’ என்று மலையேறியிருக்கிறது விமான கம்பெனி முதலாளிகள் சங்கம்.

முதலாளிகளின் இந்த வேலை நிறுத்த அறிவிப்பு முதலாளி வர்க்கத்தின் உண்மையான முகத்தை அம்பலமாக்கியிருப்பது மட்டுமின்றி, தனியார்மயக் கொள்கை தோற்றுவிக்கக் கூடிய அபாயத்தையும் முன் அறிவித்திருக்கிறது. தங்களுக்கிடையிலான போட்டியில், கொள்ளை இலாபம் பார்க்க வேண்டுமென்ற வெறியில், தேவைக்கு அதிகமான விமானங்களை வாங்கிப் பறக்க விட்டது அவர்கள் குற்றம். அதனால் ஏற்பட்டு வரும் நட்டத்தை மக்களுடைய வரிப்பணத்திலிருந்து அரசாங்கம் ஈடுகட்ட வேண்டும் என்று கோருகின்றார்கள் முதலாளிகள். ‘இலாபம் தனி



படிப்பகம்

www.padippakam.com

யுடைமை, நட்டம் பொதுவுடைமை' என்பதுதான் முதலாளிகள் கூறும் கோட்பாடு. இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் அமெரிக்காவின் ஜெனரல் மோட்டார்ஸ் முதல் ஏ.ஐ.ஜி இன்சூரன்சு, லே மான் பிரதர்ஸ், பாங்க் ஆப் அமெரிக்கா போன்ற திவாலான பன்னாட்டு கம்பெனிகளை அமெரிக்க அரசாங்கம் கைதூக்கி விட்டது. ''அதே மாதிரி நீயும் செய்'' என்று இந்திய அரசைக் கோருகிறார் மல்லையா.

இல்லையென்றால்? இல்லையென்றால் 80% விமான சேவையைக் கட்டுப்படுத்தும் தனியார் முதலாளிகள், நாட்டின் விமான போக்குவரத்தையே நிறுத்தி விடுவதாக மிரட்டுகின்றார்கள். 1992-இல் ஏர் இந்தியா விமானிகள் வேலை நிறுத்தம் செய்த போது அதையே முகாந்திரமாக வைத்து, விமான சேவையில் தனியார் முதலாளிகளை நுழைத்தது இந்திய அரசு. ஆனால் இப்போது தனியார் முதலாளிகளின் இந்த வேலை நிறுத்த மிரட்டலுக்குப் பின்னரும், விமான சேவையை அரசுடைமை ஆக்க வேண்டும் என்று அரசோ, ஊடகங்களோ முனுமுனுக்கக் கூட இல்லை. எண்ணெய், எரிவாயு, மின்சாரம், அணுசக்தி, வங்கி, காப்பீடு உள்ளிட்ட அனைத்தையும் தனியார்மயமாக்குவதில்தான் அரசு தீவிரம் காட்டுகின்றது. கேந்திரமான துறைகளை தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தாரை வார்ப்பதன் மூலம் இந்த வழிப்பறிக் கொள்ளையர்களுக்கு பிச்சுவாக் கத்திகளை விநியோகம் செய்கின்றது அரசு.

முதலாளிகளின் இந்த வேலை நிறுத்த அறிவிப்பில் தொழிலாளி வர்க்கம் கற்றுக் கொள்வதற்கும் ஒரு பாடம் இருக்கின்றது. பெட்ரோல் விலை ஏறினால் மண்ணெண்ணெயை ஊற்றி விமானத்தை ஓட்ட முடியாது. ஆனால் அரிசி விலை எறினால் ஒரு ரூபாய் அரிசிக்கு மாறிக் கொண்டு அதே உழைப்பை முதலாளிகளுக்கு வழங்குகிறார்கள் தொழிலாளர்கள். ''அரிசி விலையைக் குறை, பேருந்து கட்டணத்தைக் குறை, வீட்டு வாடகையைக் கட்டுப்படுத்து'' என்று தொழிற்சங்கங்கள் கேட்பதில்லை. விலைவாசி உயர்வால் கடன் பட்ட தொழிலாளர்கள் தங்களுக்கு மானியம் வழங்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்க நினைத்ததும் இல்லை. இதோ, முதலாளிகள் கேட்கிறார்கள். தொழிலாளி வர்க்கத்துக்குத்தான் கேட்கத் தெரியவில்லை.

● கதிர்



# ஜெர்மனி: நீதிமன்றத்தில் வெள்ளை நிறவெறியனால் கொல்லப்பட்ட முசுலீம் பெண்!

ஜெர்மனி, டிரெஸ்டென் நகரம். நீதிமன்றத்தில் வைத்து ஒரு எகிப்திய கர்ப்பிணிப் பெண்மணி, வெள்ளை நிறவெறியன் ஒருவனால் குத்திக் கொலை செய்யப் பட்டார். 16 கத்திக்குத்துகளை வாங்கி ஸ்தலத்திலேயே மரணமடைந்த மார்வா என்ற எகிப்தியப் பெண்ணும், கொலையாளியான அலெக்ஸ் என்ற ஜெர்மன் நபரும் அயலவர்கள். வெளிநாட்டவர் மீதான காழ்ப்புணர்ச்சி காரணமாக அலெக்ஸ், பூங்காவில் தன் 3 வயது மகனோடு பொழுதுபோக்கிக் கொண்டிருந்த 4 மாத கர்ப்பிணியான முக்காடு போட்டிருந்த மார்வாவைப் பார்த்து 'பயங்கரவாதி' என தூற்றியுள்ளார்.

மார்வா இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்ததால், இனவெறிப் பாகுபாட்டு குற்றச்சாட்டில் அலெக்சிற்கு அபராதம் விதிக்கப்பட்டது. அலெக்ஸ் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்தார். அப்போதும் நீதிமன்ற தீர்ப்பு அலெக்சிற்கு பாதகமாக அமைந்திருந்தது. விசாரணையின் போது, மார்வா சாட்சியமளித்திருந்தார். நீதிபதி தீர்ப்புக் கூறிய பின்னரே இந்தக் கொலை நடைபெற்றுள்ளது. அந்தக் கர்ப்பிணிப் பெண்ணின் மூன்று வயது மகனின் கண் முன்னால் இந்தக் கொடூர சம்பவம் நடைபெற்றுள்ளது. தாக்குதலில் இருந்து தனது மனைவியைப் பாதுகாக்க முயன்ற கணவனை, காவலில் நின்ற போலீஸ்காரர் சுட்டுக் காயப்படுத்தியுள்ளார். தாக்குபவர் யார் என்று தெரியாமல் தடுமாற்றத்தில் சுட்டு விட்டதாக, போலீஸ் பின்னர் விளக்கமளித்தது. இந்த சம்பவம் குறித்து ஜெர்மன் பத்திரிகையில் வந்த செய்தி.

இதுவரை காலமும் ஒரு மூன்றாம் உலக நாட்டில் மட்டுமே இது போன்ற நீதிமன்றக் கொலைகள் நடக்க வாய்ப்புண்டு, என்று பலர் நினைத்திருக்கலாம். பட்டப்பகலில், பலர் பார்த்திருக்கையில், அதுவும் நீதிமன்றத்தினுள் எப்படி இந்தக் கொலை நடக்கலாம்? என்று பலரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. 'நாகரீகமடைந்த மக்கள் வாழும்' ஐரோப்பிய நாடான ஜெர்மனியில், இசுலாமியர் மீதான வெறுப்பின் விளைவாக நடந்த இந்தக் கொலை, ஜெர்மனியில் அறிவு ஜீவிகள் மட்டத்தில் மட்டும் சிறு சலசலப்பை தோற்றுவித்துள்ளது. மற்றபடி, எந்த ஒரு ஐரோப்பிய ஊடகமும் இந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடவில்லை. சில நாளேடுகளில் இந்தச் செய்தி, உள்பக்கத்தில் ஒரு சிறு மூலையில் பிரசுரமாகி இருந்தது. ஒரு வேளை பலியானவர் ஒரு வெள்ளை இனத்தை சேர்ந்தவராக இருந்து, குத்திய கொலையாளி ஒரு இசுலாமிய எகிப்தியர் ஆக இருந்திருந்தால்? அனைத்து ஊடகங்களிலும் அதுவே அன்று முதன்

**இதுவரை காலமும் ஒரு மூன்றாம் உலக நாட்டில் மட்டுமே இது போன்ற நீதிமன்றக் கொலைகள் நடக்க வாய்ப்புண்டு, என்று பலர் நினைத்திருக்கலாம். பட்டப்பகலில், பலர் பார்த்திருக்கையில், அதுவும் நீதிமன்றத்தினுள் எப்படி இந்தக் கொலை நடக்கலாம்? என்று பலரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. 'நாகரீகமடைந்த மக்கள் வாழும்' ஐரோப்பிய நாடான ஜெர்மனியில், இசுலாமியர் மீதான வெறுப்பின் விளைவாக நடந்தது, இந்தக் கொலை.**



படிப்பகம்

www.padippakam.com



கொலை செய்யப்பட்ட மார்வா!

மைச் செய்தியாக இருந்திருக்கும். 'அல் கைதாவின் பயங்கரவாதத் தாக்குதல்' என்று சர்வதேச ஊடகங்களிலும் ஒரு சுற்று வந்திருக்கும். மேற்குலகில் இன வாதம் எப்படி நிறுவனமயப்பட்டுள்ளது என்பதற்கு, மேற்குறிப்பிட்ட செய்தி வழங்கல் நெறிமுறை ஒரு உதாரணம்.

ஜெர்மனியில் இனவெறிக்கு பலியான எகிப்தியப் பெண் மார்வாவின் மரணச் சடங்கு, அவரது சொந்த ஊரான அலெக்சாண்ட்ரியா நகரில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்த வந்திருந்தார்கள். எகிப்தியப் பத்திரிகைகள் 'ஹிஜாப்பிற்காக (முசுலிம் பெண்கள் தலையில் அணியும் முக்காடு) தியாக மரணத்தை தழுவிக்கொண்டவர்' என்று புகழாரம் சூட்டின. பல அரசியல் தலைவர்களும் மார்வாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டனர்.

ஐரோப்பாவில் அரபு மக்களின் நலனுக்காக பாடுபடும் AEL மட்டும் கண்டன அறிக்கையை வெளியிட்டது. அந்த அமைப்பின் தலைவர் அபு ஜாஜா ''ஐரோப்பாவில் வாழும் முஸ்லிம் மக்களையும், அவர்களது மதத்தையும் கிரிமினல் மயப்படுத்தியதன் விளைவு இது'' என்று தெரிவித்துள்ளார்.

இது இப்படியிருக்க, வட அயர்லாந்து தலைநகரமான பெல்பாஸ்டில் வாழும் அந்நியர்களை, குறிப்பாக இந்திய, முசுலிம், ரொமேனியா சமூகங்களைச் சேர்ந்தவர்களை உடனடியாக வெளியேற வேண்டுமென நிறவெறி அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது. Ulster Young Militants (UYM) என்ற, முன்னாள் புரட்டஸ்தாந்து தீவிரவாத அமைப்பான Ulster Defence Association-னின் இளைஞர் முன்னணி, வெளிநாட்டவரை விரட்டும் கைங்கரியத்தில் இறங்கியுள்ளது.

மார்வா கொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்.




இந்த அமைப்பின் தலைப்பின் கீழ் எழுதப்பட்ட கடிதங்கள், பெல்பாஸ்டில் வாழும் வெளிநாட்டவர் வீடுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. 'ஜூலை 12 -ஆம் திகதிக்கு முன்னர், வெள்ளையரல்லாத அந்நியர்கள் யாவரும் வட அயர்லாந்தை விட்டு வெளியேறி விட வேண்டும்' என்று அந்தக் கடிதத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது. ஜூலை 12-ஆம் திகதி, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களின் பண்டிகை தினம் என்பதும், Ulster Defence Association முன்னர் ஒரு காலத்தில் பிரிட்டிஷ் அரசால் நிர்வகிக்கப்பட்ட துணைப்படை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட செய்தி இந்திய செய்தி ஊடகங்களிலும் வந்திருந்தது. இருப்பினும் பாதிக்கப்பட்டவர்கள் இந்தியர் என்ற படியால் தான் விஷேச கவனம் செலுத்தி வெளியிட்டிருந்தன. ஏற்கனவே ஜூன் 17-ஆம் திகதிக்கு முன்னர், ரொமேனியர்களை வெளியேறும் படி கோரி இதே அமைப்பினால் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அவ்வாறு வெளியேறாத பட்சத்தில், அவர்களின் குழந்தைகள் கொல்லப்படுவார்கள் என்றும் பயமுறுத்தப்பட்டனர். ரொமேனியா குடும்பம் ஒன்றின் வீடு எரிக்கப்பட்ட சம்பவத்தின் பின்னர், பெல்பாஸ்டில் வசித்த அனைத்து ரொமேனியா குடும்பங்களும் தேவாலயங்களில் தஞ்சம் புகுந்தனர். பின்னர் அவர்கள் அங்கிருந்து அரசு செலவில், விமானம் மூலம் ரொமேனியா திருப்பி அனுப்பப்பட்டனர்.

**ஒரு வேளை பலியானவர் ஒரு வெள்ளை இனத்தை சேர்ந்தவராக இருந்து, குத்திய கொலையாளி ஒரு இசுலாமிய எகிப்தியர் ஆக இருந்திருந்தால்? அனைத்து ஊடகங்களிலும் அதுவே அன்று முதன்மைச் செய்தியாக இருந்திருக்கும். 'அல் கைதாவின் பயங்கரவாதத் தாக்குதல்' என்று சர்வதேச ஊடகங்களிலும் ஒரு சுற்று வந்திருக்கும்.**

ஜூலை 2-ஆம் திகதி, நிறவெறிக்கு எதிரான ஐரிஷ் பிரஜைகள், பெல்பாஸ்ட் நகரில் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இதன் மூலம் அனைத்து ஐரிஷ் மக்களும் நிறவெறியை ஆதரிப்பவர்கள் அல்ல எனக் காட்ட விரும்பினர். இந்த ஊர்வலத்தில் பேசிய தொழிற்சங்க தலைவர் ஒருவர், ''தொழிற்துறையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப வெளிநாட்டு தொழிலாளர்கள் அவசியம். ஐரிஷ் மக்களின் சமூகநலன் காப்புறுதிக்கு அவர்கள் பங்களிப்பு செலுத்துகின்றனர். இனப்பாகுபாடு காட்டுவோரைத் தண்டிக்கும் சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்'' என்று தெரிவித்தார்.

● **கலையரசன்**

**நன்றி:** http://kalaiy.blogspot.com



படிப்பகம்

www.padippakam.com

# அஹமதியா பிணத்தைக் கூட விட்டு வைக்காத இசுலாமிய மதவெறி!

இசுலாத்தில் ஒரு பிரிவான அஹமதியாக்கள் பஞ்சாப் மாநிலத்தில் தோன்றிய ஒரு இசுலாமியப் பிரிவினர். நபியின் தூதர்கள் மீண்டும் தோன்றுவார்கள் எனப் பல விசயத்தில் இவர்கள் மைய நீரோட்ட முசுலீம்களுடன் ஒன்றுபட மாட்டார்கள். ஓரிறைத் தத்துவம், ரமலான் நோன்பு, மெக்கா புனிதப் பயணம் என இப்படி ஒற்றுமைகள் இருந்தாலும் மற்ற முசுலீம்கள் இவர்களை ஏற்றுக் கொள்ளாததோடு வெறுத்து புறக்கணிக்கவும் செய்கின்றார்கள்.

சென்னை ஆதம்பாக்கத்தை சேர்ந்த நிசார் அஹம்மது என்பவரின் 36 வயது மனைவி மும்தாஜ் பேகம், தலைமையாசிரியையாகப் பணியாற்றியவர். மூளைக் காய்ச்சலில் பாதிக்கப்பட்டு சென்னை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். அவருடைய உறவினர்கள் உரிய அனுமதி பெற்று பீட்டர்ஸ் சாலையில் அமைந்துள்ள முசுலீம்களின் நல்லடக்க இடத்தில் மும்தாஜின் உடலைப் புதைத்திருக்கிறார்கள்.

இறந்து போனவர் அஹமதியா பிரிவைச் சேர்ந்தவர் என்பதால் சுன்னத் ஜமாஅத் ஐக்கிய பேரவை உள்ளிட்ட முசுலீம் அமைப்புகள் அங்கே உடலைப் புதைத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராடினர். தமிழக அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகம்மது அய்யூப்பின் கவனத்திற்கு இப்பிரச்சினை வந்தது. அவரது உத்திரவின் பெயரில் மும்தாஜின் உடல் தோண்டியெடுக்கப்பட்டு, கிருஷ்ணாம் பேட்டை சுடுகாட்டில் மறு அடக்கம் செய்யப்பட்டது.

இசுலாமிய நாடுகளில் ''நபிகளை ஏற்றுக்கொள்ளவில்லை, குரானைத் திருத்த முயன்றார்கள்'' என்றெல்லாம் கூறி அஹமதியா பிரிவினைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து பல விதமான அடக்குமுறைக்கு ஆளாகி வருகின்றார்கள். இவ்வகையில் பாகிஸ்தானில் சில அஹமதியாக்கள் அவ்வப்போது கொல்லப்படுவதும் உண்டு. மேலும் அந்நாட்டில் முசுலீம்கள் என்பதற்கு பதிலாக அவர்களைச் சிறுபான்மையினர் என்றே வகைப்படுத்துகிறார்கள். இந்தியாவிலும் மைய நீரோட்ட முசுலீம்கள் அனைவரும் அஹமதியா முசுலீம்களைத் தமது பகைவர்களாகத்தான் பார்க்கின்றார்கள்.

ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய நபிகளையும், குரானையும் இன்றும் மாற்றமின்றி ஏற்க வேண்டும் என்ற மூடநம்பிக்கை முசுலீம்களிடம் வலுவாக இருக்கின்றது. ஆனால் நடைமுறையில் இந்த நம்பிக்கைகளைக் கள்ளத்தனமாகவோ, பணக்காரனுக்காகவோ இவர்கள் மீறத்தான் செய்கின்றார்கள். இறுதியில் கடுமையான ஒழுக்கத்தின்பாற்பட்ட மதம் என்பது ஏழைகளுக்கும், நடுத்தர வர்க்கத்துக்கும் மட்டுமே ஓதப்படுகின்றது. மேலும் இசுலாமியப் பெண்கள் ஏதாவது சில சுதந்திரமாகத் தமது கருத்துக்களைத் தெரிவித்தால் மறுகணமே அவர்கள் மீது பாய்ந்து குதறுவதற்கும் தயாராக இருப்பார்கள் இசுலாமிய வெறியர்கள்.

இசுலாமிய மாற்றுப் பிரிவு ஒன்றினைச் சேர்ந்த பெண்ணின் உடலை புதைத்ததைக் கூடப் பொறுத்துக்கொள்ள முடியாத இந்த மதவெறியர்கள், அதைத் தோண்டியெடுத்து அனுப்பியிருக்கின்றார்கள் என்றால் அவர்களது கொலைவெறி மற்றும் மதவெறியை எவரும் புரிந்து கொள்ளலாம்.

இசுலாமிய அடிப்படைவாதம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் அளவுக்கு இந்தியாவில் பலமாக இல்லை. ஏனென்றால் இங்கே அது சிறுபான்மையினரின் மதம். மற்றபடி இந்து மதவெறியர்களுக்கும், இசுலாமிய மதவெறியர்களுக்கும் மதம் என்ற அளவில் பெரிய வேறுபாடில்லை.

நோய் வந்து இறந்த ஒரு பெண்ணை தமது மதத்தின் மாற்றுப் பிரிவினைச் சேர்ந்தவள் என்பதற்காகவே சகிக்க முடியவில்லை என்றால், இந்த முசுலீம் ஜமாஅத்துகள் மற்ற விசயங்களில் எவ்வளவு வக்கிரத்தோடு நடந்து கொள்ளும் என்பதை யூகித்துக் கொள்ளலாம். முக்கியமாக வரதட்சிணைக் கொடுமை வழியே பல ஆண்கள் தமது மனைவிகளைச் சுலபமாக விவாகரத்து செய்வதை இந்த ஜமா அத்துகள் சுலபமாக நிறைவேற்றுகின்றன. இதில் மட்டும் ஆணாதிக்கத்தின் தயவு காரணமாக மதக் கோட்பாடுகளெல்லாம் வீதியில் தூக்கி வீசப்படுகின்றன. எப்போதுமே வறியவர்களுக்கும், எளியவர்களுக்கும் மட்டும்தான் விதிக்கப்பட்டிருக்கின்றன போலும் மதக் கட்டுப்பாடுகள்.

இப்படிப் பெண்களையும், ஏழைகளையும் ஒடுக்கும் இசுலாமிய மதவெறியர்கள் சற்றே மேலோட்டமான சீர்திருத்தம் பேசும் அஹமதியாக்களை முழுமையாக வெறுப்பதற்கு வேறு சில காரணங்கள் இருக்கின்றது. அதன்படி நாளையே இவர்களது அதிகாரங்களும், வன்முறைகளும், துஷ்பிரயோகங்களும் செல்லுபடியாகாமல் போய் விடுமோ என்ற அச்சம் காரணமாக அஹமதியாக்களை துரோகிகள் போலச் சித்தரிக்கின்றார்கள்.

சமீபத்தில் தலித் சீக்கியர்கள் நிகழ்த்திய கலவரத்தைப் பார்த்தோமேயானால் அவர்களது சீக்கியக் குருக்களை ஆதிக்கசாதியின் சீக்கியக் குருக்கள் மதம் என்ற பெயராலேயே நிராகரித்தனர். இந்த ஆதிக்கசாதி வெறியர்கள், நாடு கடந்தும் தங்களது குருக்களைக் கொன்றதாலேயே பஞ்சாபில் பெரும் கலவரம் நடந்தது.

இசுலாத்திலும் இப்படி மதரீதியாக ஒடுக்கப்படும் பெண்களும், ஏழைகளும், அஹமதியாக்களும் ஒன்று சேர்ந்து மதவெறியர்களுக்கு எதிராக மக்களைத் திரட்டி போர்க்குணமிக்க முறையில் போராட்டங்களைத் துவக்க வேண்டும். அப்போதுதான் இசுலாமிய வெறியர்களை மக்கள் அரங்கில் வைத்துத் தண்டிக்க முடியும். மதத்தின் உள்ளேயே மாற்றுப் பிரிவினைச் சேர்ந்த ஒரு பெண்ணின் உடலை அடக்கம் செய்ததைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியாதென்றால், அது என்ன வெங்காய மதம்?

• இளநம்பி

**வங்கதேசம்: அஹமதியாக்களை எதிர்க்கும் இசுலாமிய மதவெறியர்கள்!**





படிப்பகம்

www.padippakam.com

### ஆஸ்திரேலியா: இந்திய மாணவர்கள் தாக்கப்படுதல்!

# மனுவாதிகளுக்கே மனுதர்மம் கற்பித்த உலகமயம்

'ஆஸ்திரேலியாவுக்கு கல்வி கற்க வர விரும்பும் இந்திய மாணவர்களுக்கு நான் சொல்லும் ஒரே அறிவுரை: இங்கே வர வேண்டாம். இங்கே வாழ்க்கை இல்லை.'

கடந்த மே மாத இறுதியில், ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் ஆஸ்திரேலிய இளைஞர்களால் கத்தியால் தாக்கப்பட்ட பல்ஜித் சிங் என்ற இந்திய மாணவர் மருத்துவமனைப் படுக்கையிலிருந்து கூறிய வார்த்தைகள் இவை. இந்திய ஆங்கில ஊடகங்களில் ஏறத்தாழ மூன்று வாரங்களுக்கு இக்காட்சி மீண்டும் மீண்டும் ஒளிபரப்பபட்டது. சவுரப் சர்மா என்ற இந்திய மாணவர் ஆஸ்திரேலிய திருட்டுக் கும்பலால் ஓடும் ரயிலில் சரமாரியாகத் தாக்கப்பட்டார்.

கண்காணிப்புக் கேமராவில் பதிவான இக்காட்சியும், பல்ஜித் சிங்கின் பரிதாபமான வேண்டுகோளும், சமூக விரோதக் கும்பலால் ஸ்க்ரூ டிரைவர் கொண்டு தாக்கப்பட்டு, கோமா நிலையில் படுக்கையில் கிடந்த ஸ்ரவண் குமார் தீர்த்தலா என்ற மாணவரின் மருத்துவமனைக் காட்சியும், 24 மணி நேரமும் இந்தியத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஆக்கிரமித்தன. பரிதாபமும், ஆவேசமும் சரிவிகிதத்தில் கலக்கப்பட்டு, நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட பின்னணி இசையோடு தொலைக்காட்சிகள் சாமியாடத் துவங்க, பரபரப்பு தொற்றிக் கொண்டது.

இந்திய மாணவர்கள் மீது அடுத்தடுத்து நடந்த ஆறு தாக்குதல்கள் மென்மேலும் உருவேற்றின. ஒரு இந்திய மாணவருடைய வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. மீண்டும் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார். பறவைக் காய்ச்சலை விட அதிவேகமாகப் பரவிய பரபரப்பு, ரிஷிமூலமான மெல்போர்னில் 3000-க்கும் மேற்பட்ட மாணவர்களின் ஆர்ப்பாட்டத்திற்கு வித்திட்டது. 'எங்களுக்கு நியாயம் வேண்டும்!', 'ஆஸ்திரேலிய இனவெறி ஒழிக!' என ஆவேச முழக்கங்கள் எழுப்பப்பட்டன.



மேட்டுக்குடி மாணவர்களுக்காக பொங்கி எழும் கிருஷ்ணா, மலேசியா, வளைகுடாவில் வதைபடும் இந்தியர்கள் பற்றி கவலைப்படமாட்டார்.

இந்தியப் பிரதமர் ஆஸ்திரேலியப் பிரதமருக்கு அவசரமாக தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஆஸ்திரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர், தாக்குதலில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு உடனடியாக வாக்குறுதி அளித்தார். ஆஸ்திரேலிய அரசு தாக்குதல்களைத் தடுக்க தனிப்படை அமைத்தது. அமிதாப் பச்சன் ஆஸ்திரேலியப் பல்கலைக் கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டத்தை நிராகரித்தார். அமீர் கான் கொதித்தார். டெல்லியில் திரண்ட சிவசேனா கட்சியினர் ஆஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரூட்டின் உருவப் படத்தை தீயிட்டுக் கொளுத்தி 'பரபரப்பூட்டினர்'. மூன்று வாரத்திற்குப் பிறகு, இனவெறி எதிர்ப்புக்கெதிரான இந்த மகாபாரத (அக்கப்) போர், 'போரடிக்கும்' என்ற ஒரே காரணத்திற்காக, துவக்கி வைத்த தொலைக்காட்சிகளாலேயே அறிவிப்பின்றி முடித்து வைக்கப்பட்டது. அப்படி என்னதான் ஆஸ்திரேலியாவில் நடந்தது என்கிறீர்களா, அதுதான் உலகமயம் மனுதர்மம் கற்பித்த கதை!

ஆஸ்திரேலிய அரசு தனது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பெருமிதமாகக் குறிப்பிடுகின்றது. 'ஆஸ்திரேலியா தனது கல்வி, பயிற்சி நிறுவனங்கள் குறித்து பெருமிதம் கொள்கிறது. கடந்த பத்தாண்டுகளில் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் எம்மிடம் கல்வி கற்றுள்ளனர். கடந்த சில ஆண்டுகளில், இந்திய மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. 2008 சேர்க்கை கணக்கின்படி 80,000 இந்திய மாணவர்கள் கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ளனர்.'

'உலகத் தரமான கல்வி, சுலபமாக நிரந்தரக் குடியுரிமை' என வெளிநாட்டு மாணவர்

**மலேசிய ஹோட்டல்களில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் ஐந்து நிமிட உணவு இடைவேளையில் உணவு உட்கொண்டு, ஒரே அறையில் நாற்பது பேராகத் தங்கி, அன்றாடம் 18 மணி நேரம் வேலை செய்கிறார்கள். முதலாளிகள் கடவுச் சீட்டைப் பறித்துக் கொள்கின்றனர். கொடுமை பொறுக்காது தப்பிக்க முயல்பவர்கள், சிறை பிடிக்கப்படுகின்றனர். சமீபத்திய புள்ளி விபரங்களின்படி மலேசியாவில் ஏழு முகாம்களில் ஏழாயிரம் தமிழர்கள் இவ்வாறு வதைபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

களை கவர்ந்திழுக்கும் ஆஸ்திரேலியாவில், ஆண்டுக்கு 12 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள பணம் புரளும் தொழிலாக கல்வி விளங்குகிறது. இந்திய மாணவர்களிடமிருந்து மட்டும் ஏறத்தாழ வருடம் 2 பில்லியன் டாலர்கள் வந்து சேர்கின்றது. உயர் கல்வி தொழில்நுட்பப் படிப்புகள்தான் என்றில்லாமல், குறைந்த செலவிலான கேட்டரிங் முதலான தொழில்சார் படிப்புகள் மூலம் கூட ஆஸ்திரேலிய சொர்க்கத்தில் கால் வைக்க வாய்ப்புகள் பெருகியதையொட்டி இந்திய உயர் வர்க்க, நடுத்தர வர்க்க மாணவர்கள் ஆஸ்திரேலியாவிற்கு படையெடுப்பது அதிகரித்த வண்ணமிருக்கிறது.

பல்கலைக்கழகங்களுக்கு அருகிலேயே தங்குவது அதிக செலவாகக் கூடியதென்பதால், இந்திய மாணவர்கள் பொதுவில் புறநகர்களில் தங்குகின்றனர். உணவகங்களில் பணி புரிவது முதலான பல்வேறு பகுதி நேர வேலைகளுக்கு இரவு நேரங்களில் கூடச் செல்கின்றனர். அகால நேரங்களில், பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்து வேலை செய்ய வேண்டிய சூழல் காரணமாக, இயல்பாகவே சமூக விரோதக் கும்பல்களுக்கு இரையாகின்றனர். ஏறத்தாழ திருடர்களுடைய கைவரிசைக்கு ஆளாவதில், மூன்றிலொரு பங்கு இந்தியர்களே என ஆஸ்திரேலியக் காவல்துறையே ஒத்துக் கொள்கிறது.

மற்றொருபுறம், இந்திய மாணவர்களுக்கு எதிரான ஆஸ்திரேலிய வெள்ளை இனவெறியும் அதிகரித்து வருகிறது. 2004-இல் ‘ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்கள் ஆஸ்திரேலியர்களுக்கே!’ என ஒரு வெளிப்படையான இனவெறிப் பிரச்சாரம் பல்கலைக் கழக வட்டாரங்களில் வலம் வந்தது. அங்கொன்றும், இங்கொன்றுமாக இனவெறி கொண்ட சமூக விரோதக் கும்பல்களும், விட்டேத்தியான போதை அடிமைகளும், தனித்துத் தெரியும் இந்தியர்களைத் தாக்கி வந்தனர். கொள்ளையடித்தனர். இந்நிலையில், மூன்று வார இடைவெளியில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் இந்திய ஊடகங்களின் கையில் காட்சி ஆதாரங்களோடு சிக்க, ஊடக மகாபாரதம் வெடித்தது.

‘சில குற்றங்கள் இனவெறி கொண்டவை. பல குற்றங்கள் சந்தர்ப்பவசமானவை. இந்திய மாணவர்கள் தவறான நேரத்தில் தவறான இடத்தில் சிக்கிக் கொண்டனர்’ என மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் விக்டோரியா மாகாண காவல்துறை தெரிவித்தது. ஆஸ்திரேலியப் பிரதமர் நாடாளுமன்றத்தில் கண்டனம் தெரிவித்தார். அதே வேளையில், இந்திய மாணவர்களின் கட்டுப்பாடற்ற நடத்தையும் ஒரு முக்கியக் காரணம் என ஆஸ்திரேலியா வாழ் இந்தியர்களே வலுவாக விமர்சனத்தை முன்வைத்தனர்.

பொதுவில் விலை உயர்ந்த செல்போன், கணிப்பொறிகளைப் பகட்டாக வைத்துக் கொள்வது, குடிபோதை ரகளைகள், பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொள்வது, பாலியல் குற்றங்களைப் புரிவது, குறிப்பாக பஞ்சாபி மாணவர்களின் கட்டுப்பாடற்ற கும்பல் நடத்தை, ஆரவாரம் ஆகியவை இனவெறியை மேலும் வளர்த்து விடுவதாக உள்ளது எனச் சுட்டிக் காட்டினர். மேலும் ஆஸ்திரேலிய இந்திய மாணவர்கள் சங்கமும் பல சமயங்களில் இந்தியர்கள் முதலான ஆசிய நாடுகளை சேர்ந்த குற்றவாளிகளும், இந்திய மாணவர்கள் மீதே தாக்குதல் தொடுப்பதை ஒத்துக் கொண்டது.

ஒட்டுமொத்தத்தில் இனவெறியே இல்லை என ஒரு பிரிவினர் கூறுவது விவரங்களிலிருந்தே ஏற்கத்தக்கதல்ல. மேலும், உலகப் பொருளாதார நெருக்கடியின் விளைவாக, ஆஸ்திரேலியப் பொருளாதாரம் தேங்கி நிற்கிறது. கடந்த ஓராண்டில் ஆட்குறைப்பு, ஆலை மூடல்கள் என வேலைவாய்ப்பின்மை 2 சதவீதம் அதிகரித்திருக்கின்றது. உள்ளூர நிரம்பியிருக்கும் ஆஸ்திரேலிய, வெள்ளையின வெறியும், சமூகக் குற்றங்கள் பெருகுவதற்கான நிலைமைகளும் இன வெறியை ஊட்டி வளர்க்கின்றன.

ஆனால், தமது சக மாணவர்கள் அராஜகத்திலும், குற்றங்களிலும் ஈடுபடும் பொழுது, தட்டிக் கேட்க முன்வராத இந்திய மாணவர்களும், அவர்களது திடீர் நண்பர்களான இந்திய ஊடகங்களும் ஆஸ்திரேலிய இனவெறிக்கெதிராக மட்டும் கூப்பாடு போடுவது ஏன்? பல்லாண்டுகளுக்கும் மேலாக ஆஸ்திரேலியாவில் டாக்சி ஓட்டுநர்களாக பணிபுரியும் இந்தியத் தொழிலாளிகள் இவ்வாறு இனவெறித் தாக்குதல்களுக்கு ஆளானபோது சற்றும் வெளிப்படாத தார்மீக ஆவேசம், தற்பொழுது மடை திறந்து பாய்வதேன்?

‘இரு நாட்டு மாணவர்களுக்கும் இடையே பயத்தையும், பரபரப்பையும் இந்தியாவின் 24 மணி நேர தொலைக்காட்சிகள் மீண்டும் மீண்டும் தூண்டி விட்டன’ என ஆஸ்திரேலியத் தூதுவர் ஜான் மெக்கார்த்தி நொந்து கொண்டது மிகையில்லை. ஆஸ்திரேலியா வாழ் இந்தியரான மருத்துவர் யது சிங், ‘இந்தியத் தலைவர்களும், ஊடகங்களும் அறிவுப்பூர்வமான முறையில் நிலைமையை ஆராயவில்லை’ எனக் கடுமையாக விமர்சித்தார். 24 மணி நேர தொலைக்காட்சி யுகத்தில் ஆராய்ச்சியாவது, அறிவாவது? செய்திகளை வாசித்துவிட்டுப் போக இது சரோஜ் நாராயணசாமி காலமல்ல. நூற்றுக்கணக்கான தொலைக்காட்சிகளுக்கு நடுவில், ரிமோட் கண்ட்ரோலை இயக்க விடாமல் செய்ய, வேறு சேனல்களில் பார்க்கக் கூடிய திரைப்படங்களையும் விஞ்சிய தாக, செய்திகள் விறுவிறுப்பாக இருக்க வேண்டும்.

மே இறுதி வாரத்தில் முதன்மையாக வலதுசாரிக் கருத்துக்களை வெறிக் கூச்சலிடும் டைம்ஸ் நவ் தொலைக்காட்சியும், முற்போக்கு வேடமிடும் சி.என்.என் ஐ.பி.என், என்.டி டி.வி முதலான ஆங்கிலத் தொலைக்காட்சிகளும் ஒரு கணம் அதிர்ச்சியூட்டக் கூடிய மேற்கூறிய



ஆஸ்திரேலிய இந்திய மாணவர்கள் ஆர்ப்பாட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

தாக்குதல்களின் காட்சிப் படங்களுடன் தமது ஆரவாரத்தைத் துவங்கினர். ஸ்க்ரூ டிரைவரால் தாக்கப்பட்டு, உயிருக்குப் போராடிய ஸ்ரவண் குமாரின் உறவினர் ஆஸ்திரேலியா செல்ல சி.என்.என் ஐ.பி.என். ஏற்பாடு செய்தது. அத்தொலைக்காட்சிக்கு ஸ்ரவண் குமாரின் குடும்பம் நன்றி செலுத்தும் படலம் ஒரு எபிசோடாக அரங்கேறியது.



மலேசியாவில் தமிழர்கள் பெறும் சவுக்கடி - இந்தியாவால் நிறுத்தப்படாத துயரம்.

தனது செய்தி விவாதத்திற்கு டைம்ஸ் நவ் தொலைக்காட்சி அளித்த தலைப்பு: இந்தியர்களைக் குறித்த அச்சம், உலக யதார்த்தமா? அடி வாங்கியதும், பயந்து போனதும் இந்தியர்கள், தலைப்பு முரணாக இருக்கிறதே என ஆச்சரியப்படாதீர்கள்! கருத்தையும், விவாதத்தின் முடிவையும் தெளிவாக அறிவித்து விட்டுத்தான் விவாதங்கள் கட்டியமைக்கப்படுகின்றன. 'இந்தியர்கள் ஜொலிக்கிறார்கள். அதிகப் பணம் கட்டிப் படிக்கிறார்கள். திறமைசாலிகளாகவும் இருக்கிறார்கள். அதனால்தான் ஆஸ்திரேலியர்களுக்கு கோபம் வருகிறது' என மேட்டுக்குடி அறிவுஜீவிகள் அடித்துச் சொன்னார்கள்.

காசிலிருந்தே நியாயத்திற்கான கோபம் பிறக்கும் மேல்தட்டு மனோபாவத்தின் தெளிவான உதாரணமாக செய்தி தொகுப்பாளர் அர்னாம் கோசுவாமி தனது திருவாய் மலர்ந்தருளினார். 'இந்தியப் பணம் வேண்டும், பாதுகாப்பு மட்டும் கொடுக்க முடியாதா?' எங்கேயோ கேட்ட குரலாக இல்லை, ஆம். இதே மேட்டுக்குடி கும்பல்தான் 'பாதுகாப்பு இல்லையேல், வரி இல்லை' என மும்பை தாக்குதலையொட்டி ஆவேசக் கூச்சலிட்டது. இதன் தாத்பர்யம் என்னவென்றால், வரி கட்டாதவர்களுக்கு பாதுகாப்புத் தேவையில்லை என்பதுதான்.

ஆஸ்திரேலிய வர்த்தக அமைச்சர் சிமன் கெரியன் இந்திய வர்த்தக அமைச்சரிடம் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் இந்திய மாணவர்களின் வரத்தைத் தடுத்து விடும் எனத் தமது கவலையை வெளியிட்டார். 'பொருளின் தரம் மட்டுமல்ல, பாதுகாப்பான சூழலும் தான் மாணவர்களை ஈர்க்கும்!' என்றார். என்ன ஒரு கச்சிதமான பதில்! மாநகராட்சிப் பள்ளிகளில் தமது குழந்தைகளைப் படிக்க வைக்கக் கூடிய பெற்றோர் கேட்க முடியாத கேள்வியும், பெற முடியாத பதிலும் இங்கே சர்வதேச உள்ளடக்கத்தில் வெளிப்படுகின்றன.

இனவெறி, இனவெறிக்கான காரணங்கள், தமது தரப்பில் ஏதேனும் தவறு இருக்கிறதா என்பதான குறைந்தபட்ச பரிசீலனை என எதுவும் கிடையாது. 'காசு கட்டினோம்லடா' என ஆணவம் பொங்கி வழிய நியாயம் பேசுகிறது பணக் கொழுப்பு. எனவே, சாதாரண இந்திய டாக்சி டிரைவர்கள் அதே ஆஸ்திரேலியாவில், சொல்லப்படும் இதே இனவெறியால் தாக்கப்படுவதைப் பற்றி கண்ணியமான கனவான்கள் எதற்காகக் கவலைப்பட வேண்டும்? அவர்கள் என்ன ஆஸ்திரேலிய அரசுக்கு காசா கட்டியிருக்கிறார்கள்?

நிலத்தை விற்று, ஆடு மாடுகளை விற்று, வீட்டை விற்று, கந்து வட்டிக்கு கடன் வாங்கி எப்படியேனும் பெரும் பணம் சம்பாதித்து வறுமையிலிருந்து தப்பித்து விடலாம் என்ற கனவுகளோடு, சவுதி, துபாய் முதலான அரேபிய நாடுகளுக்கும், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் கிராமப்புற விவசாய இளைஞர்கள் பிழைப்பு தேடிப் பயணிக்கிறார்கள். பலர் மொத்தப் பணத்தையும் இழந்து ஏமாறுகிறார்கள். மற்றவர்களோ குடும்பத்தைப் பிரிந்து, கொத்தடிமைகளாக உழன்று பிணமாகத் திரும்புகிறார்கள்.

மலேசிய ஹோட்டல்களில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் ஐந்து நிமிட உணவு இடைவேளையில் உணவு உட்கொண்டு, ஒரே அறையில் நாற்பது பேராகத் தங்கி, அன்றாடம் 18 மணி நேரம் வேலை செய்கிறார்கள். முதலாளிகள் கடவுச் சீட்டைப் பறித்துக் கொள்கின்றனர். கொடுமை பொறுக்காது தப்பிக்க முயல்பவர்கள், சிறை பிடிக்கப்படுகின்றனர். சமீபத்திய புள்ளி விபரங்களின்படி மலேசியாவில் ஏழு முகாம்களில் ஏழாயிரம் தமிழர்கள் இவ்வாறு வதைபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நர்ஸ் வேலை, வீட்டு வேலை என அழைத்துச் செல்லப்பட்டு ஆயிரக்கணக்கான பெண்கள் விபச்சார விடுதிகளில் விற்கப்பட்டுள்ளனர். சமீபத்தில் துபாயில் தேசியப் பிரிவினைகளைக் கடந்து பல நூறு தொழிலாளிகள் கொத்தடிமை முறைக்கு எதிராகப் போராடியதற்காக கொடூரமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். நுனிநாக்கு ஆங்கிலத்தில் தங்களது அவலங்களைச் சொல்லத் தெரியாததுதான் அந்தத்

**''சரி. எதிர்ப்பு தெரிவித்தாகி விட்டது. அத்தோடு முடித்துக் கொள்ள வேண்டும். ரொம்பவும் துள்ளுவது ஆபத்து. இந்தியாவில் நிலவும் தீண்டாமையை நிறவெறிக் குற்றத்தின் கீழ் பட்டியலிட வேண்டுமென்று ஐ.நா வில் முன்பு சிலநாடுகள் முயற்சித்தன. அன்று நல்லவேளையாக நம்முடைய சிறந்த சட்ட வல்லுநர்கள் அங்கே இருந்தார்கள். தீண்டாமை நிறவெறிக் குற்றம் ஆகாது என்று வாதாடி நிறுவினார்கள். இல்லையேல் நாம் சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் வந்திருப்போம்.**



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளிகள் செய்த பிழையோ? அல்லது இத்தொழிலாளிகள், ‘அச்சப்படத்தக்க அளவுக்கு ஜொலித்துக் கொண்டிருக்கிற’ இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என உரிமை கொண்டாடத் தகுதியற்றவர்களோ?

ஆம், இது இந்தியக் குடிமக்கள் சார்ந்த பிரச்சினையல்ல. உலகமயத்தின் உயர் குடிமக்கள் குறித்த பிரச்சினை. உலகமய சொர்க்கத்தின் உயர்குடி மக்களோடு ஒன்றாக வாழ விரும்புகிற இந்தியாவின் உயர்குடி மக்கள், சொர்க்கத்தில் தாங்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் என நிராகரிக்கப்படும் பொழுது, அதிர்ச்சியோடும், மூர்க்கத்தோடும் எதிர்கொள்வது குறித்த பிரச்சினை. சொந்த நாட்டுப் பண்ணையார்த்தனம் வெளிநாட்டில் செல்லுபடியாகததால் வரும் ஆவேசம் குறித்த பிரச்சினை. உலகமயத்தின் அனைத்துச் செல்வங்களையும் அனுபவிக்க தகுதியும், திறமையும், உரிமையும் பெற்ற தங்களையா இப்படி நடத்துவது எனக் கொதிக்கும் உலகமய இந்தியர்கள் தங்கள் இருப்பை ஆவேசத்தோடு நிறுவ முயலும் வெட்கமற்ற, அருவெறுக்கத்தக்க பிரயாசை குறித்த பிரச்சினை.

இத்தாக்குதல்களையொட்டி, ‘இந்தியர்களின் வளர்ச்சியை வளர்ந்த நாடுகள் ஏற்றுப் பழகிக் கொள்வதற்கான காலம் வந்து விட்டது’ என்ற மேலாண்மை நிபுணர் அரிந்தாம் சௌத்ரி அகந்தையோடு அறுதியிடுவதிலும், ‘உலகமயம் குறித்து எத்துனை பீற்றிக் கொண்டாலும், நாம் உலமயமான சமூகமாக மாறவில்லை. உலகமயமாக்கப்பட்ட சந்தை மட்டும் போதாது, உலகமயமான கிராமமாகவும் அது இருக்க வேண்டும்’ என அமெரிக்காவில் வாழும் ஒரு இந்தியக் கனவான் தமது பதிவில் உருகுவதிலும், வெளிப்படுத்துவது வேறென்ன?

இத்தகைய உலகமய இந்தியர்களின் அதிதீவிரக் கலாச்சாரப் படைகளாக, கருத்துருவாக்கத் தூண்களாகத்தான் வட இந்திய ஊடகங்கள் செயல்படுகின்றன. ஷில்பா ஷெட்டி விவகாரம் தொடங்கி, ஹர்பஜன் சிங் விவகாரம் தொட்டு, மேலை நாட்டு விமானங்களில் இந்தியர்களிடம் பாகுபாடு என ‘இனவெறிக்கு எதிராக’ப் போராடும் இந்த யோக்கிய சிகாமணிகளின் உண்மையான யோக்கியதை என்ன? சி.என்.என். ஐ.பி.என். தனது செய்தி விவாத நிகழ்ச்சிக்கு வைத்த தலைப்பு: இன்னுமா ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் ‘வெள்ளையர்கள் மட்டும்’ மனப்பான்மையில் வாழ்கின்றன? இன்னுமா என்றால், அப்படியென்ன உலகம் அடியோடு மாறியா போய் விட்டது?

இந்த நாட்டில் இன்னும் தலையில் பீ சுமந்து மக்கள் வாழ்கிறார்கள். செருப்பு தைப்பதற்காக ஒரு சாதி இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களது பிணங்களைப் புதைக்கக் கூட சுடுகாடு இல்லை. கோவில்களில் நுழைந்தால் கொலை செய்யப்படுகிறார்கள். கயர்லாஞ்சி போன்று குடும்பத்தோடு கொலை செய்ய பஞ்சாயத்துக்கள் தீர்ப்பு சொல்கின்றன. சாதி மட்டும்தானா, ‘எல்லா வட இந்தியர்களும் (உ.பி, பீகார் மாநிலத்தைச் சேர்ந்த உழைக்கும் மக்கள்) மகாராஷ்டிராவிற்கு பிழைக்க வரும் போதே, உள்ளூர் மக்களை ஒடுக்கும் நோக்கத்தோடுதான் வருகிறார்கள்’ எனப் பகிரங்கமாக கொக்கரித்து, பரிதாபத்துக்குரிய உ.பி டாக்சி டிரைவர்களை அடித்து துவைக்க காரணமாக இருந்த ராஜ் தாக்கரே இன்னும் இந்த நாட்டில்தான் இருக்கிறான்.

மூவாயிரத்துக்கும் மேற்பட்ட இசுலாமிய மக்களை, பச்சிளம் குழந்தைகளைக் கூட விட்டு வைக்காமல், மூன்றே நாட்களில் கொன்று குவித்து, பிணங்களின் மீதேறிப் பவனி வரும் நரேந்திர மோடி இன்னும் இந்த நாட்டில்தான் இருக்கிறான். சாதி, இனம், மொழி, பால் எனக் கால் செருப்பை விடக் கேவலமாகப் பல்வேறு மக்கள் பிரிவினரை இவர்கள் நசுக்கி ஒடுக்கும் போது, இரண்டாயிரம் ஆண்டுகளாக இன்னும் ‘உயர் சாதியினர்’ மட்டும் என்ற மனப்பான்மையில் மிதந்து திரியும் போது, இவர்களை மட்டும் ஆஸ்திரேலிய வெள்ளையன் சமமாக நடத்த வேண்டுமாம்!

ஆஸ்திரேலிய இனவெறிக்கு எதிரான இவர்களது சாமியாட்டம் உச்சத்தில் இருந்தபோது, டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேட்டில் ஒரு கட்டுரையாளர் கீழ்க்கண்டவாறு எழுதினார். ‘‘சரி. எதிர்ப்பு தெரிவித்தாகி விட்டது. அத்தோடு முடித்துக் கொள்ள வேண்டும். ரொம்பவும் துள்ளுவது ஆபத்து. இந்தியாவில் நிலவும் தீண்டாமையை நிறவெறிக் குற்றத்தின் கீழ் பட்டியலிட வேண்டுமென்று ஐ.நா வில் முன்பு சிலநாடுகள் முயற்சித்தன. அன்று நல்லவேளையாக நம்முடைய சிறந்த சட்ட வல்லுநர்கள் அங்கே இருந்தார்கள். தீண்டாமை நிறவெறிக் குற்றம் ஆகாது என்று வாதாடி நிறுவினார்கள். இல்லையேல் நாம் சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் வந்திருப்போம். நாலையும் யோசித்துப் பார்த்து முடித்துக் கொள்ளுங்கள்’’ என்று அறிவுரை கூறியிருந்தார்.

‘‘எனக்கு மேலே உள்ளவன் கையால் நான் செருப்படி பட்டாலும் பரவாயில்லை, எனக்குக் கீழே உள்ளவனை மிதிக்கும் உரிமை வேண்டும்’’ என்று கருதும் இந்த மனோபாவத்தை என்னவென்று அழைப்பது? மனுதர்மம் மனோபாவமா, அல்லது பிராந்திய வல்லரசு மனோபாவமா?

ஒரு ஆண்டுக்கு முன்பு, இதே ஆஸ்திரேலியாவில் ஒரு நூற்றாண்டுக் காலம் அந்நாட்டின் பூர்வீகக் குடிகளை இனவெறி கொண்டு ஒடுக்கியதற்காகப் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார் கெவின் ரூட். இரண்டாயிரமாண்டு ஆதிக்க வெறிக்கு அயோக்கியர்களே, கேவலம் ஒரு சடங்குத்தனமான மன்னிப்பேனும் நீங்கள் இதுவரை கேட்டதுண்டா?

• வாணன்





ஏகாதிபத்தியக் கையாள் காந்தி-காங்கிரசை அம்பலமாக்கும்.....

**காந்தியும் காங்கிரசும் - ஒரு துரோக வரலாறு**

■ பக்: 48 ■ விலை: ரூ. 15.00

**இன்று,** ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமையை இரத்தத்தில் மூழ்கடித்து மேலாதிக்க வெறியில் மிதக்கிறது இந்திய அரசு - காங்கிரசு. **அன்று,** இந்திய மக்களின் சுதந்திர வேட்கையைக் காட்டிக் கொடுத்தும், கைராட்டையால் நசுக்கியும் காவு வாங்கியது காந்தியும் - காங்கிரசும். ஆகஸ்டு போலிச் சுதந்திரத்தின் பூர்வீக வண்டவாளங்களை, வக்கிரங்களை ஆதாரங்களுடன் விவரிக்கிறது இச்சிறு நூல்.

அஞ்சலில் நூல் வேண்டுவோர், நூலின் விலையுடன் ரூ. 25.00 சேர்த்து பணவிடை செய்க.

**கீழைக்காற்று வெளியீட்டகம்**

**10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை – 600 002.**

**தொலைபேசி: 044–28412367**




படிப்பகம்

www.padippakam.com



# மைக்கேல் ஜாக்சன்: மரணத்தைப் பரிசாகப் பெற்ற முதலாளித்துவக் கலைஞன்!

**மறைந்தவர் மீண்டும் எழுந்தார்**

**சி**ல ஆண்டுகளாகவே ஊடகங்கள் மறந்து போன மைக்கேல் ஜாக்சன், இறந்த பிறகு மீண்டும் செய்திகளில் உயிர்த்து எழுந்திருக்கிறார். நெல்சன் மண்டேலாவிலிருந்து வெனிசூலாவின் சாவேஸ் வரை பல அரசியல் தலைவர்கள் அஞ்சலி செலுத்த, மடோனாவும் இன்ன பிற இசையுலக நட்சத்திரங்களும் தமது சகாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க, பிலிப்பைன்சின் சிறையிலிருக்கும் கைதிகள் திரில்லர் பாடலை நடனத்துடன் ஆடி சிறை வளாகத்திலிருந்தே மைக்கேல் ஜாக்சனுக்கு இரங்கல் தெரிவிக்க, மைக்கேலின் இறுதி அடக்கத்திற்கு முன்னர் லாஸ் ஏஞ்செல்சில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் கருப்பின, வெள்ளையின பொழுதுபோக்கு, விளையாட்டு நட்சத்திரங்கள் மைக்கேலுடனான தங்கள் உறவை நினைவு கூர, மார்ட்டின் லூதர் கிங்கின் வாரிசுகளும் கருப்பின உலகிலிருந்து மலர்ந்த அந்தக் கலைஞனை போற்றிப் பேச இறுதியில் மைக்கேல் ஜாக்சனின் நினைவுகள் அவரது பல இலட்சம் ரசிகர்களின் அனுதாபத்தோடு இப்போதைக்கு விடைபெற்றுக் கொண்டன.

வதந்திகள் ஒருபுறமிருக்க, அவரது மரணம் சுமூகமாகவோ, இயல்பாகவோ நிகழவில்லை. ஜாக்சன் எனும் இசை நரம்பின் மீட்டலில், சொரிந்த டாலரின் ஓசையையே இசையாய் ஆராதித்த, கார்ப்பரேட் நிறுவனங்கள் சற்றே அழுத்திச் சுண்டியதில் அந்த இசை நரம்பு அறுந்து விட்டது. இறுதி ஆண்டுகளில் வெளியான மைக்கேல் ஜாக்சனின் எல்லாப் புகைப் படங்களிலும் ஒரு துயரம் நிழலாடியது.

90-களின் பிற்பகுதியிலேயே ஜாக்சனின் நட்சத்திர அந்தஸ்து மரித்து விட்டது. 2000-ஆம் ஆண்டுகளில் அவர் மீது தொடுக்கப்பட்ட சிறார் மீதான பாலியல் வன்முறை வழக்குகளை பத்திரிகைகள் காசாக்கிக் கொண்டன. நட்சத்திர வாழ்க்கைக்காக அவர் உருவாக்கியிருந்த நெவர்லாண்ட் பண்ணை வீட்டை பராமரிக்க முடியாமல் காலி செய்து வாடகை பங்களா ஒன்றில் குடியேறினார்.

அவரது இறங்குமுகக் காலத்தில் நடந்த இரண்டு திருமணங்களும் ஓரிரு ஆண்டுகளிலேயே முடிவுக்கு வந்தன. கூடவே பெரும் கடன். வாழ்ந்து கெட்ட நாயகனுக்குரிய எல்லாவகைத் துன்பங்களும் இறுதிக் காலத்தில் அவரை கட்டிப் போட்டிருந்தன. அவரே வரவழைத்துக் கொண்டவையும், தானாக வந்தவையுமான நோய்கள் மிச்சமிருந்த நிம்மதியை ஒழித்தன. எடை குறைந்து, எலும்பு மனிதனாகக் காட்சியளித்த மைக்கேல் இத்தனை நாள் நீடித்ததே பெரிது எனுமளவுக்கு அவரது வாழ்வு முடங்கிப் போனது.

உடல் நலிந்து, புகழ் மங்கி ஒடுங்கிக் கிடந்த ஜாக்சனை வைத்து ஒரு வந்தனோபசாரக் கடைசி ஆட்டம் நடத்தி வசூலை அள்ளலாம் என்பது சோனி நிறுவனத்தின் திட்டம். ஜாக்சனைப் பொருத்தவரை கடன் சுமையிலிருந்து மீள்வதற்கு அது ஒரு கடைசி வாய்ப்பு. அறிவிப்பு வெளியானவுடனே டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்து விட்டன. இளம் ஜாக்சனின் வேகத்தையும் துள்ளலையும் காட்டி சோனி காசை வசூலித்துவிட்டது. 50 வயதில் அந்த அதிவேக ஆட்டத்தை 50 மேடைகளில் நடத்த ஒப்புக் கொண்டு, ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுவிட்ட ஜாக்சன், பீதியில் நடுங்கிய வண்ணம் இருந்திருக்கிறார்.

நிகழ்ச்சிக்காக நீண்ட ஒத்திகைப் பயிற்சியில் மைக்கேல் ஈடுபட்டிருந்தார், இல்லை இழுத்து விடப்பட்டிருந்தார். இந்த நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பேற்றிருந்த சோனி நிறுவனம் மைக்கேலின் உடல்நிலையைக் ‘கவனித்துக் கொள்ள’, அதாவது நிகழ்ச்சிக்கு அவரது உடலைத் தயார் செய்ய, தனியாக ஒரு மருத்துவரையே நியமித்திருந்தது. பயிற்சி தோற்றுவிக்கும் வலியைத் தாங்கிக்கொள்ள அந்த மருத்துவர் தொடர்ந்து வலி நிவாரணிகளை கொடுத்து வந்தார். அசையும் உடலால் ரசிகர்களை வசீகரித்து வந்த நாயகன் கடந்த சில ஆண்டுகளாகவே உடலின் வலியைப் பொறுக்க முடியாமல் மருந்துகளைத்தான் அதிகம் நாடி வந்தார்.

ஐம்பது நிகழ்ச்சிகளையும் முடித்த பிறகு வேண்டுமானால் அவர் செத்துப் போகலாம் என்ற அளவுக்கு நிகழ்ச்சி நடத்த வேண்டிய ஆயுள் கைதியாக அவதிப்பட்ட மைக்கேல் ஜாக்சன் தனது ஒத்திகை ஒன்றிற்குப் பிறகு திடீரென்று இறந்து போனார். உடனடிப் பிரேத பரிசோதனையின் படி அவர் உடலில் ஊசிகள் போடப்படாத இடமேயில்லை; வெறும் வயிற்றில் மாத்திரைகள் இருந்தன, ஐம்பது கிலோ எடையில் வற்றியிருந்த ஜாக்சனின் விலா எலும்புகள் சில முறிந்திருந்தன; விக் அகற்றப்பட்ட வழுக்கைத் தலையில் மைக்கேல் தனது பிம்பத்திற்கு எதிரான முறையில் பரிதாபமாக இருந்தார்.

இன்னும் வீரிய வேதியியல் பரிசோதனைகளின் முடிவுகள் சில காலம் கழித்துத்தான் வருமாம். இருக்கட்டும், மைக்கேல் ஜாக்சன் தானாக இறந்து போனாரா, இல்லை கொல்லப்பட்டாரா, அவரைக் கொன்றது யார் என்ற பிரதேசப் பரிசோதனையில் நாம் இறங்குவோம்.

**ஜாக்சனின் காலம்!**

60-களின் பிற்பகுதி. அது கலகத்தின் காலம். அமெரிக்காவின் வியட்நாம் ஆக்கிரமிப்புப் போருக்கு எதிராக உலகெங்கும் நடைபெற்ற போராட்டங்கள், அன்றாடம் வந்திறங்கிய அமெரிக்க வீரர்



படிப்பகம்

www.padippakam.com

**ஜாக்சன் எனும் இசை நரம்பின் மீட்டலில், சொரிந்த டாலரின் ஓசையையே இசையாய் ஆராதித்த, கார்ப்பரேட் நிறுவனங்கள் சற்றே அழுத்திச் சுண்டியதில் அந்த இசை நரம்பு அறுந்து விட்டது. இறுதி ஆண்டுகளில் வெளியான மைக்கேல் ஜாக்சனின் எல்லாப் புகைப்படங்களிலும் ஒரு துயரம் நிழலாடியது.**

களின் சவப்பெட்டிகள், கட்டாய இராணுவச் சேவைக்கு எதிரான அமெரிக்க மாணவர்களின் போராட்டங்கள், சேகுவேராவின் பொலிவிய மரணம், பாரிஸ் மாணவர் எழுச்சி, அமெரிக்காவில் நிறவெறிக்கு எதிராக நடைபெற்ற சிவில் உரிமை எழுச்சிகள்.. இந்தச் சூழலின் தடயம் கூடப் பதியாமல், தீவிரமான இசைப்பயிற்சியில் ஜாக்சன் சகோதரர்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார் அவர்களது தந்தை.

அந்நேரம் அமெரிக்காவில் வளர்ந்து வந்த பொதுமக்களின் இசை என்றழைக்கப்படும் பாப்பிசை மெல்ல ஒரு உலகச் சந்தையை உருவாக்கிக்கொண்டிருந்தது. பீட்டில்ஸ், போனியம், அப்பா முதலிய குழுக்கள் உலக அளவில் புகழ் பெற்றிருந்தன. பீட்டில்ஸ் இசை நிகழ்ச்சிகளுக்கு இலட்சக்கணக்கில் மக்கள் அணிதிரண்டு வந்ததோடு, பாடல் நடனத்தோடு சேர்ந்து உணர்ச்சிகரமாக ஒன்றுவது என்ற அளவில் பாப்பிசைக் கலாச்சாரம் ஒரு புதிய மதத்தை இளையோரின் மனதில் விருட்சமாக வளர்த்து வந்தது. அமெரிக்கா உருவாக்கி வந்த இசை மதத்தின் புதிய அப்போஸ்தலர்களாகத் தனது பிள்ளைகளை உருவாக்க வேண்டுமென ஜாக்சனின் தந்தை விரும்பினார் போலும்!

### கருப்பின மக்களின் போராட்டச் சூழலில் ஜாக்சனின் இளமைப் பருவம்!

கருப்பின மக்களின் சமத்துவ உரிமைகளுக்கான சிவில் இயக்கம் தீவிரமாகச் செயல்பட்ட அக்காலத்தில் வறுமையிலும், வாய்ப்பின்மையிலும் ஏழைகளாய் இருந்த கருப்பின மக்கள் இத்தகைய கண்டிப்பான தந்தை, கட்டுப்பாடான குடும்பம் முதலிய பழைய மரபுகளைக் கொண்டிருந்ததோடு, உழைத்து முன்னேற வேண்டுமென்ற வகையில் நடுத்தரவர்க்கத்தின் பண்பினையும் கொண்டிருந்தார்கள். ஏழ்மை நிலையை மாற்ற இயலாதவர்கள், அதை மாற்றிக் கொண்டு நடுத்தரவர்க்கமானவர்கள் என்ற வகையினங்களில் கருப்பின மக்கள் பிரிந்திருந்தனர்.

1969-இல் ஜாக்சன் சகோதரர்களால் வெளியிடப்பட்ட 'தி ஜாக்சன் ஃபைவ்' பலரது கவனத்தைப் பெற்றது. அப்போது பதினொரு வயதான மைக்கேல் மற்றவர்கள் குறிப்பிட்டுப் பாராட்டும் வகையில் தனது பங்களிப்பினைச் செய்திருந்தான். இதன் நீட்சியாக 1979-இல் மைக்கேல் ஜாக்சனது 'ஆஃப் தி வால்' என்ற முதல் தனி ஆல்பம் வெளியாகி விற்பனையில் சாதனை படைத்தது. 21 வயதில் அவர் நட்சத்திரமாக உதித்தார்.

மைக்கேலின் இசையும் நடனமும் புத்தாக்க உணர்வுடன் மெருகேறி வளர்ந்த அதே காலத்தில், அவரது நட்சத்திர வாழ்க்கைக்கான பண்புகளும் சேர்ந்தே வளர்ந்தன. இசைத் திறமையும், நட்சத்திரப் பண்பும் ஒன்றையொன்று சார்ந்தும் விலகியும் விரிந்தன. சகோதரர்களெல்லாம் இசைக்குடும்பமாய் இருந்த போதும் சிறுவன் மைக்கேலின் திறமைகள் தனித்தே தெரிந்தன. தந்தையின் இசைப் பயிற்சியைச் செரித்ததில், அவர் மற்ற உடன்பிறப்புகளை விட முன்னணியில் இருந்தார் என்பதையும் மறுப்பதற்கில்லை.

பொதுவாழ்க்கையில் தங்களது சமத்துவத்துக்கான இடத்தைப் பெறுவதற்காக கருப்பின மக்கள் போராடி வந்த காலத்தில் கலைத் துறையிலும் அந்தச் சவால் நீடித்தது. அரசியலிலும், சமூகத்திலும் கருப்பின மக்களுக்கு சமத்துவத்தையும் அதிகாரத்தையும் மறுத்து வந்த வெள்ளை ஆளும் வர்க்கம், கேளிக்கை உலகில் மட்டும் கருப்பின நட்சத்திரங்களை அனுமதித்தது. இருப்பினும், மைக்கேல் ஜாக்சன் முதல் ஒபாமா வரையிலானவர்களின் வெற்றியைத் தங்களது வெற்றியாகக் கருதும் உளவியல் கருப்பின மக்களிடமும் இருக்கத்தான் செய்கிறது.

கருப்பின மக்களுடைய போராட்டத்தின் பயனை ஜாக்சன் அறுவடை செய்து கொண்டார் எனினும், அவரிடம் ஒரு கருப்புப் பெருமிதம் கூட இருந்ததாகத் தெரியவில்லை. அடிமைத்தனத்தின் மீது கோபம் கொண்டோர், கோபத்தைத் தவிர்த்து எப்படியாவது முன்னுக்கு வருவோர், ஆண்டானின் உதவியுடன் கடைத்தேறுவோர் எனப் பிரிவுகள் வைத்துக் கொண்டால் மைக்கேல் மூன்றாவது பிரிவில்தான் நிச்சயம் இருப்பார். கருப்பின மக்களின் சிவில் உரிமைகளுக்கான போராட்ட அரசியலின் சாயலைக் கூட அவரது இசையில் காண முடியாது. பாப் மார்லே போன்றோரெல்லாம் அவரது முன்மாதிரி வரிசையிலும் இல்லை.

இருந்தாலும் அவரது திறமையைக் கண்ட இசைத்தொழிலில் உள்ள கருப்பினப் பிரமுகர்கள் உணர்வுப்பூர்வமாக அவருக்கு ஆதரவு வழங்கினார்கள். இத்தகைய கூட்டு முயற்சியில்தான் அவரது பிரபல ஆல்பங்கள் வெளியிடப்பட்டன. என்றாலும், பெருமையனைத்தும் மைக்கேலுக்கு மட்டும்தான் சென்றது. இசையிலும், நடனத்திலும் திறமை கொண்டிருந்த ஜாக்சனை ஒரு நட்சத்திரமாக மாற்றுவதனால் உள்ள ஆதாயங்களை இசை நிறுவனங்கள் தெரிந்து கொண்டன.

### அறிவியல் தொழில் நுட்பத்தின் இசை!

1982-ஆம் ஆண்டு அவரது புகழ் பெற்ற 'த்ரில்லர்' ஆல்பம் வெளியிடப்பட்டு விற்பனையில் உலகசாதனை படைத்தது. இதுவரை இல்லாத அளவில் தோல் கருவிகளின் தாளங்களும், கிதாரின் நரம்பு அறுபடும் வேகமும், எல்லா வகை இசை வகைகளையும் கலந்து கொடுத்த உத்தியும், காத்திருந்த மனங்களைப் பாய்ந்து கவ்விக் கொண்டன. அவரது வீடியோ ஆல்பங்களில் அவர் பிரத்யேகமாக தயாரித்திருந்த நடன அசைவுகள் இசையோடு போட்டி போட்டுக் கொண்டு இயங்கியதால் ரசிகர்களின் உடல் வழியே உள்ளத்தைக் கைப்பற்றியது ஜாக்சனின் இசை. மேற்கத்திய உலகிலும் 60-களின் 'கலகம்' முடிந்து விட்டது. கலகம் போலக் காதில் ஒலித்த ஓசை, இளமையின் துடிப்புக்கு வடிகால் ஆனது.

87-இல் BAD, 91-இல் DANGEROUS, 95-இல் HISTORY, 2001-இல் INVINCIBLE முதலிய ஆல்பங்களில் கடைசியைத் தவிர்த்து மற்றவை அனைத்தும் அவரைப் புகழின் உச்சிக்கு கொண்டு சென்றன. அவர் பிரபலமாகிய அதே காலத்தில்தான் மேற்கத்திய நாடுகளின் அறிவியல் தொழில் நுட்பப் புரட்சியும் உச்சத்திற்கு வந்து கொண்டிருந்தது. மைக்கேலின் பாப்பிசை ஒரு உலகச்சந்தையைக் கைப்பற்றுவதற்கு இதுவும் முக்கிய காரணம். ஒலித்தட்டுகள் காலாவதியாகி ஸ்டீரியோ நாடாக்கள் வந்தன. கேட்கும் ஒலி



படிப்பகம்

www.padippakam.com

**அவரது வீடியோ ஆல்பங்களில் அவர் பிரத்யேகமாக தயாரித்திருந்த நடன அசைவுகள் இசையோடு போட்டி போட்டுக் கொண்டு இயங்கியதால் ரசிகர்களின் உடல் வழியே உள்ளத்தைக் கைப்பற்றியது ஜாக்சனின் இசை. மேற்கத்திய உலகிலும் 60-களின் 'கலகம்' முடிந்து விட்டது. கலகம் போலக் காதில் ஒலித்த ஓசை, இளமையின் துடிப்புக்கு வடிகால் ஆனது.**

யின் தரம் உயர்ந்தது. இதுவரை இல்லாத அளவுக்கு பரவலான மக்கள் மத்தியில் புதியதொரு இசைச்சந்தையை காசட் பிளேயர்கள் உருவாக்கின.

மைக்கேலின் காலத்தில்தான் ஹாலிவுட் படங்களுக்கிணையாக வீடியோ இசை ஆல்பங்களைப் பெரும் முதலீட்டில் தயாரிக்கும் முறையும் பிரபலமானது. இதிலும் அவரது ஆல்பங்கள் முன்மாதிரியாக இருந்தன என்பது மிகையாகாது. வீடியோ க்ராபிக்ஸ், அனிமேஷன், ஸ்பெஷல் எபெஃக்ட்ஸ் என எல்லா தொழில்நுட்பங்களையும் கையாண்டு ஜாக்சனது வீடியோ ஆல்பங்கள் தயாரிக்கப்பட்டன. வீடியோ கேசட்டுகள் ஜாக்சனுடைய நடனத்தை வீடுதோறும் கொண்டு சேர்த்தன.

இதே காலத்தில் 24 மணிநேர கேளிக்கை தொலைக்காட்சி சேனல்கள் மேற்கத்திய நாடுகளில் தோன்றி பெரிய உலகச்சந்தையைப் பிடித்து வந்தன. எம்.டி.வி மைக்கேலின் பாப்பிசையோடு சேர்ந்து வளர்ந்தது. ஆரம்பத்தில் கருப்பினக் கலைஞர்களை புறக்கணித்த எம்.டி.வி த்ரில்லர் ஆல்பத்தின் வெற்றிக்குப் பிறகு அதன் வீடியோவை ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க அரைமணி நேரத்திற்கொரு முறை ஒளிபரப்பு செய்தது. மைக்கேல் ஜாக்சன் மேற்கொண்ட உலக இசை நிகழ்ச்சிச் சுற்றுலாக்களெல்லாம் பிரம்மாண்டமான விளம்பரங்களுடன் இந்த சேனலில் வெற்றி பெற்றன.

அவர் சென்ற எல்லா நாடுகளிலும் நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் காட்சி, ஒலி, ஒளி அமைப்புக்கள் அரங்கில் பார்வையாளருக்கு புதிய உணர்ச்சியை ஆச்சரியத்துடன் அளித்தன. மைக்கேலின் மேடைக்கான பொருட்கள் மட்டும் இரண்டு கார்கோ விமானங்களில் எடுத்துச் செல்லப் பட்டன என்பதிலிருந்து அதன் பிரம்மாண்டத்தைப் புரிந்து கொள்ளலாம். இருப்பினும் பெரும்பாலான கலைஞர்கள் மேடை நிகழ்ச்சிகளில் வெற்றி பெறுவதில்லை என்பதோடு மைக்கேல் ஜாக்சன் அதில் அனாயசமாக வெற்றி பெற்றார் என்பதையும் இணைத்துப் பார்க்க வேண்டும்.

**ஜாக்சனின் இசை –**
**ஒரு சமூகவியல் பார்வை!**

தாளம் தப்பாமல் அதி வேகத்தில் ஆடிக்கொண்டே சுரம் தப்பாமல் பாடுவதற்கு அசாத்தியத் திறமை வேண்டும். அந்தத் திறமையை கடும் பயிற்சியின் மூலம் ஜாக்சன் பெற்றிருந்தார் என்பதில் சந்தேகமில்லை. அவரது பாடல்களில் சோகம், உற்சாகம், மகிழ்ச்சி, கும்மாளம் என நவரசங்களும் இணைந்து வந்தன. மேலும் இரகசியக் குரல் அலையில் மெல்லப் பாடுவதும், மறுகணமே உச்ச ஸ்தாயில் ரீங்காரம் செய்வதும் அவரால் வியப்பூட்டும் விதத்தில் செய்ய முடிந்தது.

எதுகை, மோனை, தாளத்தில் உட்காரும் சொற்கள், உலகச் சந்தையைக் குறிவைத்துத் தயாரிக்கப்பட்ட பல நாட்டு இசைக்கருவிகளும் நடன முறைகளும் இணைந்த இசையமைப்பு, நடன அசைவுகள்.. இவையனைத்தும் இரசிகர்களிடம் தோற்றுவிக்கும் பிரமிப்பு! உலக மக்களிடம் அமெரிக்கா தோற்றுவிக்க விரும்பிய உணர்ச்சி இந்தப் பிரமிப்புதான். அமெரிக்கத் திறமை, அமெரிக்க வேகம், அமெரிக்க வலிமை, அமெரிக்க பிரம்மாண்டம்! அதன் முன் செயல் மறந்து சரணடைந்தார்கள் உலக ரசிகர்கள்.

70-களில் தொடங்கி, அமெரிக்காவுடன் பனிப்போரில் ஈடுபட்டிருந்த ரசியாவிடம் ராம்போவும் இல்லை, ஜாக்சனும் இல்லை. ரசியாவை அரசியல், இராணுவ ரீதியில் வெல்வதற்கு முன்னரே பண்பாட்டு ரீதியில் வென்று விட்டது அமெரிக்கா. போலிக் கம்யூனிசம் வீழ்ச்சியடைந்த ரசியா உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் ஜாக்சனின் வருகைக்காகக் காத்திருந்தார்கள் இரசிகர்கள்.

அமெரிக்க ஜனநாயகமும், நுகர்வியமும், முதலாளித்துவமும், கோக்கும் சென்றிறங்குவதற்கு முன்னரே கால்கள் வழியாகவும், காது வழியாகவும் அந்நாட்டு மக்களின் உள்ளங்களில் புகுந்து விட்டார் ஜாக்சன். இந்த ஆவியை இறக்கும் பணியை கார்ப்பரேட் இசை நிறுவனங்கள் கச்சிதமாகச் செய்து முடித்தன. உலகச் சுற்றுலாக்களுக்கு அவர் செல்லும் போது இரசிகர்கள் பைத்தியம் போல பின் தொடர்ந்தார்கள்; அழுதார்கள்; மயங்கிக்கூட விழுந்தார்கள்.



மைக்கேல் ஜாக்சனது இசை இருபது வருட இளைஞர்களைக் கட்டிப் போட்டு மெய் மறக்கச் செய்தது. அதுவே கேளிக்கை தொழிலை மாபெரும் இலாபத்தை ஈட்டும் தொழிலாக வளரவும் வழி வகுத்தது.

இசை அரூபமானது, சூக்குமமானது, மொழி வரம்பு கடந்தது என்பதோடு கூடவே நமது உயிரியில் இயக்கமும் குறிப்பிட்ட தாளத்தில் இயங்குவதால், பொதுவில் இசையும் நடனமும் மனிதனின் உடலியக்



படிப்பகம்

www.padippakam.com

**70-களில் தொடங்கி, அமெரிக்காவுடன் பனிப்போரில் ஈடுபட்டிருந்த ரசியாவிடம் ராம்போவும் இல்லை, ஜாக்சனும் இல்லை. ரசியாவை அரசியல், இராணுவ ரீதியில் வெல்வதற்கு முன்னரே பண்பாட்டு ரீதியில் வென்று விட்டது அமெரிக்கா. போலிக் கம்யூனிசம் வீழ்ச்சியடைந்த ரசியா உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் ஜாக்சனின் வருகைக்காகக் காத்திருந்தார்கள் இரசிகர்கள்.**

கத்துடன் நேரடித் தொடர்புடையதாக இருக்கிறது. தத்தித் தவழும் குழந்தை கூட வேகமான தாளகதி வரும் இசையைக் கேட்கும்போது அதற்குத் தகுந்த முறையில் அசைவதற்கு முயற்சிக்கிறது.

குரலின் அதிகபட்ச சாத்தியங்களைத் தனது இசையிலும், உடல் அசைவின் அதிகபட்ச சாத்தியங்களைத் தனது நடனத்திலும் கொண்டு வர முயன்ற ஜாக்சனின் நிகழ்ச்சி, எட்டாக்கனியை எட்டிப் பிடிக்க முயலும் ஏக்கத்தை ரசிகர்களிடம் தோற்றுவித்திருக்கின்றது. கலை தோற்றுவிக்கும் ஈடுபாட்டுக்கும், வித்தை தோற்றுவிக்கும் பிரமிப்புக்கும் இடைப்பட்ட இடத்தில் ஜாக்சனின் ரசிகன் நிறுத்தப்பட்டிருந்தான்.

இசையையோ நடனத்தையோ ரசிப்பதற்கு பெரிய ரசனையோ, அறிவோ, முன் தயாரிப்போ தேவையில்லை என்று சொல்ல முடியாது. மொழியைக் கற்றுக்கொண்டு பேசவோ, எழுதவோ யாராலும் முடியுமென்றாலும் ஒரு கவிதையை ரசிக்க வெறும் மொழியறிவு போதுமானதல்ல. இது இசைக்கும் பொருந்தும். பாப் என்ற பெயரில் கார்ப்பரேட் இசை நிறுவனங்கள் வழங்கிய இசையின் நோக்கம் அதிகபட்ச விற்பனை. எனவே அதனை எட்டுவதற்கேற்ற தரம்.

மைக்கேல் ஜாக்சனது இசையின் வேகமான தாளமும், வித்தை காட்டும் நடன அசைவும் இரசிக்கப்படுவதற்கு பெரிய ரசனை அறிவோ, முன்தயாரிப்போ தேவையில்லை. அந்த இசையைக் கேட்பவர்களின் ரசனை பண்படுவதற்கு பதில் அவர்களது உணர்ச்சி ஆரவாரத்துடன் கிளர்ந்தெழுந்து அதே வேகத்தில் சட்டென தணிந்தும் போகின்றது.

தனது முப்பது வருட இசை வாழ்க்கையில் சுமார் அறுபது பாடல்களை மட்டும்தான், சராசரியாக ஆறு மாதத்திற்கு ஒரு பாடல்தான் மைக்கேல் ஜாக்சன் வெளியிட்டிருக்கிறார் என்பது ஆச்சரியமானதல்ல. அவருக்கென்றே உருவான பாணி வெற்றி பெற்றதும் இசைத் தட்டைத் தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனங்கள் அந்த பாணியைத் தான் மீள் வடிவில் கொண்டு வருவதை விரும்பின. இங்கே தமிழ் சினிமாவில் ஒரு கதையோ, பாடலோ வெற்றி பெற்றால் தயாரிப்பாளர்கள் அதைப் போலத் தான் வேண்டும் என்று கட்டளையிடுகிறார்களே அது போல. ஜாக்சன் உலகச் சந்தையின் நட்சத்திரமாகி விட்டதால், அவரது இசைத்தட்டுகளை விற்பனை செய்த கார்ப்பரேட் நிறுவனங்கள்தான் அவரது பாடல் 'உற்பத்தியை'த் தீர்மானித்தன.

பாப், சோல், ராக், ஹார்ட் ராக், ராப், தற்போதைய ஹிப்ஹாப் வரை எல்லா வகை இசைகளிலும் ஜாக்சன் ஆரம்பித்த பாணிகள் இன்று வரை கோலோச்சுகின்றன. என்றாலும் இந்தப் பாணியில் மேலும் தேர்ந்து பல கலைஞர்கள் உதிக்கத் துவங்கியதும் ஜாக்சனது நட்சத்திர சேவை கார்ப்பரேட் இசை நிறுவனங்களுக்கு தேவைப்படவில்லை. இன்று இணையத்தின் மூலம் எந்த புதிய இசையையும் இலவசமாக தரவிறக்கிக் கொள்ளலாம் என்ற தொழில் நுட்ப சாத்தியங்களெல்லாம் ஜாக்சனது காலத்தில் இல்லை என்பதும் அவரது ஆல்பங்கள் 75 கோடிக்கு மேல் விற்றதற்கு ஒரு முக்கிய காரணம்.

**நுகர்வுக் கலாச்சாரத்தின் இசை!**

சர்க்கரையோ, கொழுப்புச் சத்தோ அதிக அளவில் திடீரென விழுங்கப்படும் போது உணர்ச்சிகள் சமநிலையிழக்கின்றன. எனவேதான், டப்பா உணவுகளுக்கு அடிமையான சிறுவர்கள் அளவு மீறிய கோபம், ஆத்திரம், பிடிவாதம், வெறுப்பு முதலியனவற்றுக்கு ஆளாவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இது 'டப்பா' இசைக்கும் பொருந்தும். ஜாக்சனின் இசை தொழில்நுட்பத்தின் இசை மட்டுமல்ல, நுகர்வுக் கலாச்சாரத்திற்கான இசையும் கூட.

மேற்கத்திய நாடுகளில் நுகர்வுக் கலாச்சாரம் கொடிகட்டிப் பறந்த 80-களில் நுகர்பொருட்களை விளம்பரம் செய்த சேனல்களும், அந்த விளம்பரங்களை பெறுவதற்கான பிரபலமான நிகழ்ச்சிகளும் ஒன்றையொன்று தேடியறிந்து 'கலையின்' கருவைக் கட்டியமைத்தன. காதல், பாசம், அன்பு, நேசம் முதலான உணர்ச்சிகளெல்லாம் மனித உறவுகளைத் தீர்மானிப்பதற்குப் பதில் பொருட்களின் சேகரிப்பே அனைத்து வகை உறவுகளையும் கட்டியமைக்கும் வலிமையைப் பெற்றன. பொதுநல நாட்டமும், அரசியல் ஆர்வமும், சமூக நடவடிக்கைகளும் கேலிக்குரியதாகவும் யதார்த்தத்திற்கு புறம்பானதாகவும் பார்க்கப்பட்டன.

தனிமனித இன்பம் துய்ப்பதற்கு இந்த சமூகம், உறவுகள், தந்தைகள் தடுப்பதாக ஆத்திரம் கொண்டு 'கலகம்' செய்யும் புதிய தலைமுறையினரின் முன்னோடியை மைக்கேல் ஜாக்சனின் 'பிளாக் ஆர் ஒயிட்' பாடலில் காணலாம். இரைச்சலாக இசை கேட்பதை தடுக்க நினைக்கும் தந்தையை அந்தச் சிறுவன் பல்லாயிரம் வாட்ஸ் ஒலிப்பான்களை வைத்து தூக்கி எறிவதாக ஒரு காட்சி வரும். நுகர்வுக் கலகத்தின் குறியீடாக அதனைக் கொள்ளலாம்.

அந்தப் பாடலின் வரிகள் கருப்பு வெள்ளை நிறங்களின் ஒற்றுமை பற்றி மேலோட்டமாகக் கூறுகிறதெனினும், அதன் வேகமான தாளமும், கிதார் சுண்டிவிடும் நரம்புகளும், இன்பத் துய்ப்பையே கிளர்ச்சி நடவடிக்கையாக வரித்துக் கொள்ளும் நுகர்வுக் கலாச்சாரம் கோருகின்ற வேற்றுமை கடந்த ஒற்றுமையையே கொண்டாடுகின்றன. இது கிரெடிட் கார்டு அமெரிக்கனின் ஒருமைப்பாடு. ஜாக்சனின் பாடல்களுக்கு நிறங்களைக் கடந்து ரசிகர்கள் கிறங்கினார்கள். அது நுகர்வியக் கிறக்கம்.

கறுப்பினப் பாடகி ட்ரேசி சாப்மெனின் குரல் போல ஜாக்சனின் குரல், நிறவெறியின் இதயத்தைத் தீண்டவுமில்லை, திருத்தவு






படிப்பகம்

www.padippakam.com

**சர்க்கரையோ, கொழுப்புச் சத்தோ அதிக அளவில் திடீரென விழுங்கப்படும்போது உணர்ச்சிகள் சமநிலையிழக்கின்றன. எனவேதான், டப்பா உணவுகளுக்கு அடிமையான சிறுவர்கள் அளவு மீறிய கோபம், ஆத்திரம், பிடிவாதம், வெறுப்பு முதலியனவற்றுக்கு ஆளாவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இது 'டப்பா' இசைக்கும் பொருந்தும். ஜாக்சனின் இசை தொழில்நுட்பத்தின் இசை மட்டுமல்ல, நுகர்வுக் கலாச்சாரத்திற்கான இசையும் கூட.**

மில்லை. அது அவர்களுடைய காதுகளில் நுழைந்து, உடலை மட்டுமே கிளர்ச்சியுறச் செய்தது.

அவரது சிநேகிதியான எலிசபெத் டெய்லரால் பாப்பிசையின் அரசனென்று அழைக்கப்பட்டு நட்சத்திரமாக நிலை கொண்ட மைக்கேல் ஜாக்சனும் தனது 'அடையாளத்தை' மாற்றத் துவங்கினார். 'பெப்சி...புதிய தலைமுறையின் தெரிவு' என்ற முத்திரை வாசகம் கொண்ட விளம்பரத்தில் நடனமாடிய ஜாக்சன் அப்போது ஏற்பட்ட விபத்தினால் மூக்கில் அடிபட்டு பிளாஸ்டிக் சர்ஜரிக்கும் அறிமுகமானார்.

**மேடை ஒளியில் உருவான உடலுக்காக.....!**

ஜாக்சனை கருப்பின மக்கள் கூடுதல் நேசத்துடன் கொண்டாடினாலும் ஜாக்சன் அதை விரும்பவில்லை. பின்னாளில் தந்தையின் கெடுபிடிகளால் தான் இழக்க நேர்ந்த குழந்தைப் பருவத்தைப் பற்றி நினைவு கூர்ந்த ஜாக்சன், தனது நிறத்தினால் தான் பட்ட துன்பங்கள் பற்றி எப்போதும் பேசியதில்லை. உலக நட்சத்திரம் என்ற முறையில் தனக்குப் புதிய நிறமும் முகமும் தேவையென்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

எப்படிப் பேசுவது, நடப்பது, கை குலுக்குவது, எந்த கோணத்தில் புகைப் படத்திற்கு முகத்தைத் திருப்புவது என்றெல்லாம் அமெரிக்க அதிபருக்கே ஆள் வைத்துப் பயிற்சி கொடுக்கும் அமெரிக்க நிறுவனங்கள், உலக நாயகனுக்குரிய தோற்றத்தையா விட்டு வைக்கும்? ரகுமானின் முடியை இழுத்து மூஞ்சியில் தொங்கவிட்ட பிறகு தானே, அவருடைய வந்தே மாதரத்தை சோனி நிறுவனம் உலகச் சந்தையில் அரங்கேற்றியது!

தனது கருப்பு நிறத்தையும், சுருட்டை முடியையும் ஜாக்சன் மாற்றிக் கொண்டார். சாத்தியமான அளவு வெள்ளை நிறமும், நீண்ட முடியும் அமெரிக்க உலக நாயகன் இமேஜுக்கு தேவைப்பட்டது. அடுத்தடுத்து அவர் செய்து கொண்ட பிளாஸ்டிக் சர்ஜரிகள் அவருக்கு தேவையான வெள்ளை நிறத்தை வழங்கின. தனக்கு வெளிரும் தோல் நோய் இருப்பதாக ஜாக்சன் தரப்பு கூறிக்கொண்டாலும், அவருடைய முகத்துக்கு வெள்ளையடிப்பது பன்னாட்டு நிறுவனங்களுக்கு தேவையாக இருந்தது.

நட்சத்திரங்களின் பலமே குளிர்பதனப் பெட்டியில் வைத்து பாதுகாக்கப் படும் இறைச்சியைப் போன்ற அவர்களது கெட்டுப் போகாத உடல்தான். இயல்பான உடலும், அலங்காரமும் அவர்களது வாழ்க்கையில் இனி எப்போதும் இருக்கப் போவதில்லை. ரசிகர்களின் பார்வையில் பட்டு இதயத்தில் பதியப்பட்டிருக்கும் அந்த பூச்சுப் பூசப்பட்ட உருவத்தை பராமரிக்கும் வரையிலும் தான் நட்சத்திரங்களுக்கு மரியாதை.

குளிர்சாதன அறையில் எப்போதும் அடைந்து கொண்டு பூசப்பட்ட உடலைப் பாதுகாப்பது சாத்தியமில்லை என்றாலும், தனது உடல் பற்றிய பிம்பம், இல்லாத ஆறாவது விரல் போல அவர்களது சிந்தையில் அழுத்தமாகப் பதிந்து விடுகிறது. தன் உடலை மேக்-அப் இல்லாமல் கண்ணாடியில் பார்க்கும் தைரியத்தை அநேகமாக அவர்கள் இழந்து விடுகின்றார்கள். மேடை வெளிச்சத்திலும், வீடியோ கிராபிக்சிலும் உருவான உடல் தோற்றம் ஜாக்சனையும் துரத்த ஆரம்பித்தது. இந்த உடல் கற்பிதம் பின்னர் ஒரு உளவியல் நோயாக அவருக்கு மாறிவிட்டதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். இதே நோய் மர்லின் மன்றோவுக்கும் இருந்ததாகவும் தெரிகிறது.

மர்லின் மன்றோவோ அல்லது சிலுக்கு ஸ்மிதாவோ அவர்களது உடல் கவர்ச்சிக்காக மட்டுமே போற்றப்பட்டார்கள். இவர்களைப் பற்றிய கவனம், பார்வை, மதிப்பு எல்லாம் உடல் மட்டுமே. மனிதனின் உடலை மட்டுமல்ல, உள்ளத்தையும் முதலாளித்துவம் பண்டமாகவே கருதுகிறது. இந்த உடலுக்காக மட்டுமே கொண்டாடப்படும் நட்சத்திரங்கள், உடல் மதிப்பிழக்கும் போது, ஆறுதலின்றி தனிமைப்பட்டு தற்கொலை வரை செல்கின்றார்கள்

மைக்கேல் ஜாக்சனும் தனது உடலுக்கு ஏதோ அதீதத் திறனுள்ளதாக நினைத்துக் கொண்டார். இந்த உடல் போதை ஒவ்வொரு பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையிலும் அதிகரித்தது. மேடையில் தன்னைப் பார்த்து கதறி அழும் ரசிகர்களின் உணர்ச்சி தரும் மிதப்பில் இந்த ரணகளமான சிகிச்சையை அவர் விரும்பியே சகித்துக் கொண்டார்.

கருப்பை வெளிரவைக்கும் அழகு சாதனப் பூச்சுப்பொருட்களின் விற்பனைக்கு ஜாக்சனும் ஒரு காரணம். கருப்பர்களின் மத்தியில் கூட கருப்பை சற்றே மாநிறமாக்கும் ஆசையை மைக்கேலின் வெள்ளை அவதாரம் ஏற்படுத்தியது. கருப்பினத்தவரின் போராட்டத்திற்கு இப்படித்தான் ஜாக்சன் எதிர்மறையாகப் பங்காற்றினார்.



**கலை உணர்ச்சியின் வடிகால் எது?**

பொழுதுபோக்குத் தொழிலில் இருக்கும் வேறு எவரையும் விட ஜாக்சன் மிகுந்த பணம் சம்பாதித்தார். தமிழ் சினிமா நடிகைக்கே கார், பங்களா, தனி உதவியாளர்கள் என பந்தா தேவைப்படும்போது உலக நாயகனின் சாம்ராஜ்யம் பற்றி விரித்துரைக்கத் தேவையில்லை. அவரது



படிப்பகம்

www.padippakam.com

**ஆயுள் கைதியாக மருந்துகளின் துணையுடன் ஒரு பைத்தியகாரனைப் போல வாழ்ந்து வந்த ஜாக்சனை பன்னாட்டு இசைக் கம்பெனிகள் விடுவதாக இல்லை. ஐம்பது வயது, முடி இல்லாத தலை, உரியும் தோல் துணுக்குகள், மருந்தின்றி நடமுடியாத நிலை, உடல் எடை குறையும் நோய், இப்படி ஆயிரத்தெட்டு பிரச்சினைகளோடு இருந்த அந்தக் கலைஞனை ஐம்பது நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும் என உத்திரவிடுவதற்கு எத்தனை கோடூர மனம் வேண்டும்?**

விலையுயர்ந்த ஆடைகள், 2500 ஏக்கரில் விரிந்திருக்கும் நெவர்லாண்ட் அரண்மனை வீடு, அதில் கேளிக்கைப் பூங்காக்கள், நூற்றுக்கணக்கான பணியாளர்கள், அங்கே நடைபெறும் புகழ்பெற்ற இரவுநேர விருந்துகள் என்று ஏராளமிருக்கின்றன.

பாடலோ, நடனமோ, ஓவியமோ அதில் தோய்ந்து கரையும் கலைஞர்களை நாம் பார்த்திருப்போம். இதுவே பல்லாயிரக்கணக்கான மக்கள் ரசிக்கும் மேடையென்றால் அந்தக் கலைஞனின் பேரகன் அல்லது உயர்வு நிலையில் வெளிப்படும் நான் என்ற உணர்வு அல்லது பேரகந்தை மேடையை விட்டு இறங்கியவுடன் மறைந்து விடுவதில்லை. ஆனால், எவ்வளவு வேகமாக ஒரு கலைஞன் சகஜநிலைக்கு மீண்டு வருகின்றானோ அந்த அளவுக்கு அவன் காப்பாற்றப்படுவான். இல்லையெனில் உயர்ந்து விட்ட அந்தப் பேரகந்தை வாய்ப்புக் கிடைக்கும் சிற்றின்பங்களில் அபரிதமாக மூழகத் துவங்கும்.

முதலாளித்துவ சமூகத்திலோ கலைஞன் சந்தையைக் கட்டுப்படுத்தும் நிறுவனங்களால் பராமரிக்கப்படுகிறான். தனது கலைத் திறமையை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்கும், தனக்கு செல்வத்தைத் தரும் நிறுவனங்களின் விதிகளுக்கு உட்பட்டு வாழ்வதற்கும் மிகுந்த பிரயத்தனம் செய்கிறான். கலைஞனுக்கும் மக்களுக்கும் அப்பாற்பட்ட முதலாளிகள் மூன்றாவது கடவுளாக இருந்து கலையை கட்டுப்படுத்துகிறார்கள். கலைஞனையும் அவனது விருப்பத்தோடு கட்டிப் போடுகின்றார்கள்..

**கலைஞன் - இரசிகனின் உறவு**

ரசிகனின் மேலோட்டமான உணர்ச்சியை மலிவாகத் தூண்டிவிட்டு, பிறகு அதற்கு அவனை அடிமையாக்கி அதே விசயத்தை எந்த நோக்கமின்றி மீண்டும் எதிர்பார்க்க வைத்து, அதற்கு பணியவைத்து, மீண்டும் மீண்டும் அதனை நுகர விரும்பும் ஒரு விலங்காகவே ரசிகனைப் பழக்குகின்றது முதலாளித்துவம். அறிவியல் தொழில்நுட்பத்தின், நுகர்வு கலாச்சாரத்தின் அங்கமாக முன்னிறுத்தப்பட்ட மைக்கேலின் பாப்பிசையும் ஒரு வகையில் இப்படித்தான் பிரபலமானது.

மைக்கேலின் பிரபலம் காரணமாக அப்போது இருந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரீகன், ஜாக்சனை வெள்ளை மாளிகைக்கு அழைத்து விருந்தளித்தார். ரீகனின் காலத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கமும், அரசியல் சதிகளும் உச்சத்தில் இருந்தன. ஆனால் ஜாக்சனின் நிலவு நடனத்தைப் பார்த்து ரசிகர்கள் உலகமெங்கும் கதறி அழுதார்கள்! இத்தகைய இரசனையின் தரமும் ரசிகர்களது உணர்ச்சியும் வேறு எப்படி இருக்க முடியும்?

கலைஞனுக்குரிய பேரகந்தை ஜாக்சனிடம் எதிர்மறைப் பங்கையே ஆற்றியது. உலகப் பிரபலம் என்ற புகழைப் பெறுவதற்கு சிந்தையில் போதிய இடமில்லாத மைக்கேல் அதற்குரிய இடமாக வேறு இன்பங்களை நாடத் துவங்கினார். சிம்பன்சி பாசம், குழந்தைகள் நேசம், வலி நிவாரணிகளுக்கு அடிமையாதல் என கிட்டத்தட்ட ஒரு வித்தியாசமான சைக்கோவாகவே மாறிப் போனார்.

**மங்கிய நட்சத்திரம்!**

கூடவே குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டிற்கும் ஜாக்சன் ஆளானார். ஒரு வழக்கில் நீதிமன்றத்திற்கு வெளியே பணம் கொடுத்து சமரசம் செய்யப்பட்டது. மற்றொரு வழக்கில் ஆதாரம் இல்லை என புகார் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டு உண்மையானதா என்று நம்மால் உறுதி செய்ய முடியாதென்றாலும் இதைச் செய்வதற்குரிய பலவீனம் ஜாக்சனிடன் இருந்திருக்க வேண்டும். சந்தையினால் திணிக்கப்பட்ட ஒரு கலைஞன், திகட்டிப் போகுமளவு நுகர்வு, உல்லாசம், புகழ் ஆகியவற்றால் தள்ளாடும்போது, இத்தகைய வக்கிரங்கள் தோன்றுவதை எதிர்பார்க்கத் தான் வேண்டும்.

புகழை எதிர்கொள்ள முடியாத ஜாக்சன், இந்த குற்றச்சாட்டுகளையும் எதிர்கொள்ள முடியாமல் நிலைகுலைந்திருக்க வேண்டும் என்பதை நாம் யூகிக்கலாம். முக்கியமாக 90-களின் பிற்பகுதியிலேயே ஜாக்சனுக்குரிய 'உலக பாப்பிசையின் அரசன்' எனும் பதவி காலியாகி விட்டது. அவரை வைத்து கல்லாக் கட்டிய இசை நிறுவனங்களெல்லாம் அவரை சீண்டக் கூட இல்லை.

அவர் நட்சத்திரமாக இருந்தபோது அவரை பாப்பராசிகள் (பிரபலங்களின் தனிப்பட்ட வாழ்க்கையை ரகசியமாகப் படம் பிடித்து, பத்திரிகைகளுக்கு விற்பவர்கள்) விடாமல் துரத்தினார்கள். அவரைக் குறித்த அற்ப விசயங்கள் கூட ஊடகங்களின் தலைப்புச் செய்திகளாகக் கொட்டப்பட்டன. நட்சத்திர ஒளி மங்கி, குற்றச்சாட்டுகளில் சிக்கிய காலத்திலும் கூட பாப்பராசிகள் விடுவதாக இல்லை.



கிளிண்டன் - மோனிகா விவகாரத்தை ஏதோ மாபெரும் உலகப் பிரச்சினை போல பல மாத காலம் மேற்கத்திய ஊடகங்கள் மாவரைக்கவில்லையா? புகழின் உச்சியில் இருந்தபோது தனது செய்திகள் அடிக்கடி வருவதைப் போதையாக அருந்திய ஜாக்சன், இப்போது நேரெதிரான காலத்தில் வரும் செய்திகளுக்காக இடிந்து போயிருப்பார் என்றால் அது மிகையில்லை.



படிப்பகம்

www.padippakam.com

**இதுதான் முதலாளித்துவம் ஒரு கலைஞனை உருவாக்கி கொன்ற கதை. குழந்தைப் பருவ மைக்கேலின் முகமும், அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட ஜாக்சனின் முகமும், கலையின் இயல்பான அழகுக்கும், முதலாளித்துவக் கலையின் விகாரத்துக்கும் எளிய உருவகங்களாக காட்சியளிக்கின்றன.**

'ஜாக்சன் இருந்தாலும் ஆயிரம் பொன் அவர் ஒழிந்தாலும் ஆயிரம் பொன்' என்று சிறார்கள் மீதான பாலியல் விவகாரத்தில் ஊடகங்கள் நடந்து கொண்டன. நீதிமன்றத்திற்கு முன்பாகவே அவர்கள் தீர்ப்பு வழங்கி ஆயுள் சிறையிலிருக்கும் ஜாக்சனது வாழ்க்கை குறித்தெல்லாம் அலசி ஆராய்ந்தார்கள். இங்கு வெள்ளை நிறவெறியும் சற்று கூடுதல் அக்கறையுடன் செயல்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

வழக்கினால் மன நிம்மதியை இழந்த ஜாக்சன் அதற்காக பெரும் செல்வத்தையும் இழந்தார். பண்ணை வீட்டையும் காலி செய்தார். ஆடம்பரத்தில் உழன்று கொண்டிருந்த நேரத்தில் பிற்காலத்தில் இப்படி ஒரு நிலை வரும் என அவர் கனவிலும் கருதியிருக்க முடியாது. உலக நாயகனுக்காக அவர் ஏற்றிருந்த லவுகீக சமாச்சாரங்கள் ஒவ்வொன்றும் பராமரிக்க முடியாமல் உதிர்ந்து கரைந்தன.

தொழில் இல்லை, கலை இல்லை என்றால் அவர் எதை வைத்து வாழ்ந்திருக்க முடியும்? போதை மருந்துகள், வலி நிவாரணிகள் மூலம்தான் அவரது இறுதி காலம் வேறு வழியின்றி நகர்த்தப்பட்டது. இப்போது வந்திருக்கும் செய்திகளின் படி அவரது உடலில் இருந்த அளவுக்கு அதிகமான மருந்துகளே அவரது உயிரைப் பறித்திருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

**ஜாக்சனைக் கொன்றவர்கள் யார்?**

ஆயுள் கைதியாக மருந்துகளின் துணையுடன் ஒரு பைத்தியகாரனைப் போல வாழ்ந்து வந்த ஜாக்சனை பன்னாட்டு இசைக் கம்பெனிகள் விடுவதாக இல்லை. ஐம்பது வயது, முடி இல்லாத தலை, உரியும் தோல் துணுக்குகள், மருந்தின்றி நடமுடியாத நிலை, உடல் எடை குறையும் நோய், இப்படி ஆயிரத்தெட்டு பிரச்சினைகளோடு இருந்த அந்தக் கலைஞனை ஐம்பது நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும் என உத்திரவிடுவதற்கு எத்தனை கொடூர மனம் வேண்டும்?



வந்த வரை இலாபம் என்பதால் முதலாளிகள் ஜாக்சனது கையறு நிலையை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். ஜாக்சனின் ரசிகர்களை இன்னொரு முறை கொள்ளையடிப்பதற்கும், பழையதை அறிமுகம் செய்யும் சாக்கில் புதிய தலைமுறையைச் சுரண்டுவதற்கும் இது அவர்களுக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பு.

இந்த வந்தனோபசாரக் கடைசி ஆட்டத்துக்கான ஒப்பந்தத்தில் என்னென்ன விதிகள் இருந்தன என்பது நமக்கு தெரியாது. அந்த விபரங்கள்தான் பிரேதப் பரிசோதனையை விட முக்கியமானவை. நோய்வாய்ப்பட்டிருக்கும் சிங்கத்தை அடித்து வேலை வாங்கும் ரிங் மாஸ்டர் வேலையை முதலாளிகள் செய்தனர். நிகழ்ச்சிகள் நடந்தால் கடனிலிருந்து மீளலாம், அதற்கு நலிவிலிருக்கும் உடலை எப்படி தயார் செய்வது?

எப்படியும் தயார் செய்தே ஆக வேண்டும். மருந்துகள், இன்னும் அதிக மருந்துகள், புதிய நிவாரணிகள், மயக்க மருந்து.. எதைப் பயன்படுத்தியாவது உடலை தயார் செய்ய வேண்டும். புகழ் பெற்ற அந்த இரகசியக் குரல் தனது பொலிவைக் கொண்டு வர வேண்டும். கால்கள் தள்ளாடினாலும் ரசிகர்களை சொக்க வைத்த அந்த நிலவு நடனத்தை ஆட வேண்டும்.

கலைப்படைப்பில் ஒரு கலைஞனுக்கு இருக்க வேண்டிய சுதந்திரம், ஈடுபாடு, தன் முனைப்பு எதற்கும் இங்கு வேலை இல்லை. வண்டியில் பூட்டப்பட்ட மாடாக, கலைஞனை நடத்தும் முதலாளித்துவம்தான் கலையின் சுதந்திரத்தை கம்யூனிசம் கொன்றுவிடுமென்று கூவுகிறது. மைக்கேல் பிரபலமான காலத்திலும், புகழ் சரிந்த காலத்திலும் சுதந்திரமாக இல்லை. சந்தையால் கட்டுப்படுத்தப்பட்டு ஆடினார், பாடினார். அதே சந்தைக்காக ஆடவும், பாடவும் முடியாமல் இறந்து போனார்.

அவரது திறமையைக் காசாக்கிய எம் டி.வி, சோனி நிறுவனங்களின் விளம்பரப் பலகைகளில் இப்போது புதிய நட்சத்திரங்கள் மின்னுகிறார்கள். அந்த பிரம்மாண்டமான விளம்பரப் பலகையை அண்ணாந்து பார்த்துச் சரணடையும் ரசிகனுக்கு பலகைக்குப் பின்னால் நடக்கும் சூட்சுமங்கள் புரிவதில்லை.

இதுதான் முதலாளித்துவம் ஒரு கலைஞனை உருவாக்கி கொன்ற கதை. குழந்தைப் பருவ மைக்கேலின் முகமும், அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட ஜாக்சனின் முகமும், கலையின் இயல்பான அழகுக்கும், முதலாளித்துவக் கலையின் விகாரத்துக்கும் எளிய உருவகங்களாக காட்சியளிக்கின்றன. முதலாளித்துவத்தின் வெற்றியைப் பறைசாற்றும் அமெரிக்காவின் தூதனாக உலகை வலம் வந்த நாயகன், 'வி ஆர் த வேர்ல்டு' என்று அமெரிக்க மேலாண்மையைப் பாடிய கலைஞன், அமெரிக்காவின் சூதாட்டப் பொருளாதாரம் வீழ்ந்த அதே காலத்தில் தனது மாயவலைப் புகழை இழந்து மறைந்திருக்கிறான். வலி நிவாரணிகள், ஊக்க மருந்துகள் மூலம் டாலரை மீண்டும் எழுந்து ஆடவைக்க முயன்று கொண்டிருக்கிறார் ஒபாமா. ஜாக்சன் விழுந்து விட்டார். அடுத்த நாயகன் யார்? அடுத்த திவால் எப்போது?

**— வினவு,**
www.vinavu.com



படிப்பகம்

www.padippakam.com

## சிறுகதை:

# மல்டிலெவல் மார்க்கெட்டிங்கின் மனக்கோணங்கள்!

தன்னைத் தவிர முழு உலகமும் சுறுசுறுப்புடன் இயங்குவதாகக் காட்சியளிக்கும் மாநகரத்தின் ஞாயிற்றுக்கிழமையை, செய்தித்தாள் போடும் சிறுவர்கள் தூக்கம் கலைந்த வேகத்துடன் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

படுக்கையில் இருந்த வெங்கட்ராமன் விழித்தபோது மணி சரியாக ஆறு. அலாரமில்லாமல் டாணென்று எழுந்து விடுவதாகச் சிலர் பீற்றிக் கொள்வதைப் போல அவர் பெருமையடிக்க மாட்டார் என்றாலும் அப்படித்தான் கச்சிதமாக எழுந்திருப்பார். சில நாட்களில் பேப்பர் பொத்தென்று விழும் சப்தமும் வெங்கட்ராமன் துயிலெழும் முகூர்த்தமும் சொல்லிவைத்தது போல பொருந்தி வரும். இன்றும் பொருந்தித்தான் வந்தது.

பல் துலக்கியவாறே ஒய்வுநாள் தரும் துவக்கக் களிப்புடன் தலைப்புச் செய்திகளை மேய ஆரம்பித்தார். வார நாட்களில் சில மணித்துளிகளில் வாசிப்பை முடித்து விடுபவர், விடுமுறை நாளில் மட்டும் சற்று அதிக நேரம் படிப்பார். காலை உணவு முடிந்ததும் இணைப்பில் உள்ள துணுக்கு மூட்டையைக் கிரகிப்பதும், குறுக்கெழுத்துப் போட்டியைப் பக்கத்து வீட்டு ராமானுஜம் முடிப்பதற்குள் ஒரு குழந்தையின் ஆர்வத்தோடு முடித்து விடுவதும், தெரியாத ஒன்றிரண்டு கேள்விகளுக்காக வரும் ராமானுஜத்திடம் பரவசத்துடன் பதிலை விவரிப்பதும் .. எப்படியோ நாற்பத்தைந்து வயதைக் கடந்து விட்டார் வெங்கட்ராமன்.

ஆனால் இன்றைக்கு மட்டும் ஏதோ இந்த நாள் ஒரு நல்ல நாள் என்பது போல ஒரு மனக்குறிப்பு குதூகலத்துடன் சிந்தனையில் அவர் அறியாமலேயே ஓடிக் கொண்டிருந்தது. வழக்கமான வீட்டுக் காட்சிகளையும், குடும்பத்தினரையும் ஒரு விசேசமான பாசத்துடன் கவனித்துக் கொண்டிருந்தார்.

பற்பசையின் காரம் ஏறியதால் தும்மியவர் தினசரியையும் ஒரு உலுக்கு உலுக்க, அதிலிருந்து ஆர்ட் பேப்பரில் ஒன்றுக்கு நான்கு சைசில் அழகாக அச்சிடப்பட்ட ஒரு விளம்பரப் பிரசுரம் கீழே விழுந்தது. விற்பனை, வாடகை, காப்பீடு, கடன் போன்றவற்றின் போக்கை அறிந்து வைத்திருக்க வேண்டியதை அவசியமாகக் கருதும் எல்லா நடுத்தர வயதுக்காரர்களைப் போலவே அவரும் நாளிதழின் விளம்பரங்களையும், வரி விளம்பரங்களையும் இரவு நேரத்தில் இம்மியளவு கூட விடாமல் படிப்பவர்தான் என்றாலும் விழுந்த துண்டுக் காகிதம் ஏதோ ஒரு நல்ல செய்தியை தூதேந்திக் கொண்டு வந்திருப்பதாக அவருக்குள் ஒரு நம்பிக்கை.

வழக்கத்துக்கு மாறாக கணவனது முகத்தில் ஒரு துளி மலர்ச்சி பூத்திருப்பதை, அது விடுமுறைக்கானதல்ல, வேறொன்றோடு தொடர்புடையதென அவதானித்த மாலதி குறுஞ்சிரிப்புடன் காபியைக் கொடுத்தாள். என்ன இருந்தாலும் நாளைக்கு இந்த முகம் எப்படியிருக்கும் என்பதையும் நினைத்துப் பார்த்ததால் வந்த சிரிப்பு அது. தனக்கு ஓய்வின்றி பணிவிடை செய்யும் அந்த ஜீவனுக்கு பார்வையிலேயே கணிசமான அளவில் நேசத்தைத் தெரிவித்தவர், நாற்காலியில் அமர்ந்து பருகியவாறு அந்த விளம்பரத்தைப் படிக்க ஆரம்பித்தார்.

எப்போதாவது ஒரு ஞாயிற்றுக் கிழமையில் காபியை ருசித்தவாறே விருப்பமான விளம்பரங்களைப் படிப்பது அமையும். காபியின் மணமும், விளம்பரத்தின் நம்பிக்கையூட்டும் செய்தியும் ஒன்றிணையும் போது கிடைக்கும் அந்த சுகமே அலாதியானதுதான். அதுவும் அனுபவித்தவர்கள் மட்டுமே உணரக் கூடிய அற்புத சுகம்.

''நீங்கள் ஒரு பெர்ஃபக்ஷனிஸ்ட்டா? அப்படியெனில் உங்களைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம்.''

''வரவுக்கும் செலவுக்கும் வழிதெரியாமல் புழுங்கிக் கொண்டிருக்கும் தோல்வியடைந்த மத்தியதர வர்க்கத்தினரின் கூட்டத்தில் செலவையும் சேமிப்பையும் புத்தாக்க உணர்ச்சியுடன், புதுமைத் தாகத்துடன், யாருமறியாத விவேகத்துடன் நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால், ஆம் நண்பரே உங்களைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம்.''

''ஒரு வருடத்தில் கார், இரண்டு வருடத்தில் வீடு, ஐந்து வருடத்தில் நீங்கள் ஒரு முதலாளி, பத்து வருடத்தில் பல இலட்சங்களுக்கு சொந்தமான மில்லியனர்.. இவையெல்லாம் மற்றவர்களுக்கு வேண்டுமானால் கனவாக இருக்கலாம். உங்களைப் போன்ற இலட்சியவாதிகளுக்கு இவை நிறைவேறப் போகும் நனவு, அதற்குத் தேவையான ஆற்றலும், திறமையும், துடிப்பும், வேகமும், நிதானமும், துணிச்சலும் உங்களிடம் ஏராளமிருப்பது குறித்து எங்களுக்குத் தெரியும்.''

காபியை மணத்துடன் பருகத் துவங்கிய வெங்கட்ராமனுக்கு திடீரென மூளை பிரகாசமாக எரிவது போல ஒரு உணர்வு. சிந்தனை ஒருமையடைந்து ஒரு தூய வெளிச்சத்தில் நினைத்தது பலித்ததால் வரும் பரவச உணர்வு. இப்பொழுது அவருக்கு காபி தேவைப்படவில்லை. மேலே படிக்க ஆரம்பித்தார்.

''வெள்ளமெனப் பாயும் உங்கள் முனைப்புக்கு ஒரு அணைகட்டி, தேக்கி

**''வரவுக்கும் செலவுக்கும் வழிதெரியாமல் புழுங்கிக் கொண்டிருக்கும் தோல்வியடைந்த மத்தியதர வர்க்கத்தினரின் கூட்டத்தில் செலவையும் சேமிப்பையும் புத்தாக்க உணர்ச்சியுடன், புதுமைத் தாகத்துடன், யாருமறியாத விவேகத்துடன் நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால், ஆம் நண்பரே உங்களைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம்.''**



படிப்பகம்

www.padippakam.com

நிறுத்தி, புதிய வேகத்தில் திறந்து விட்டு பெரும் சக்தியை உருவாக்குவதுதான் எங்கள் வேலை. நாடெங்கும் உள்ள எங்கள் கிளைகள் மூலம் பல மில்லியனர்களை இப்படித்தான் உருவாக்கியிருக்கின்றோம். இது விளம்பரத்திற்காகச் சொல்லப்படும் பீடிகையல்ல. அந்தச் சாதனையாளர்களில் சிலரை நாளைய சாதனையாளரான நீங்களும் இன்றே சந்திக்கலாம். எங்கள் மின்னல் வேக சங்கிலித் தொடர் திட்டத்தின் மகிமையை நேரடியாக உணர, பங்கேற்க, சாதிக்க உங்களையும் அன்புடன் அழைக்கிறோம். இடம்: கமலா திருமண மண்டபம். நேரம்: காலை 10.30 மணி.''



..அப்புறம் செல், லேண்ட் லைன், மெயில், ஃபேக்ஸ், கிளைகளின் முகவரிகள், இணைய தளம் அத்தனையும் நேர்த்தியாக இடம் பெற்றிருப்பதைக் கவனித்த வெங்கட்ராமனிடம் ஏதோ ஒரு பெரிய நல்லது நடக்கப் போவது போல உள்ளுக்குள் பட்சி கூவிக் கொண்டிருந்தது.

விளம்பரப் பிரசுரத்தை நேர்த்தியாக மடித்தவர் கண்களை மூடி யோசிக்க ஆரம்பித்தார். ஒரு தனியார் கட்டுமான நிறுவனத்தில் காசளராக இருபதாயிரம் சம்பளத்தில் பதினைந்து ஆண்டுகளாகப் பணி, பள்ளியிறுதி ஆண்டில் படிக்கும் மகன், ஆறாவது வகுப்பில் படிக்கும் மகள், இன்னும் பத்தாண்டுகளில் இவர்களுக்கு ஆகப்போகும் கல்விச் செலவு, திருமணச் செலவு, புறநகரில் வாங்கிப் போட்ட இடத்தில் வீடு கட்ட வேண்டிய திட்டம், அவ்வளவாக வசதியில்லாத மனைவியின் வீட்டார், எவ்வளவு சிக்கனமாக இருந்தாலும் சேமிக்க முடியாத அவதி, காப்பீடு, வாகனக் கடன் என்று மாதந்தோறும் விழுங்கக் காத்திருக்கும் தவணைகள், ஏதோ வாங்கி வைத்த சில பங்குகளில் பெயருக்கு வரும் ஈவுத் தொகை ..இந்த எல்லையை எப்படித் தாண்டுவது? அதிகாலையில் ஆரம்பித்த உற்சாகம் சுருதி குறைவது போல இருந்தது.

இல்லை, இந்தக் கூட்டத்திற்கு போய்த்தான் பார்ப்போமே.. ஏதாவது நல்லது நடக்கலாமே..

மீண்டும் உற்சாகத்தை வரவழைத்தவர் குளித்து ரெடியானார். நிதானமாகச் சுவைத்து உண்ணக் கூடிய அடைத் தோசையை அந்தக் கூட்டத்தின் காட்சியை நினைத்தவாறு வேகமாக உள்ளே தள்ளினார். கணவன் ஏதோ ஒரு ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதை உணர்ந்து கொண்ட மாலதி அடுத்த அடையை வைத்து வற்புறுத்தவில்லை.

பத்து மணி ஆனதும் பதட்டமடைந்தார். மண்டபம் வீட்டிலிருந்து நடந்து செல்லும் தூரம்தான் என்றாலும் குறிப்பிட்ட நேரத்திற்குள் இருக்க வேண்டுமே, இல்லையென்றால் நடக்கப் போகும் நல்லவற்றில் ஏதேனும் இழந்து விட்டால்? பீரோவில் இருந்த உடைகளில் சிறப்பான ஒன்றை எடுத்து அணிந்து கொண்டார். வழக்கமாக எதையாவது உடுத்திக் கொண்டு செல்பவரிடம் அந்த விளம்பரப் பிரசுரம் ஏற்படுத்தியிருந்த மாற்றத்தை அறிந்திராத மாலதி குழப்பமடைந்தாள்.

இப்போது எதுவும் சொல்லக்கூடாது எல்லாம் நல்லது நடந்த பிறகுதான் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற உறுதியுடன், ''ஒரு வேலையா வெளிய போறேன், மதியம் சாப்பாட்டுக்கு வந்துருவேன்'', காலணி போட்டுக் கொண்டிருந்தவரை ராமானுஜம் மறித்தார்.

சட்டென்று ஒரு சந்தேகம் .. ராமானுஜமும் அந்த விளம்பரத்தைப் பார்த்திருப்பாரோ .. என்ன இருந்தாலும் அவர் கூடப் போவதில் சம்மதமில்லை .. இல்லை யில்ல .. கையில் இருக்கும் வாரமலரைப் பார்க்கும்போது சமாதானமடைந்தவர், பிறகு பேசலாமென்று நடையைக் கட்டினார். முதல் அபசகுனத்திலிருந்து வெற்றிகரமாக மீண்டவர் இன்றுதான் புதிதாய்ப் பிறந்தோமென்ற நம்பிக்கையுடன் உறுதியாக அடிகளைப் பதித்தவாறு நடந்தார். கண் தொலைவில் தெரிந்த மண்டபத்தில் பெரும் கூட்டம் காத்திருந்தது. அவர் அவசரமாகச் சென்று விட்டதால் அவரது வாரிசுகளை இங்கே அறிமுகம் செய்ய முடியவில்லை.

கல்யாணம் போல கூட்டம் களை கட்டியிருந்தாலும் உணர்ச்சி மங்களத்தில் ஒரு தொழில்திறமை தூக்கலாக இருந்தது. வரவேற்புக்காக நின்றிருந்த பட்டாடை உடுத்திய மங்கைகள் வந்தோரை உற்றார் உறவினராய்ப் பாவித்து செயற்கையாக இல்லாமல் அன்யோன்யமாக அழைத்தார்கள்.

ஆனால் வந்தவர்களெல்லாம் உண்மையில் அப்படிப் பழகியவர்கள் இல்லையென்பதால் செயற்கையாகச் சிரித்து விட்டு சற்று தயக்கத்துடன் நுழைந்தார்



படிப்பகம்

www.padippakam.com

கள். நிச்சயமாக வெங்கட்ராமன் அப்படி இரு மனதாக நுழையவில்லை. தீர்மான கரமான நம்பிக்கையுடன் நேர்த்தியாகச் சென்று அமர்ந்தார். வந்தவர்களில் பல ரகம் இருந்தார்கள். தன்னைப் போல மாதச் சம்பளக்காரர்கள், சில வியாபாரி கள், ஏன் சில பெண்களும் கூட கூட்டத் தில் இருந்தார்கள். தனக்குத் தெரிந்தவர் யாரும் இருக்கக் கூடாது என்ற பதட்டத் துடன் நோட்டமிட்டவர் தனது நோக்கத் தில் வெற்றி பெற்றதும் இருமடங்கு அமைதியுடன் மேடையை நோக்கினார்.

அரங்கினைச் சுற்றிலும் விழியை இழுக்கும் பிளக்ஸ் பேனர்களில் மின்னல் வேகச் சங்கிலித் தொடர் திட்டத்தின் செயல் முறைகள், வென்றவர்களின் கதை கள், சாதனைகள், சில ஆண்டுகளிலேயே இலட்சாதிபதியானவர்களின் வாக்குமூ லங்கள் .. .. சற்று முன்னரே வந்து எல்லா வற்றையும் நிதானமாக பார்த்திருக்கா லாமோ .. சரி கூட்டம் முடிந்ததும் பார்த்துக் கொள்ளலாம், பணவிவகாரத் தில் கிடைக்கும் எதனையும் அறிந்து ஆயத்தமாவதில் சுணக்கம் கூடாது ....

அவரது விழிப்பு நிலையை மேடை யிலிருந்து வந்த ஒரு இனிய குரல் வழி மறித்தது.

அந்தப் பெண்ணுக்கு 25 வயது இருக்கலாம். ஒரு நம்பிக்கையையும், நிதானத்தையும் கலந்து வரும் ஆளு மைக்கேற்ற அழகு உடையுடன் தோற்ற மளித்தவள் எல்லோரையும் சிரித்தவாறு வணங்கி விட்டு பேச ஆரம்பித்தாள். ''உங்கள் எல்லோருக்கும் ஒரு பரிசை இப்பொழுதுதான் வழங்கியிருக்கிறேன். பதிலுக்கு நீங்கள் யாரும் எதுவும் தரவில் லையே''. கூட்டம் என்னவென்று தெரியா மல் விழித்தது. ''என் புன்னகையை அளவில்லாமல் உங்களுக்கு வழங்கியி ருக்கின்றேன், பதிலுக்கு நீங்களும் தர லாமே'' .. இந்த அமர்க்களமான ஒப்ப னிங்கில் மனதை இழந்த கூட்டம் வெகு நேரம் கைதட்டியது.

மற்றவர்கள் போல உணர்ச்சிவசப் படாத வெங்கட்ராமன் கைதட்டாமல் அமைதியாக, ஆனால் உற்சாகமாக இருந் தார்.

மேடையில் கோட்டு சூட்டு போட்ட ஒரு முன் வழுக்கைக்காரரை நிறுவனத் தின் எம்.டி என்று ஆரம்பித்து பலரையும் அறிமுகம் செய்தவள், மின்னலின் வர லாற்றை அருவியாய் மனதில் பதியும் வண்ணம் தெரிவித்தாள்.

அடுத்து எம்.டி, மின்னலின் செயல் முறைகளை பாதி புரிந்தது போலவும், மீதி இனிமேல் புரியும் என்று நம்பும்படி யாகவும் விளக்கினார். பத்தாயிரம் வைப் புத் தொகையுடன் உறுப்பினராகச் சேரும் ஒருவர் உள்ளூர், வெளியூர், வெளி மாநி லமென மூவரைப் புதிய உறுப்பினராகச் சேர்க்க வேண்டும்; இதில் முறையே 20, 30, 40 சதவீதம் கழிவாகத் தரப்படும்; இந்த மூவரும் அடுத்த ஜோடிகளைச் சேர்த்தால் இந்தக் கழிவில் பாதி கிடைக் கும்; ஒருவர் ஆரம்பித்து வைத்த சங்கிலி 100 நபர்களை இணைத்தால் போனசாக ஒரு லட்சம் கிடைக்கும். ஆயிரமாகப் பெருகினால் பத்து இலட்சம்.

இப்படி ஒரு வருடத்தில் எவ்வளவு சம்பாதிக்க முடியும்? எண்களுக்கு ஏது முடிவு .. கூட்டம் கணக்கில் மனதைப் பறி கொடுக்க, வெங்கட்ராமன் மட்டும் தனக் குத் தெரிந்தவர்களின் பட்டியலை நம்பிக் கையுடன் திட்டத்தில் போட்டு யோசிக்க ஆரம்பித்தார்

தொழிலின் கட்டமைப்பு நன்றாகத் தான் இருக்கின்றது .. எனினும் இவர் களை எப்படி நம்புவது?

அது புரிந்தது போல் நம்பிக்கையை ஊட்டிவிடும் வகையில் அந்தத் தொகுப் பாளினி விதவிதமான தோற்றத்தில் சிலரை அறிமுகம் செய்து வைத்தாள். அதில் கோட்டு சூட்டு போட்டவர், வேட்டி சட்டைக்காரர், நடுத்தர வயதில் ஒரு பெண்மணி என்று ஆளுக்கொரு விதத்தில், பெயருக்கொரு மதத்தில் கோவை, நெல்லை, மதுரை, தஞ்சை என எல்லா வகைத் தமிழிலிலும் தாங்கள் வெற்றி பெற்ற கதையைச் சுவாரசியம் கலந்த புள்ளிவிவரத்துடன் சொன்னார் கள். அதிலும் கோட்டு சூட்டு போட்ட வர் உறுப்பினராகி இரண்டு வருடத்தில் 40 இலட்சம் சம்பாதித்திருப்பதாகக் கோவைத் தமிழில் சொன்னது எல்லோ ரையும் ஆச்சரியப்பட வைத்ததோடு நம் பிக்கையின் பிரஷ்ஷரை நன்கு ஏற்றவும் தவறவில்லை.

ஒரு மண்ணின் மொழியில் ஒருவர் ஏமாற்றும் விதத்தில் பேச முடியாதே? ஏமாற்ற வேண்டும் என்று வந்து விட் டாலே மொழி செயற்கைத்தன்மை அடைந்து காட்டிக் கொடுத்து விடாதா என்று நாம் தான் கதையில் எழுதுகி றோமே அன்றி கூட்டம் அப்படி ஏதும் ஆராய்ச்சி செய்யவில்லை என்பதோடு அந்த தேவ சாட்சியங்களை ஆச்சரியத் துடன் பார்த்தது.

வெங்கட்ராமனின் மனதில் இன்ன மும் சந்தேகம் இருக்கிறதா, இல்லையா என்று ஊகித்தறிய முடியவில்லை. சாட் சியங்கள் அரங்கேறிய சமயத்தில் சர வண பவனில் இருந்து வரவழைக்கப் பட்ட உளுந்து வடையும், டிகாஷன் கலந்த காபியும் எல்லோருக்கும் கொடுக்கப்பட் டது. இது ஏதோ கடமைக்கு கொடுக்கப் பட்டதைப் போல இல்லாமல் அந்த வர வேற்பு அழகிகள் மனதார ஒருவர் விடா மல் கொடுத்து உபசரித்தார்கள். இந்த இனிய உபசரிப்புக்காகவே பலரும் மறுக் காமல் வாங்கிக் குடித்தார்கள். அதில் வெங்கட்ராமனும் உண்டு என்பதை ஈண்டு விளக்கத் தேவையில்லை. ஆனால் அப்போதும் அவர் ஒரு நிதா னத்துடனே யோசித்தவாறு இருந்ததால் மற்றவர்களைப் போல அவரை யாரும் ஏமாற்றிவிட முடியாது என்பது போல வும் காட்சியளித்தார்.

அடுத்து, வந்திருந்த மக்கள் கேள்வி கேட்கலாம் என்று அறிவித்தார்கள். பலர் பல மாதிரி, யதார்த்தமாகவும், ஊகத்தின் அடிப்படையிலும் தினுசு தினுசாகக் கேட் டார்கள். இதற்கு எம்.டி. சளைக்காமல் பல கோணங்களில் பதிலளித்தார். இறு தியாக ''இன்னமும் உங்களுக்கு நம் பிக்கை வரவில்லையென்றால் வீட்டிற்கு சென்று நிதானமாக யோசித்துவிட்டு முடி வெடுக்கலாம். உங்களுக்காக நாங்கள் எப்போதும் காத்திருப்போம், வாய்ப்புக் களைத் தவற விடாதீர்கள்'' என்று அந்த வழுக்கை மனிதர் பேசியது மட்டும் வெங்கட்ராமனுக்கு பிடித்திருந்தது.

வந்தவர்கள் உறுப்பினர் விண்ணப் பத்தை ரூ.1000 கொடுத்துவிட்டு வாங்கிச் செல்லுமாறும், பின்பு அவர்கள் சேரும்

**கணக்குப் போட்டுப் பார்த்தார். 500 தலைகளை ஆயிரம் ரூபாயினால் பெருக்கினால் மொத்தம் 5,00,000 ரூபாய். மண்டபத்துக்கு 30,000, சரவண பவனுக்கு அதிகபட்சம் ரூ.20 வைத்தால் கூட 10,000, அப்புறம் அழகிகள், சபாரிகள், விளம்பரங்கள் எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒரு இரண்டு அல்லது மூன்று இலட்சம் தேறுமே. அதில் அவரது ஆயிரமும் இருக்கிறது என்பதை நினைக்கும் போது தொண்டை துக்கத்தை அடக்க முடியாமல் கனக்க ஆரம்பித்தது.**



படிப்பகம்

www.padippakam.com



போது வைப்புத் தொகையில் இந்தக் கட்டணம் கழித்துக் கொள்ளப்படும் என்றும் அந்தப் புன்னகை அழகி சொல்லி முடிப்பதற்குள் விண்ணப்பங்களை வைத்திருந்த கரங்கள் இருக்கைகளைத் தேடி வந்தன. பலரும் ஆயிரம் ரூபாய்தானே என்று வாங்க ஆரம்பித்தார்கள். வெங்கட்ராமன் இன்னமும் முடிவு செய்யவில்லை, விண்ணப்பத்தை வாங்குவதா, இல்லையா என்று.

டை கட்டிய சீருடை இளைஞர்கள் ஒவ்வொரு வரிசையாகச் சென்று வழங்குவதைப் போல திணித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வந்த தோரணையைப் பார்த்தால் அவர்கள் யாரிடமும் கேட்கவில்லை, சற்றே நாசுக்கான அதிகாரத்துடன் பேப்பரை நீட்டினார்கள் என்றும் சொல்லலாம். அவர் முறை வரும்போது வெங்கட்ராமன் குழம்பியவாறு ஏதோ வேண்டாமென திடீரென்று எழுந்து விட்டார். அதுவும் அவர்கள் கொடுத்த காபி, வடையை அருந்தியிருக்கிறோமே என்ற தர்ம சங்கடத்தால் வந்த குழப்பம். இதுவும் திட்டமிட்டு நடக்கவில்லை, ரொம்பவும் தற்செயலாக நடந்தது. எழுந்தவரிடன் ஒரு பெரிய வாய்ப்பைத் தவறவிட்டு விட்டோமோ என்ற எண்ணம் ஓடாமல் இல்லை.

இருந்தாலும் வேறு ஒரு சக்தியால் இயக்கப்படுபவர் போல வாசலை நோக்கி விரக்தியுடன் நடந்தார். இறுதியடியில் வெற்றி வாய்ப்பை தவற விடுபவன் போலவும் அவரின் தோற்றம் இருந்தது. இதுவா, அதுவா என்று பிரித்தறிய முடியாத இருமை கலந்த ஓர்மையில் யந்திரமாக இயங்கினார். இப்போது வாயிலில் அழகிகள் இல்லை, சபாரி அணிந்த மூன்று குண்டர்கள் வாட்டசாட்டமாய் கையில் லாக்கப் வளையம் போல விண்ணப்பக் கத்தைகளை ஆட்டிக் கொண்டிருந்தார்கள்.

‘‘என்ன சார், கூட்டம் இன்னும் முடியலையே, முடிச்சுட்டுப் போகலாமே’’ அதட்டலாகக் கேட்டவன் அவர் கையில் ஒன்றைத் திணித்தான். வயிற்றில் பதட்டமும், பயமும் மேலெழும்ப .. ‘‘இல்ல வேணாம்.. இருக்கட்டும்’’ என்றெல்லாம் முயன்றவர் வேறு யாராவது தன்னைப் போல வருவார்களா அவர்களை அணி சேர்த்து வெளியேறி விடலாம் என்று திரும்பிப் பார்த்தவரை ஒரு சபாரி கனைத்தவாறு புருவத்தை சுளித்தான். மறுபேச்சு இல்லாமல் பர்ஸை எடுத்தவர் இரண்டு 500 ரூபாய் தாளைக் கொடுத்து விட்டு பிழைக்கத் தெரியாத ஒரு பிள்ளையப் போல தேங்கித் தேங்கித் நடக்க ஆரம்பித்தார்.

பலரும்தான் விண்ணப்பத்தை வாங்கியிருக்கிறார்கள் .. ஏன் எதிர்மறையாகச் சிந்திக்க வேண்டும் .. இருக்கையிலேயே தெளிவாக வாங்கியிருக்கலாமே .. இல்லையில்லை .. சிலர் வாங்காமலும் சென்றார்கள் .. அதுதான் சரியானதா .. திரும்பிச் சென்று பணத்தைத் திருப்பிக் கேட்கலாமா .. ஆயிரம் ரூபாய்க்காக விதவிதமான வீட்டுச் செலவுகள் காத்திருக்குமே .. மண்டபத்தில் நம்மைத் தவிர மற்றவர்கள் இன்னமும் நம்பிக்கையை அறிவிக்கும் வண்ணம் சப்தமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்களே .. ஒருவேளை சேர்ந்துதான் பார்ப்போமே .. நம்பிக்கையில்லாதவன் பணத்தை எந்தக் காலத்திலும் சம்பாதித்ததே இல்லை ..

அந்தக் குறுகிய தருணத்தில் இரு தரப்பு வாதங்களும் அவரை அமைதியடையச் செய்யவில்லை. எல்லாவற்றையும் விட ஆயிரம் ரூபாயை கொடுத்து விட்டோம் என்ற உண்மை வழியை மறிக்கும் எமன் போல நினைவூட்டிக் கொண்டே இருந்தது. கடைசியில் இழந்ததுதான் மிச்சமென குற்ற உணர்வு மெல்ல தலைதூக்க ஆரம்பித்தது. மண்டபத்தின் வெளியே வந்தவர் யாரும் தெரிந்தவர்கள் நம்மைப் பார்த்து விட்டார்களா என்று அலசத் தொடங்கினார்.

ஒருக்கால் தெரிந்தவர்களுடன் வந்திருந்தால் பேசிவிட்டு ஒரு நல்ல முடிவு எடுத்திருக்கலாமோ ..விண்ணப்பத்தின் கட்டணத்தை 500 ரூபாயாக வைத்திருக்கலாம்.. ஒரேயடியாக ஆயிரம் என்பதுதான் இவ்வளவு யோசிக்க வைக்கிறது ..

அந்த ஞாயிற்றுக் கிழமையின் இனிய ஆரம்பம் மின்னல் போல சட்டென முடிவுக்கு வந்தது. இனித்த போது வேகமாகச் செல்லும் பொழுதுகள் வெறுக்கும் போது அணு அணுவாய் நகர்ந்து சித்திரவதை செய்கிறது. இனி அவரது வாழ்வில் கமலா திருமண மண்டபத்தை ஏறெடுத்தும் பார்க்கப் போவதில்லை, அதற்கு துணிவில்லை என்பது போல அவரது முகம் வாடி விட்டது. காலையில் இருந்த தெளிவான மனநிலையின் மேல் இப்பொழுது வகை தொகையில்லாமல் கோபம் பீறிட்டு வந்தது. அது அநேகமாக மாலதியிடம் மட்டும் வெடித்து விட்டு அடங்கும் வல்லமை கொண்டது. எதையும் கோர்வையாகச் சிந்திக்கும் ஆற்றலை இந்த துயரமான தருணத்தில் இழந்தவர் ஏதோ ஒரு சுவரொட்டியில் ஒரு எண்ணைப் பார்த்ததும் கனவில் விழித்தவனைப் போல தலையை உலுக்கி விட்டு யோசிக்க ஆரம்பித்தார்.

வேறொன்றுமில்லை, இருபது வருடங்களாக எண்களோடு புழங்குவதையே வேலையாகக் கொண்டவர் ஆயிற்றே ..கணக்குப் போட்டுப் பார்த்தார். 500 தலைகளை ஆயிரம் ரூபாயினால் பெருக்கினால் மொத்தம் 5,00,000 ரூபாய். மண்டபத்துக்கு 30,000, சரவண பவனுக்கு அதிகபட்சம் ரூ.20 வைத்தால் கூட 10,000, அப்புறம் அழகிகள், சபாரிகள், விளம்பரங்கள் எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒரு இரண்டு அல்லது மூன்று இலட்சம் தேறுமே. அதில் அவரது ஆயிரமும் இருக்கிறது என்பதை நினைக்கும் போது தொண்டை துக்கத்தை அடக்க முடியாமல் கனக்க ஆரம்பித்தது. சரவண பவன் காபியின் சுவை அடிநாக்கில் மறக்க முடியாத கசப்பாய் கசியத் தொடங்கியது. கண் தொலைவில் இருந்தாலும் வீடு தெரியாமல் மங்கலாக வழிந்து நின்றது

**— வினவு**, www.vinavu.com



படிப்பகம்

www.padippakam.com

# தமிழனென்று சொல்லடா! வர்க்க உணர்வு கொள்ளடா!!

ஒய்யாரக் கொண்டையாம் இனவா தமாம் உள்ளே இருப்பது முதலாளி வர்க்கமாம்!

இந்திய அரசின் அனுமார்களால் மீண்டும் தீக்கிரையாக்கப்பட்டு விட்டது ஈழம். மிச்சமிருக்கும் தமிழ் மக்களை யும் முள்வேலிக்குள் வைத்து சிறுகச் சிறுக கொலை செய்து கொண்டிருக்கிறது சிங்கள இனவெறி அரசு. சொல்லில் அடங்காத துயரக்கதைகளைக் கொண்டி ருக்கிறது ஈழத்தமிழர்களின் நிலைமை. கண்ணி வெடியை அகற்றுகிறோம் என்ற பெயரில் ஆக்கிரமிப்புக்கு சர்வே எடுக் கவும், ஆட்காட்டிகளை உருவாக்கவும் இராணுவத்தை அனுப்பி வைத்திருக்கி றது இந்திய அரசு.

புலிகள் இயக்கத்தை ஒழித்துக் கட்ட வும், சிங்கள இனவெறி அரசின் வெற் றியை உறுதி செய்யவும் இந்திய மேலா திக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை கள், தமிழகத்தில் ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த அனைவர் மத்தியிலும் ஆத்திரத்தையும் அதிருப்தி யையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்தக் கோபம் யாரை நோக்கித் திருப்பப்பட வேண்டும்? இந்தப் படுகொலைக்குத் திட்டம் வகுத்துக் கொடுத்த காங்கிரசு அரசை, அதற்குத் துணை நின்ற தி.மு.க.வை, நம்பவைத்துக் கழுத்தறுத்த அ.தி.மு.க.வை, பச்சோந்தி வேடம் போட்ட பாரதிய ஜனதாவை.. இன்ன பிறரை நோக்கித் திரும்ப வேண்டும்.

இவர்கள் மீதெல்லாம் நம்பிக்கை வைக்குமாறு 1983-இல் தொடங்கி நேற்று வரை தமிழக மக்களையும், ஈழத் தமிழ் மக்களையும், புலிகளையும் தவ றாக வழிநடத்திப் படுகுழியில் இறக்கி யவர்கள் யாரோ அவர்கள் மீது கோபம் வர வேண்டும். மாறாக, தமிழ் தேசியம் பேசுவோர் இந்த இலக்கைத் திசை திருப் பி, மலையாளிகள், கன்னடர்கள், தெலுங் கர்களுக்கு எதிரான கோபத்தைத் தூண் டுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு 'இன உணர்வை' ஊட்டும் திருப்பணியில் இறங்கியிருக்கிறார்கள்.

''தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே நாராயணனும், வெளியுறவுத் துறைச் செயலர் சிவசங்கர் மேனனும் மலையாளிகள் என்பதனால்தான் இந்திய அரசைத் தவறாக வழிநடத்தி விட்டார் கள்'' என்று கூறி இந்திய மேலாதிக்க எதிர்ப்பை மலையாளி எதிர்ப்பாக மாற் றுகிறார்கள். இதன் மூலம் இந்திய அரசு, ஆளும் வர்க்கங்களுக்கு மறைமுகமாக நற்சான்றிதழ் கொடுக்கின்றார்கள். அதி காரிகள் மலையாளிகள் என்றால், அமைச்சர்கள் தமிழர்களாக இருந்தார் களே அதற்கென்ன சொல்கிறார்கள்?

ப.சிதம்பரத்தில் தொடங்கி, தி.மு.க. அமைச்சர்கள், கடைசி நேர விற்ப னையை முடித்துக் கொண்டு கல்லா கட்டிய பாமக ஆகிய தமிழர்கள் அங்கே மட்டைக்கு நாலாய் கிழித்தது என்ன? தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தத னால்தான் ஈழத்தமிழனுக்கு இந்த கதி என்று சொல்லாமல், இவர்களை சந்தர்ப் பவாதிகள், பதவிப் பித்தர்கள் என்று தனி நபர்களாக விமரிசித்து விட்டு, நாராய ணன் முதல் டீக்கடை நாயர் வரை என்று அங்கே மட்டும் ஒரு இனத்துக்கு எதிராக நஞ்சு கக்குவது ஏன்?

கொழும்புக்குப் பறந்து போய் இந்தி யாவின் மேலாதிக்கத்தைப் பற்ற வைக் கும் சிவசங்கர் மேனனும், பாதித் தூக்கத் தில் எழுந்து பாய்லர் அடுப்பைப் பற்ற வைக்கும் டீக்கடை மலையாளியும் ஒரே வர்க்கமா? இல்லை இங்கே தமிழர்கள் டீக்கடை வைக்கக் கூடாது என்று யார் தடுத்தார்கள்? மாற்றான் தோட்டத்து மல்லிகை புகழ் சரவணபவன் தமிழ் முத லாளி, மேசை துடைப்பதற்கு தமிழர் அல்லாத மாற்றாரை, நேபாளிப் பையன் களை வைத்திருக்கின்றாரே, அதென்ன தமிழரின் பெருந்தன்மையா? குறைந்த கூலிக்கு ஆள் தேடும் உழைப்புச் சுரண் டலா?

**நாமக்கல் தவிட்டெண்ணெய் ஆலையில் தீ விபத்தில் கருகிச் செத்தார்கள் பீகார் தொழிலாளிகள். மலையாளி டீக்கடைக்காரரைப் பார்த்து காயும் தமிழினவாதிகள், கருகிய பீகார் தொழிலாளிகளின் உழைப்பில் பணம் கொழிக்கும் தமிழ் முதலாளியைக் கண்டு காய்வதில்லையே, இது தமிழின உணர்வா, அல்லது முதலாளித்துவ வர்க்க உணர்வா?**

தமிழனுக்கு ஒன்று என்றால் கேட்க நாதியில்லை என்று அங்கலாய்த்துக் கொள்கிறார்கள் இனவாதிகள். பிற இன மக்களைக் குறைந்த கூலிக்கு கசக்கிப் பிழியும் தமிழ் முதலாளிகளை இவர்கள் எப்போதாவது தட்டிக் கேட்டிருக்கிறார் களா? நாமக்கல் தவிட்டெண்ணெய் ஆலையில் தீ விபத்தில் கருகிச் செத்தார் கள் பீகார் தொழிலாளிகள். மலையாளி டீக்கடைக்காரரைப் பார்த்து காயும் தமி ழின வாதிகள், கருகிய பீகார் தொழிலா ளிகளின் உழைப்பில் பணம் கொழிக்கும் தமிழ் முதலாளியைக் கண்டு காய்வதில் லையே, இது தமிழின உணர்வா, அல் லது முதலாளித்துவ வர்க்க உணர்வா?

ஆதிக்க வர்க்கம் மட்டுமல்ல, ஆதிக்க சாதித் தன்மையும் தமிழின வாதத்தின் உள்ளடக்கமாக உள்ளது. டீக் கடையில் மலையாளி, உணவு விடுதி யில் கன்னடன், உயர் பதவியில் தெலுங் கன், பிற இனத்தான் என்று ஒவ்வொரு துறைக்கும் லிஸ்ட் வைத்துக் கொண்டு சோற்றுக் கையால் சொடுக்கு போடும் இந்தப் பேர்வழிகள் பீ அள்ளும் தெலுங் கன் லிஸ்டை பீச்சங்கையால் கூடக் காட் டுவதில்லையே! ''தமிழன் பீயை தெலுங் கன் அள்ளலாமா?'' என்று ஆர்ப்பரிப்ப தில்லையே! கக்கூசுக்குள் மட்டும் முக் காமல் முனகாமல் தமிழினவாதம் பக்கா வாக வெளியேறும் மர்மமென்ன?

பிற இன மக்களின் ஒடுக்கப்பட்ட பிரிவினர் காலந்தோறும் மலம் அள்ளு வதைக் கூசாமல் ஏற்கும் இனவாதத்தால், டீ போடுவதை மட்டும் தாங்கிக் கொள்ள முடியாதாம்! இனவாதத்திற்குள் ஒளிந்



படிப்பகம்

www.padippakam.com



ஈழம்: வன்னி முகாம் காட்சிகள்

திருக்கும் சாதியக் கண்ணோட்டத்தை, திருப்பூரில் உலகத் தமிழின மாநாட்டில் ஆதித்தமிழர் பேரவையைச் சேர்ந்த ஒரு தோழர் மேடையிலேயே சுட்டிக்காட்டிப் பேச, தமிழ்ச் சான்றோர் விருது வாங்க வந்திருந்த பொள்ளாச்சி மகாலிங்கம் என்ற முதலாளித் தமிழரின் மனம் நோகுமென்றும், இது அநாகரிகமென்றும் அங்கேயே மாவீரன் நெடுமாறன் பேசிய தோழரைக் கண்டித்தது மறக்க முடியாத தமிழ்தேசிய நினைவல்லவா?

தமிழனுக்கு இனவுணர்வு இல்லை என்பது இவர்களது கவலை. அதைக் கெடுத்தவன் யார் மலையாளியா, தெலுங்கனா, கன்னடனா? தமிழ்ச் சமூகத்தில் நீக்கமற வேரோடியிருக்கும் சாதியல்லவா தமிழின உணர்வின் முதல் எதிரி? தமிழர்களுக்குள்ளாகவே எல்லோரும் ஒன்று கிடையாது, சமம் கிடையாது என்ற நிலை இருக்கும் போது, இதை நேர்மையாகப் பரிசீலித்து, நேர்மறையில் ஆதிக்க வர்க்க, சாதி எதிர்ப்பு என்ற அடிப்படையில் தமிழர்களை ஒன்று படுத்தவும், தமிழின ஓர்மைக்கும் போராடுவதுதான் நேர்மையானது. அதை விடுத்து பிற மாநில, தேசிய இன மக்களைத் தமிழின வளர்ச்சிக்குத் தடையாகவும், பகையாகவும் காட்டிக் கொடுப்பது என்பது ஆளும்வர்க்கத்தின் ஐந்தாம் படை வேலை.

எப்படி ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி, பாரதிய ஜனதா கும்பல் சாதியப் பிளவுகளைக் கடந்து இந்துக்களை ஒன்று திரட்ட முடியாதென்பதால், முசுலீமையும் கிறித்தவரையும் எதிரியாகக் காட்டி மத வெறிக்கு ஆள் பிடிக்கிறதோ, அதே போல தமிழின ஓர்மைக்குத் தடையாக உள்ள உண்மையான காரணிகளை எதிர்த்துப் போராடும் நேர்மையில்லாத இனவாதிகள் பிற தேசிய இன மக்களை எதிரியாகக் காட்டியே தமிழின ஒற்றுமையை உருவாக்க முயற்சிக்கிறார்கள்.

ஈழத் தமிழன் செத்ததற்கு வடநாட்டு தலித் கேட்டானா என்கிறார் மணியரசன். இங்கிருக்கும் தமிழன் (தலித்) செத்ததற்கு சக தமிழர்கள் என்ன செய்தார்கள்? செந்தட்டி தலித் படுகொலைக்கு தமிழகம் குமுறியதா? கயர்லாஞ்சிக்கு முற்றுகை உண்டா?

பாப்பாபட்டி, கீரிப்பட்டி பிரச்சினையில் ஆதிக்க சாதிவெறியைக் கடைபிடிக்கும் சாதிக்கு இட ஒதுக்கீட்டை ரத்து செய்ய வேண்டும் என்று ஒரு நிர்ப்பந்தத்தை ம.க.இ.க முன்வைத்தவுடனேயே.. ஆகா இது மறைமுகப் பார்ப்பனியம் என்கிறார் மணியரசன். பார்ப்பன தேசிய நாயகன் ராமனை தமிழ் பழங்குடி கடவுள் என்று அவர் கொண்டாடுவதும், பார்ப்பன இந்திய தேசியத்தைக் கட்டிக் காக்கும் ஒரு அம்சமான சாதியமைப்பு முறையை ஒழிக்காமல் தமிழ்த் தேசியம் பேசுவதும் நேர்முகப் பார்ப்பனியம் அல்லவா?!

இந்த லட்சணத்தில் வடநாட்டு தலித் மாயாவதி போன்றவர்கள் இந்தியா என்பதை ஏற்றதன் மூலம் பார்ப்பனியத்தை ஏற்று விட்டார்கள்.. எனவே இனி தமிழன் யாரையும் நம்பிப் பயனில்லை. உலகெங்கும் உள்ள தமிழன் தானே போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. .. வா.. வா.. தமிழ் நாட்டு விடுதலைக்கு தயாராவோம் என்று துண்டைப் போட்டுத் தாண்டுகிறார் மணியரசன்.

இங்கிருக்கும் தனிச்சுடுகாடு, தனிக்குவளை, தனிக்கோவில், உள்ளிட்டவைகளைத் தகர்க்க கொங்கு வேளாளக்



படிப்பகம்

www.padippakam.com

கவுண்டர்களையும், தேவரையும், இன்ன பிற ஆதிக்கசாதி வெறியையும் அகற்றுவோம் வா! அதுவே தமிழ் தேசியக் கடமைக்கு முதற்படி என்று வீதியில் இறங்கத் தயாராக இல்லாமல், வடக்கு முதல் தெற்கு வரை இந்திய தேசியமாகக் காட்சியளிக்கும் சாதிவெறியைத் தகர்க்காமல் பிற தேசிய இன மக்களைப் பகையாகக் காட்டி தமிழ்த் தேசியத்தைக் கட்டித் தூக்குவதற்காக சாதிப் பூணூலையே இனமாகத் திரிப்பதற்கு இவர்கள் படாதபாடு படுகிறார்கள்.

''தமிழன் வாழாத நாடில்லை.. ஆனால் தமிழனுக்கென்று ஒரு நாடில்லை..'' என்பது இவர்களுடைய முத்திரை முழக்கம். மலையாளிக்கும், தெலுங்கனுக்கும், மராத்தியனுக்கும் எல்லா தேசிய இனமக்களுக்கும் தனித் தனியாக ஒரு நாடு இருப்பது போலவும், தமிழனுக்குத்தான் தனிநாடு தரவில்லை போலவும் என்ன ஒரு பம்மாத்து? இந்தியாவின் எல்லா இனங்களின் மீதும் தான் இந்து தேசிய ஒடுக்குமுறை இருக்கிறது, சுய நிர்ணய உரிமை இல்லை. தமிழன் மட்டுமா, பல்வேறு இன மக்களும் தான் இந்தியா முழுவதும், ஏன் இந்தியாவைத் தாண்டியும் எல்லாத் திசைகளிலும் நாடோடிகளாகப் பிழைப்பு தேடி ஓடுகிறார்கள்.

பீகார், ஒரிசா தொழிலாளிகள் தமிழகத்திலும், தமிழர்கள் மகாராஷ்டிரா கடலை மிட்டாய் கம்பெனிகளிலும், ஆந்திரா, பெங்களூரு குவாரிகளிலும், நேபாளிகள் கொட்டாம்பட்டியிலும், ஆசிய நாட்டு மக்கள் வளைகுடாவிலும் என இனம் கடந்து, எல்லை கடந்து மக்களை விரட்டுகிறது மூலதனம். உலகமயமாக்கத்தால் விவசாயமும் உள்ளூர் தொழில்களும் அழிக்கப்பட்டு உழைக்கும் மக்கள் விசிறியடிக்கப் படுவது தமிழனுக்கு மட்டுமா நடக்கின்றது? இந்த நிலைமையை மாற்ற, யதார்த்தத்தில் வர்க்கமாக மக்களைத் திரட்டுவதற்குப் பதிலாக, ''தமிழா.. தமிழா'' என்ற தனியாவர்த்தனம் வாசித்து என்ன பயன்?

''வந்தாரை வாழவைத்த தமிழ்நாடு இது! இன்று தமிழன் கூலிவேலைக்கு கேரளா போகின்றான்'' சொந்த மண்ணில் வாழ முடியாமல் பிழைப்பு தேடி ஓடும்படி தமிழகத்தை விட்டு அவனைப் பிடித்துத் தள்ளியது யாரோ அவர்களை எதிர்த்தல்லவா போராட வேண்டும்? யார் பிடித்துத் தள்ளியது? மலையாளியா, கன்னடனா? கேரளா எஸ்டேட்டுகளுக்கு வேலைக்குப் போகும் தேனி மாவட்ட விவசாயிகளைக் கேட்டுப் பாருங்கள். 'இங்கேயை விட அங்கே கூலி அதிகம், தொழிற்சங்கம் இருப்பதால் ஏதாவது ஒன்று என்றால் தட்டிக் கேட்கிறார்கள், மரியாதை இருக்கிறது'' என்று எதார்த்தமாக அவர்களுடைய அனுபவத்தை விளக்குவார்கள். இந்த உழைப்பாளித் தமிழர்களெல்லாம் இனத் துரோகிகளா?

வந்த தொழிலாளிகளையெல்லாம் எந்த மாநிலத்து முதலாளியும் கசக்கிப் பிழிவதுதான் உண்மை. சென்னை பாலம் கட்டும் வேலைகளிலும் வடசென்னை கனரகத் தொழில்களிலும் வாட்டி வதைக்கப்பட்டு, உயிரையும் இழக்கும் நிலைதான் வடநாட்டுத் தொழிலாளர்களுக்கு. இதே நிலைதான் வேறு மாநிலம், நாடுகளுக்குப் பிழைக்கப் போகும் தமிழ்த் தொழிலாளிகளுக்கும்!

''வந்தாரையெல்லாம் வாழ வைத்தது தமிழகம்'' என்று வசனம் வேறு! படையெடுத்து வந்த மன்னர்களையும், பார்ப்பனர்களையும் ஆதிக்க சாதிகளையும் அவர்களது கலாச்சாரத்தையும் பன்னாட்டு மூலதனத்தையும் வாழ வைத்துவிட்டு இந்த மானக்கேட்டை பெருந்தன்மை போல சித்தரித்துக் கொள்கிறார்கள். அன்றைய மன்னர்கள் மட்டுமா, இன்றைய கல்வி வள்ளல்களும் கூடத் தான் வந்தாரை வாழவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள சுயநிதிக் கல்லூரிகளில் தமிழர்களை மட்டுமே சேர்க்காமல், எல்லா இனத்துக்காரனுக்கும், வெளிநாட்டாருக்கும் தாராளமாக சீட்டு கொடுக்கிறார்களே, இது வந்தாரை வாழ வைக்கும் பண்பா, அல்லது 'வந்தவரை' இலாபம் என்று பணத்தை அள்ளும் வணிகமா? கல்விக் கொள்ளைக்கு வடநாட்டு மாணவர்களை தமிழ் முதலாளி வளைத்துப் பிடிப்பதில் வெளிப்படுவது வர்க்கமா? இனமா?

**தமிழ்நாட்டில் உள்ள சுயநிதிக் கல்லூரிகளில் தமிழர்களை மட்டுமே சேர்க்காமல், எல்லா இனத்துக்காரனுக்கும், வெளிநாட்டாருக்கும் தாராளமாக சீட்டு கொடுக்கிறார்களே, இது வந்தாரை வாழ வைக்கும் பண்பா, அல்லது 'வந்தவரை' இலாபம் என்று பணத்தை அள்ளும் வணிகமா? கல்விக் கொள்ளைக்கு வடநாட்டு மாணவர்களை தமிழ் முதலாளி வளைத்துப் பிடிப்பதில் வெளிப்படுவது வர்க்கமா? இனமா?**

சுரண்டும் முதலாளி தமிழனாய் இருந்தால் புரவலர் என்று பல்லைக் காட்டுவது, சுரண்டப்படும் தொழிலாளி வேறு இனம் என்பதால் பல்லைக் கடிப்பது - இதுதான் தமிழ்த்தேசிய குடி நாயகப் பண்போ?

தம்மை யாரும் ஆதிக்கம் செய்யலாகாது என்று கருதுபவர்கள், நாம் பிறரை ஆதிக்கம் செய்யலாகாது என்றும் கருத வேண்டும். அத்தகைய ஆதிக்க மரபுகளை இழிவாகவும் கருதி நிராகரிக்கவும் வேண்டும். தமிழன் அன்று கங்கை கொண்டான், கடாரம் கொண்டான், இமயத்தில் புலிக்கொடி நாட்டினான்.. என்று ஊரை அடித்து உலையில் போட்டதைப் பெருமையாகப் போற்றுகிறார்கள். யவனப் பெண்களை அடிமையாக வாங்கி அரண்மனை, அந்தப்புரங்களில் 'கொண்டி மகளிர்' ஆக்கியதை எண்ணிப் புளகாங்கிக்கிறார்கள்.

''பேராற்றல், பெரும்படை, வாள் வீச்சு, வேல்வீச்சு எல்லாமிருந்தும், ஏங்க பின்னே தமிழன் ஆட்சி வீழ்ந்தது?'' என்று கேட்டால், 'பார்ப்பான் பொம்பளையக் காட்டி மயக்கிட்டான்' என்று பதிலளிக்கிறார்கள் - ''ஆம்பிள சிங்கம்தான்.. ஆனா பொம்பள விசயத்துல வீக்கு!'' என்பது போல. மன்னர்கள் என்றழைக்கப்படும் இத்தகைய திருடர்களையும் பொறுக்கிகளையும் இனப்பெருமையின் நாயகர்களாகச் சித்தரிப்பவர்களிடமிருந்து ஒரு முற்போக்கான இன விடுதலையை எதிர்பார்க்க முடியுமா?

வரலாற்றில் தேசியம், தேசிய உணர்வு என்பதெல்லாம், முடியாட்சியையும் அதன் எச்சங்களை அகற்றி, நிலவுடைமை ஆதிக்கத்தையும் அதன் மரபுகளையும், மத நிறுவனங்களின் ஆதிக்கத்தையும் ஒழித்துக் கட்டிய பின்னர்தான் வந்திருக்கிறது. பிரெஞ்சுப் புரட்சியைக் கொண்டாடுவோர் லூயி மன்னர் பரம்பரயைத் தமது மரபாகப் போற்றுவதில்லை. அந்த மரபை ஒழித்ததிலிருந்து தான் பிரெஞ்சு தேசியம் வந்திருக்கிறது. இங்கோ தமிழ்த் தேசியவாதிகளின் எண்ணமும், கருத்தும் இன்னும் மன்னராட்சி மயக்கத்திலிருந்து விடுதலை பெறவில்லை. புரட்சிகரமான தேசிய உணர்வைத் தோற்றுவிக்கத் தேவையான சுயேச்



படிப்பகம்

www.padippakam.com

சையான முதலாளித்துவம் இந்தியாவில் வளரவில்லை.

ஆங்கிலக் காலனியாதிக்க வாதிகளால் மேலிருந்து திணிக்கப்பட்ட முதலாளித்துவ அரசு வடிவமும், வெள்ளையனுக்குத் துணை நின்ற தரகு முதலாளித்துவ வர்க்கமும், அவர்களுடைய இந்து தேசியமும் எந்த இனத்திலும் ஜனநாயகப்பூர்வமான இன உணர்வைத் தோற்றுவிக்கவில்லை. இதனை இனிமேல்தான் உருவாக்க வேண்டியிருக்கிறது என்பதே உண்மை. அதன் எதிரிகளான ஏகாதிபத்தியம், தரகு முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடாமல், மலையாளி.. கன்னடன் என்று இனவெறியைத் தூண்டி விடுவதுதான் இவர்களது அரசியலாக இருக்கிறது.

தமிழினம் தனது உரிமைகளை ஒடுக்கும் அரசுக்கு எதிராகப் போராடுவதன் மூலமும், பிற தேசிய இன மக்களிடம் தங்களது நியாயத்தை வலியுறுத்தி அய்க்கியப்படுவதன் மூலமுமே தன்னை பலப்படுத்திக் கொள்ள முடியும். ''இதைச் செய்யத் தவறுவதுடன் மலையாளி, கன்னடன், தெலுங்கன் என்று மக்களுக்கு இடையிலான பிளவையும், பிரிவையும் அதிகப்படுத்துவது ஆளும் வர்க்கத்துக்கு உதவுவதாகும்'' என்று நாம் கூறினால், உடனே, ''தமிழன்னா இளிச்சவாயனாடா! பட்டத்து யானையை அவுத்து விடுங்கடா'' என்று ஆர்ப்பரிக்கிறார்கள். எப்போது வாயைத் திறந்தாலும் ''அவன் மலையாளி, இவன் கன்னடன், அதோ பாரு தெலுங்கன்'' என்று உசுப்பேற்றி விட்டு அடிவாங்கும் போது மட்டும் ''அவன் கேட்டானா? இவன் கேட்டானா?'' என்று பேசுவதில் அர்த்தமுள்ளதா?

இன்னும் ஒருபடி மேலே போய், ''ராஜ் தாக்கரே பாணிதான் சரி. அவன் பீகாரிகளை அடிச்சு துரத்தியது மாதிரி இங்கேயும் நடக்க வேண்டும்'' என்கிறார்கள். இந்த மனநிலை ஒரு குட்டி பாசிசம் இல்லையா? மும்பைக்குப் பிழைக்க வரும் பீகார் தொழிலாளிகளை பிய்த்து உதறும் சண்டியர் ராஜ் தாக்கரே யார்? பால் தாக்கரேக்கு போட்டியாக முகேஷ் அம்பானியால் வளர்த்து விடப்படும் ஏவல் நாய். குஜராத்திலிருந்து வந்த பனியாவும், இந்தியாவையே கொள்ளையடிக்கும் தரகு முதலாளியுமான அம்பானியை அனுமதித்து விட்டு, அவனிடம் காசும் வாங்கிக்கொண்டு குரைக்கும் இந்தப் பிராணி, மராத்திய இனவுணர்வின் எடுத்துக்காட்டா, தரகு முதலாளியின் கைக்கூலியா? ராஜ் தாக்கரேயைப் பார்த்துப் புல்லரிக்கும் இவர்களுக்கு வட்டாள் நாகராஜுவைப் பார்த்தும் புல்லரிக்குமா?

ராஜ் தாக்கரேயும், வட்டாள் நாகராஜுவும் ஒரு வகையில் யோக்கியர்கள். தங்களைப் பச்சையான ஆளும்வர்க்க இனவெறியர்களாக மட்டும்தான் அவர்கள் அடையாளம் காட்டிக் கொள்கிறார்கள். மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் படத்தை வைத்துக் கொண்டு தங்களைப் பொதுவுடைமைக் கட்சி என்று கூறிக் கொள்வதில்லை. வர்க்க அரசியலுக்கு நேர் எதிரான இனவாத அரசியலைப் பேசிக்கொண்டே, பொதுவுடைமைக் கட்சி போல பம்மாத்துப் பண்ணும் இந்த வேலையைத்தான் இலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுன செய்கின்றது.




வீழ்வதற்கு முன்பு புலிகள் தமிழனது வீரம்.
தற்போது மலையாளியை எதிர்த்து தமிழின எழுச்சி!

இடதுசாரி வேடமிட்ட இந்த இனவாதிகளுக்கு ஈழம் உட்பட எந்த ஒரு விவாதத்திலும், நாம் வர்க்கம் என்று சொன்னாலே எரிச்சல் வருகிறது. ஈழ விடுதலையை நசுக்குவதில் இந்திய அரசின் வர்க்கநலன் இருக்கிறது என்றால், இது போகாத ஊருக்கு வழி என்று நம்மைப் புறம் பேசி விட்டு, ஈழ விடுதலையை வாங்கிவர இவர்கள் போகும் வழி கடைசியில் போயஸ் கார்டனில் போய் முடிகிறது.

ஈழமாக இருக்கட்டும், காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு பிரச்சினையாக இருக்கட்டும், தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் நம்மைப் போல உரிமைகள் மறுக்கப்படும், ஒட்டச் சுரண்டப்படும் பிற தேசிய இன மக்களையும் விலக்காத தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். தமிழகத்தின் நீர் உரிமையைப் பிடுங்கும் பிற மாநில அரசுகள், அரசியல் நோக்கத்துக்காக இனவுணர்வை விசிறி விட்டாலும், அந்தத் தண்ணீரை மக்களுக்கு வாரி வழங்குவதில்லை.

மாறாக அந்த மாநில தொழில் முதலைகளும், பன்னாட்டுக் கம்பெனிகளுமே இதனை உறிஞ்சுகிறார்கள் என்பது எதார்த்தம். இங்கே சென்னைக் குடிநீருக்கு என்று கொண்டுவரப்படும் வீராணம் தண்ணீர் ஐ.டி பார்க்குகளுக்கும், புதிய பணக்கார சாடிலைட் நகரங்களுக்கும் திருப்பி விடப்படுவதைப் போலத்தான்.

வர்க்க ஒடுக்குமுறையின் மருவிய வடிவமாக இன ஒடுக்குமுறை வெளிப்படுவதை இனவாதிகள் அங்கீகரிப்பதில்லை. பன்னாட்டு தேசங்கடந்த மூலதனத்தின் கொலைக்கருவியாக உள்ள இந்த அரசை, ஏகாதிபத்திய அடிமைத் தளையை அழித்தொழிக்கும் பாட்டாளி வர்க்க அரசியல் கண்ணோட்டத்தையும் அவர்கள் ஏற்பதில்லை. அதனால் தான், ஒபாமாவிடம் பூங்கொத்து தந்தோ, ஜெயலலிதா, அத்வானியின் காது கடித்தோ இன விடுதலையைச் சாதிக்க முடியும் என்று நம்புகிறார்கள்.

தமிழன் ஒன்றுபடத் தடையாக இருக்கும் சமூகத் தடைகளான சாதி ஆதிக்கம், பார்ப்பன மதவெறி, குறுந்தேசிய இனவாதம் ஆகியவற்றுக்கு எதிராக மக்களைத் திரட்டாமல், ''போதையில் கொஞ்சுவானாம், சுதி இறங்குனா புள்ளையப் போட்டு அடிப்பானாம்'' என்ற கதையாக, ஒரு மூச்சு பழம்பெருமையும் சவடாலும் பேசுகிறார்கள், பிறகு '' தமிழனுக்கு சூடு இல்லை, சொரணையில்லை'' என்று வசை பாடத் தொடங்குகிறார்கள்.

● பரிதி



படிப்பகம்

www.padippakam.com

# காதல்: நேசிக்குமா, கொலை செய்யுமா?

**சம்பவம் - 1**

திருச்சி அருகேயுள்ள ஒரே ஊரைச் சேர்ந்த லோகேஷ்வரியும், கார்த்திக் ராஜாவும் வெவ்வேறு பள்ளிகளில் 11 -ஆம் வகுப்பு படித்து வந்த நீண்டநாள் காதலர்கள். காதல் முற்றியபோது லோகேஷ்வரி கர்ப்பமானார். இரண்டாவது கர்ப்பம் ஐந்து மாதங்களை தாண்டி விட்டதால் முதல் கர்ப்பத்தை கலைத்தது போல கலைக்க முடியாதென மருத்துவர்கள் மறுத்தனர். இதனால் தன்னை மணம் செய்து கொள்ளுமாறு ராஜாவைக் கர்ப்பமான காதலி வற்புறுத்தினாள். முதலில் தன் பெற்றோர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என தட்டிக் கழித்த ராஜா பிறகு காதலியின் நச்சரிப்பினால் ஒத்துக் கொண்டான்.

காதலியுடன் ஒரு காட்டிற்கு பைக் சவாரி செய்து அங்கே இருவரும் தற்கொலை செய்யலாம் என அவன் கூற அந்த பேதைப் பெண்ணும் சம்மதித்தாள். எங்கே விஷம் என்று காதலி கேட்க அவளது துப்பட்டாவை எடுத்து கழுத்தை நெரித்துக் கொன்று விட்டான், ராஜா. போலீசால் கைது செய்யப்பட்ட பின் இந்தத் தகவல்கள் வெளியுலகிற்கு தெரிய வந்தன.

**சம்பவம் - 2**

டெல்லியில் சாக்ஷி என்னும் 26 வயது ஆசிரியை, தனது காதலனுடன் நெருக்கமாக இருந்ததைப் பார்த்து அவளது தாய் கிரண் பலமுறை கண்டிக்கவே, அவள் மீது கோபம் கொள்கிறாள். காதலர்கள் இருவரும் கிரணை படுக்கையறையில் கிடத்தி கையில் கிடைக்கும் ஆயுதங்களால் குத்திக் கொல்கின்றார்கள். சாக்ஷி ஆத்திரம் தீரப் பலமுறை குத்துகிறாள். இறுதியில் அந்தத்தாய் மரணமடைகின்றாள். ஆரம்பத்தில் கொள்ளையர்கள் வந்து கொன்றதாகச் சொன்ன சாக்ஷியின் வாக்கை நம்பிய போலீசார் பின்னர் உண்மையைக் கண்டு பிடிக்கிறார்கள்.

•••

''நடனத்திற்குப் பிறகு'' எனும் டால்ஸ்டாயின் சிறுகதையில், முந்தைய நாளின் இரவு விருந்தில் அழகான பெண்ணை சந்தித்து நடனமாடும் பணக்கார இளைஞன் ஒருவன் அதிகாலையில் வீடு திரும்புகின்றான். ஏதோ ஒரு புதிய உற்சாகமும், தன்னம்பிக்கையும், நல்லெண்ணமும் கொண்ட உணர்வுக்கு ஆட்படுகிறான். நெடுநேரம் விழித்திருந்தாலும் அவனால் துயில் கொள்ள முடியவில்லை.

படுக்கையை விட்டு அகன்று அதிகாலை எழுப்பியிருக்கும் வீதியில் இதுவரை இல்லாத நல்லவனாக நடக்கின்றான். சந்திக்கும் எல்லா மக்களையும் நேசிக்கிறான். முன்னை விட இப்போது ஏதோ அவன் மிகவும் நல்லவனாக ஆகி விட்டதாக ஒரு உணர்ச்சி. அவனது கெட்ட எண்ணெங்களெல்லாம் முந்தைய இரவோடு அகன்று விட்டதாக ஒரு தோற்றம். இப்படி காதல் ஒருவனிடம் ஏற்படுத்தும் நல்ல 'ரசாயன' மாற்றங்களையெல்லாம் டால்ஸ்டாய் அற்புதமாகச் சித்தரித்திருப்பார்.

டால்ஸ்டாய் மட்டுமல்ல, இளவயதில் காதல் வயப்பட்ட எல்லோரும் இந்த அனுபவத்தில் மூழ்கி எழுந்திருப்பார்கள்தான். தனது காதல் ஜோடிக்கு முன் தனது தீய எண்ணங்களை மறைப்பதாக இருக்கட்டும், தனது நல்லெண்ணங்களைக் காட்டுவதாக இருக்கட்டும், குடும்பத்தில் எல்லோரிடமும் அன்பு காட்டுவதாக இருக்கட்டும், சமூக உறவுகளில் உதவும் பண்பு திடீரென்று உருவவாதாக இருக்கட்டும், இவையெல்லாம் ஒரு காதல் வயப்பட்ட ஆண், பெண்ணின் மனதில் இயல்பாகத் தோன்றும்.

மனமே பரிசுத்தமாக மாறியது போலும், பண்பே அடியோடு மாறிப் போனது போலும், இதற்கு முன் இருந்த நானும் இப்போது இருக்கும் நானும் அடியோடு வேறுபடுவதும் போல இருந்தாலும் கொஞ்சக் காலத்தில் அந்தக் காதல் வழக்கமானதும், அல்லது திருமணம் முடிந்ததும் இருவரதும் உண்மைப் பண்புகளை ஒருவரோருவர் தெரிந்து கொண்டு அவமானமும், சினமும் அடைவதும் அப்புறம் சில ஆண்டுகளில் இந்தப் பகை நிதானமடைந்து பிரிவதற்கு வழியில்லாத பார்ப்பனிய சமூகத்தின் தடையில் மற்றவர்களின் குறைகளைச் சகித்துக் கொண்டு வாழப் பழகுவதும் ஏற்பட்டு வாழ்க்கை வண்டி ஓடுகிறது.

இருப்பினும் காதல் வயப்பட்ட தருணத்தில் ஏற்படும் அந்த நேச உணர்வுக்கு காரணம் என்ன? ஒருவர் மனித குலத்தை நேசிப்பதாக இருந்தால் அது கருத்து ரீதியாகவும், உயிரியல் ரீதியாக நாம் எல்லோரும் ஒரே இனமென்பதாலும் ஏற்படுகின்றது. சக மனிதனை நாம் நேசிப்பதற்கான உயிரியல் அடிப்படை ஆண் பெண் உறவிலும், குழந்தைக்கான பெற்றோராக இருப்பதிலும் ஏற்படுகிறது. இங்கே உடலும் உள்ளமும் சங்கமிக்கின்றன. ஒரு வகையில் காதல் என்பது மனிதன் தன் இனத்தின் மீது கொண்டுள்ள நேசத்தின் தன்னுணர்வற்ற வெளிப்பாடு.

தான் நேசித்த பெண்ணுடலுடன் முதலில் ஆசையுடனும், பின்னர் வெறியுடனும் உறவு கொண்டு தனது காமத்தை தீர்த்துக் கொண்ட கார்த்திக் ராஜா, பின்னர் ஈவிரக்கமில்லாமல் அவளது துப்பட்டாவையே சுருக்குக் கயிறாக மாற்றி இறுக்கி கொன்றிருக்கிறான். ஒரு காலத்தில் தான் நேசித்த உள்ளத்தையும் உடலையும் இப்படி துணி துவைப்பது போல பதட்டமின்றி கொன்றிருப்பது எதைக் காட்டுகின்றது?






படிப்பகம்

www.padippakam.com



சாக்ஷி தனது காதலுடன் நெருக்கமாக பல முறை இருந்ததை பார்த்து கண்டித்திருக்கும் தனது தாயை, வயிற்றில் வலியுடன் சுமந்து பெற்று ஆளாக்கி வளர்த்து தனது வாழ்வின் பெரும் பகுதியை மகளுக்காகத் தியாகம் செய்திருக்கும் அந்தப் பெண்மணியை சமையல் கத்திகளால் ஆத்திரம் தீரக் குத்திக் கொன்றிருப்பது, சாக்ஷியின் காதல் குறித்து நம்மை பரிசீலிக்கக் கோருகிறது.

இப்படி குற்றம் செய்யாத காதலர்களெல்லாம் கூட காதலின் தன்மையில் இப்படியான மதிப்பீடுகளைத்தான் கொண்டிருப்பார்களோ என ஐயம் ஏற்படுகிறது. இன்றைய காதலின் கவர்ச்சி எது? தான் இதுவரை அனுபவித்திராத காமம் என்பதுதான் அந்தக் கவர்ச்சியைத் தரும் வல்லமையைக் கொண்டிருக்கிறதோ?

இன்றைய பாதுகாப்பற்ற பொருளாதாரச் சூழலில் நல்ல வேலையும், பணமும் கொண்டிருக்கும் இளைஞர்களையே பெரும்பாலான பெண்கள் விரும்புகிறார்கள். இன்று பாலியல் வேட்கையை ஊரெங்கும் இரைத்திருக்கின்றன பண்பாட்டுக் கருவிகள். நேற்று வரை வீட்டுக்குள் முடங்கியிருந்த பெண்கள் இன்று வேலை, கல்வி காரணமாக வெளியே நடமாடுவதால் புதிய மதிப்பீடுகளுக்கு அறிமுகமாகிறார்கள்.

திருமணத்திற்கு முன்பே உடலுறவு வைப்பெதெல்லாம் தவறல்ல என்று நினைக்குமளவுக்கு பார்வை மாறியிருக்கின்றது. மேலும் காதலிக்கும் ஆண்களெல்லாம் காதலிகள் தங்கள் உடலைத் தருவதன் மூலம்தான் காதலை உறுதி செய்ய முடியுமென நிர்ப்பந்திக்கிறார்கள். எப்படியும் இவரைத்தானே திருமணம் செய்ய போகிறோம் என பெண்கள் குழிக்குள் விழுகிறார்கள்.

பழத்தைப் புசித்துவிட்டு தோலை எறிந்து விடுவது என்பதே இன்று காதலைப் பற்றி பல இளைஞர்களின் வக்கிரமான கருத்தாக இருக்கின்றது. ஜாலிக்கு காதலிப்பது, செட்டிலாவதற்கு வீட்டில் பார்க்கும் பெண்ணை மணம் செய்வது என்பதே அவர்களது தந்திரமாக உள்ளது.

லோகேஷ்வரியைக் 'காதலித்த' ராஜா மணம் செய்வதற்கு வீட்டில் எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறியதன் காரணம் என்ன? ஒன்று அவள் ஏழையாகவோ, தாழ்த்தப்பட்ட அல்லது ராஜாவின் சாதியை விட பிற்பட்ட சாதியாக இருந்திருக்க வேண்டும். உடலுறவின் இன்பத்திற்காவே காதலிப்பதாக நடித்த இந்தக் கயவன் முதலில் கருவைக் கலைத்து விட்டு, ஐந்து மாதம் கடந்து விட்ட படியால் இரண்டாவது கருவை கலைக்க முடியாது என்ற பிறகே கருவைச் சுமந்த தாயைக் கொல்வதற்கு முடிவு செய்திருக்கிறான்.

காதலின் மூலம் மற்ற மனிதர்களை தனது இனமாக உணரும் இயல்பை உணரும் அதே நேரத்தில், அது தனிப்பட்ட இரு மனிதர்களின் உறவாகவும் உள்ளது. இந்த தனி இயல்பின் ஊற்று மூலம் இன்னார் இன்னாரைத்தான் காதலிக்கிறார் என்பதிலிருந்து பிறக்கிறது. பொதுவில் இந்த இரு நபர்களின் காதலை பெற்றோர், உற்றார், சாதியினர், ஊரார் அனைவரும் ஏற்றுக் கொள்வதில்லை என்பதிலிருந்தே இந்த தனிமைத் தன்மை அழுத்தமாக காதலர்களின் மனதில் பதிந்து விடுகின்றது. சமயத்தில் எதிர்ப்பு பலமாக வரும் பட்சத்தில் காதல் கைவிடப் படுவதும், இல்லையேல் பல இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியும் வருகிறது. தனி மனிதனது காதலுக்கும், சமூக கட்டுப்பாடுகளுக்கும் உள்ள முரண்பாடு இப்படி பல்வேறு அளவுகளில் ஏற்படுகின்றது.

வயதுவந்த பிறகு, படிப்பு, தொழில் நிலையான பிறகே ஒருவர் காதலிப்பதற்கு உண்மையில் தனது சொந்தத் தகுதியில் தயாராகிறார். ஆனால் தமிழ் சினிமாவும், ஊடகங்களும் அதை வெறும் கவர்ச்சியாகவும், மற்ற கடமைகளை மறந்து இந்த உலகத்திலேயே காதல்தான் உன்னதமானது என்றும் தவறாக கற்பிக்கின்றன. இதனால் விடலைப் பருவத்தில் கற்றுத்தேர வேண்டிய வயதில் காதலித்து, காதலிக்க முடியாமல் போனதை எண்ணி எண்ணிச் சோர்ந்தோ பலரது ஆளுமை சமூகத்திற்கு பலனளிக்காமல் வெம்பி வாடிப்போகின்றது.

பிறப்பிலிருந்து, மரணம் வரை எல்லோரையும் சார்ந்து வாழ வேண்டிய பெண் இத்தகைய விடலைக் காதலால் கணநேர மகிழ்ச்சி அடைந்தாலும் மறுபுறம் வாழ்க்கை முழுவதும் ஆயுள் கைதி

**இருப்பினும் காதல் வயப்பட்ட தருணத்தில் ஏற்படும் அந்த நேச உணர்வுக்கு காரணம் என்ன? ஒருவர் மனித குலத்தை நேசிப்பதாக இருந்தால் அது கருத்து ரீதியாகவும், உயிரியல் ரீதியாக நாம் எல்லோரும் ஒரே இனமென்பதாலும் ஏற்படுகின்றது. சக மனிதனை நாம் நேசிப்பதற்கான உயிரியல் அடிப்படை ஆண் பெண் உறவிலும், குழந்தைக்கான பெற்றோராக இருப்பதிலும் ஏற்படுகிறது.**



படிப்பகம்

www.padippakam.com




யாகவே காலம் தள்ளுகிறாள். விடலைப்பருவத்தில் காதலிக்கும் ஆண்களில் பெரும்பாலானோர் பாலுறவு என்ற அவர்கள் இதுவரை அனுபவித்திராத புதிரை ருசிப்பதிலேயே ஆர்வம் கொள்கின்றனர். இதை அனுபவித்து விட்டு அப்புறம் வளர்ந்து ஆளான பிறகு பெற்றோர் பார்க்கும் பெண்ணை வரதட்சணையுடன் மணம் செய்து வாழ்க்கையில் நிலைபெறுகின்றனர்.

பெண்ணுக்கோ, தனது விடலைக் காதலையும் அதன் விளைவையும் மறைக்க முடியாமல் அவளது வாழ்வே கேள்விக்குறியாக மாறுகின்றது. இதனால் தனக்கு விருப்பமில்லையென்றாலும், வீட்டில் பார்க்கும் ஏதோ ஒருவரை அவர் வயதானாவராக இருந்தாலும் கூட கட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இன்றைய நுகர்வுக் கலாச்சாரச் சூழலில் அழகும், காமமுமே காதலைத் தீர்மானிப்பதில் பாரிய பங்கு வகிக்கின்றன. ரசனை, சமூக நோக்கு, தனிப்பட்ட பண்புகள், பொதுப் பண்புகள், அறிவு, பழகும் இயல்பு, எதிர்காலம் குறித்த கண்ணோட்டம் இவையெல்லாம் சேர்ந்து தான் காதல் துளிர்ப்பதற்கும், தளிர்ப்பதற்கும் தேவைப்படும் விசயங்கள். ஆனால் இவையெல்லாம் தெளிவில்லாத மாயமானைப் போல ஓடிக் கொண்டிருக்க, கைக்கெட்டும் காமமே காதலின் தகுதியாக மாறி விடுகின்றது.

நமது காதல் தகுதியானதா என்று பரிசீலிப்பதற்கு கவலைப்படாத காதலர்கள் காமத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு மட்டும் அவசரப்படுகிறார்கள். இந்த அவசரப்படுதலில் ஆணை விடப் பெண்ணுக்கு அபாயங்கள் அதிகமென்றாலும் அவள் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

ஆணுக்கோ தனது ஆண்மையை நிலைநாட்டி வெற்றிக்கொடி காட்டுவதற்கு, தனது நண்பர்களிடம் வெற்றிச் செய்தியைப் பகிர்வதற்கு ஒரு வாய்ப்பு. ஒரு பெண் அப்படி பகிர முடியாமல் இரகசியம் காக்கவே விரும்பினாலும் வயிற்றில் உருவாகும் கரு அதை உடைத்து விடுகின்றது.

கார்த்திக் ராஜா காமத்திற்காக மட்டும் லோகேஷ்வரியைப் பயன்படுத்த விரும்பினான். லோகேஷ்வரியோ அவனை மணம்செய்து கொள்ளவே விரும்பினாள். இது சுதந்திரத் தெரிவிலிருந்து வந்திருக்க வாய்ப்பில்லை. கறைபட்ட பெண்ணை யாரும் ஏற்கத் தயாராக இருக்க மாட்டார்கள் என்ற சமூக நிலைமையிலிருந்தே வந்திருக்க வேண்டும். அவன் வீட்டில் எதிர்ப்பு தெரிவிப்பதாக சப்பைக்கட்டு கட்டும்போது அவளோ அவனது போலித்தனத்தை, துரோகத்தை உணர மறுத்து வயிற்றில் இருக்கும் கருவை மட்டும் வைத்து தனது அவலநிலையை விளக்கியிருக்கிறாள்.

முறிந்திருக்க வேண்டிய காதல் ஒரு பெண்ணின் பாதுகாப்பற்ற அவலநிலையினால் அந்த அடிமை வாழ்வை பின்தொடர்ந்து ஓடவேண்டியிருக்கிறது. ஆனால் கார்த்திக் ராஜாவோ இந்தத் தொல்லையை ஒரேயடியாக முடித்து விட்டு தனது வாழ்க்கையைத் தொடர விரும்பினான். இரக்கமின்றி முடித்து விட்டான். எந்த முகத்தையும், கன்னத்தையும், கழுத்தையும் காமத்துடன் முத்தமிட்டானோ அந்தக் கழுத்தைக் கதறக் கதற இறுக்கி துடிப்பை அடக்கினான்.

மாநகரத்தில் வாழும் மேட்டுக்குடி பெண்களும், மேட்டுக்குடி பெண்களின் மதிப்பீடுகளைக் கொண்டு வாழ நினைக்கும் நடுத்தர வர்க்கப் பெண்ணான சாக்ஷியின் கதை வேறு. தனது அழகு, உடை, ஆண் நண்பர்கள், பணக்காரர்களின் தொடர்பு, அதன்மூலம் உயர நினைக்கும் காரியவாதம் இவையெல்லாம் இவர்களது ஆளுமையில் ஏற்றப்பட்டிருக்கிறது. இந்தக் காரியவாத உயர்வுக்காக இவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். இவர்களுக்கெல்லாம் காதல் என்பது பணவசதியுடன் செட்டிலாவதற்கான ஒரு பெரிய படிக்கட்டு.

இவர்களை வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களெல்லாம் பழைய மதிப்பீடுகளில் வந்தவர்கள். இதனால் இரு தரப்பினருக்கும் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் வகையிலேயே உறவு இருக்கும். இந்தத் தலைமுறையின் வேறுபாட்டில் வரும் பிரச்சினைகளைப் பெற்றோரே சுமக்க நேரிடும். புதிய தலைமுறைப் பெண்களுக்கு வெளியில் எந்த அளவுக்கு 'வெளிச்சம்' கிடைக்கிறதோ அந்த அளவுக்கு வீட்டில் இருள் சூழ்கிறது. பெற்றோரோடு சண்டை, எதிர்ப்பு, ஆவேசம்!

**ஆகவே காதலைச் சட்டென ஏற்றுக்கொள்ளாதீர்கள். வாழ்க்கையையும், சமூகத்தையும் பொறுப்புடன் கற்றுத் தேர்ந்து சமூகத்தில் உங்களுக்குரிய இடத்தை உறுதி செய்த பிறகே ஒரு முறைக்கு நூறு முறை ஆலோசித்து உங்கள் வாழ்க்கைத் துணையை தெரிவு செய்யுங்கள். இதே விதி பெண்களுக்கு இன்னும் பல மடங்கு அதிகம் பொருந்தும்.**



படிப்பகம்

தனது ஆண் நண்பர்களில் ஒருவனுடன் வீட்டிலேயே உறவு வைத்துக் கொள்வதைச் சகிக்க முடியாமல் சாக்ஷியின் தாய் சண்டை போடுகிறாள். சாக்ஷியோ இந்தத் தொந்தரவுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கத்தியால் 24 குத்து குத்தி தாயை கொல்கிறாள். ஏதோ ஆத்திரத்தில் நடந்த சண்டையல்ல இது. ஆழ வேர்விட்டிருக்கும் வெறுப்பு, பகையுணர்ச்சி.

எல்லாக் காதலர்களும் கொலை செய்வதில்லை என்றாலும், வன்முறை பல்வேறு அளவுகளில் வெளிப்படத்தான் செய்கிறது. காதலினால் கருவுற்ற பெண்கள் தனது காதலன் தன்னை மணம் செய்ய மறுக்கிறான் என்று சொல்லி அன்றாடம் காவல் நிலையத்தில் அழுதபடி கொடுக்கும் புகார்கள் வந்த வண்ணம்தான் இருக்கின்றன.

'காதலி'யின் உடலை செல்பேசியில் படம்பிடித்து நண்பர்களுக்கு படைக்கும் வக்கிரங்களும் ஊடகங்களை நிறைக்கின்றன. தனது இளவல்கள் செய்யும் மைனர் பொறுக்கித்தனங்களுக்கு பணம் கொடுத்து செட்டில் செய்வதற்கு பல பணக்காரர்கள் தயாராகத்தான் இருக்கின்றனர்.

சினிமா வாய்ப்புக்காக தனது உடலை படுக்கையாக விரிக்கும் பெண்களை வைத்துத்தான் கதாநாயகர்கள் தமது ஓய்வை போக்குகின்றனர். அலுவலகத்தில் மேலதிகாரிகளும் தமது பெண் பணியாளர்களை காமத்திற்காக சின்னவீடாகவோ, இரண்டாம் தாரமாகவோ பயன்படுத்தவே செய்கின்றனர். மாநகர மேட்டுக்குடி பெண்களோ பணம், ஆடம்பரத்திற்காக இதை விரும்பியே செய்கின்றனர்.

காதல் என்பது உணர்ச்சியில் ஒன்றேயானாலும், சமூகப் பிரிவுகளுக்கேற்ப வேறுபடவே செய்கிறது. ஆனால் எல்லாப் பிரிவுகளையும் தாண்டி அவசர அவசரமாகக் காமத்தை அனுபவிப்பது என்பது மட்டும் எல்லாக் காதலர்களின் தேசிய நடவடிக்கையாக மாறிவருகிறது. இதில் ஏழைகளாக இருக்கும் பெண்களின் அவலம் இருக்கும் வறிய நிலையிலிருந்து தேறுவதற்கு வழியில்லாமல் முடக்கிவிடுகிறது. சிலருக்கு வாழ்க்கையே முடிந்துவிடுகிறது.

மேட்டுக்குடி பெண்களுக்கோ இந்த அவசரக் காமம் வளமான வாழ்க்கைக்கான வாசலை திறந்து விடுவதாக உள்ளது. உள்ளே நுழைந்து பட்டுத்தெரிந்த பின்னரே அதன் கொடூரம் உரைக்க ஆரம்பிக்கிறது. அதற்குள் வாழ்க்கை வெகு தொலைவு கடந்து விடுகிறது.

ஆனால் எல்லா ஆண்களும் இப்படி வலிந்து வரும் காமத்தை அனுபவிப்பதை இளமையின் இலட்சியமாக விரும்புகின்றனர். காமம் முடிந்த பின் உறவைத் தூக்கி எறிய நினைக்கும் இவர்களெல்லாம் எதிர்கால மனைவிகளை எப்படி நடத்துவார்கள் என்பதும் இத்தகையோர்தான் நாட்டின் எல்லா மட்டங்களிலும் வேலை செய்கிறார்கள் என்பதும் இந்த நாட்டின் சமூகத் தரத்தை காட்டுவதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

ஆகவே காதலைச் சட்டென ஏற்றுக்கொள்ளாதீர்கள். வாழ்க்கையையும், சமூகத்தையும் பொறுப்புடன் கற்றுத் தேர்ந்து சமூகத்தில் உங்களுக்குரிய இடத்தை உறுதி செய்த பிறகே ஒரு முறைக்கு நூறு முறை ஆலோசித்து உங்கள் வாழ்க்கைத் துணையை தெரிவு செய்யுங்கள். இதே விதி பெண்களுக்கு இன்னும் பல மடங்கு அதிகம் பொருந்தும். இந்தக் காலத்தில் காதல் ஏற்படுவது ஒன்றும் முற்போக்கல்ல, அதன் சமூகத் தரமே நம் கவலைக்குரியது. அன்றாடம் கொல்லப்படும் காதல் பெண்களின் கதைகள் நமது தரம் மிகவும் இழிவாக இருப்பதையே எடுத்துச் சொல்கிறது.

● வேல்ராசன்


**இப்போது விற்பனையில்...**



**ஈழப்பிணங்கள்...**
**இந்தியக் கொலையாளிகள்!**
**-துரை.சண்முகம்**

தமிழின எதிரிகள், துரோகிகளை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்தும் கவிதை வீச்சு.

**விலை: ரூ.20**

**வெளியீடு: ம.க.இ.க.-வி.வி.மு.-பு.மா.இ.மு.- பு.ஜ.தொ.மு. -பெ.வி.மு.**

ஈழம்:
**நேர்மையான சந்தர்ப்பவாதமும்**
**நேர்மையற்ற சந்தர்ப்பவாதமும்**



இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் ஈழத்தில் போர்நிறுத்தத்தைக் கொண்டுவரும் என்றுகூறி, பதவி நாற்காலியைக் கைப்பற்றுவதற்கு ஈழ மக்களின் பிணங்களைப் பயன்படுத்திக் கொண்ட ஓட்டுப்பொறுக்கிகளையும், ஈழ விடுதலையைச் சீர்குலைக்கும் இந்த சந்தர்ப்பவாதக் கண்ணோட்டத்தையும் விமரிசிக்கும் நூல்.

**வெளியீடு: புதிய ஜனநாயகம்** **விலை: ரூ.25**



**ஈழம்:**
**தேவை ஒரு நேர்மையான மீளாய்வு!**

ஈழத் தமிழ் மக்கள்மீது அக்கறையுள்ள ஒவ்வொருவரும், விடுதலைப் போராட்டத்தின் பின்னடைவுக்கு என்ன காரணம் என்பதை மீளாய்வு செய்வது அவசியம் என்று கூறும் இந்த நூல், விடுதலையின் நண்பன் யார் எதிரி யார் என்பதைத் தெளிவாக வரையறுக்க வேண்டும் என்றும், விடுதலை இயக்கத்தின் உள்ளே ஜனநாயகத்தை நிலைநாட்டவேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

**வெளியீடு: புதிய ஜனநாயகம்** **விலை: ரூ.30**

இந்திய மேலாதிக்கத்திற்கு பலியான ஈழம்:
**வர்க்கப் பார்வையை மறுக்கும்**
**தமிழ்த் தேசியர்களுக்கு மறுப்புரை**



ஈழ விடுதலையின் எதிரியான இந்திய அரசை, நண்பனாகச் சித்தரிக்கும் தமிழ் தேசியவாதிகளின் கண்ணோட்டத்தை மறுக்கும் நோக்கில், இலங்கையின் மீதான இந்திய மேலாதிக்கத்தை, விவரங்களுடன் அம்பலப்படுத்துகிறது இந்நூல்.

**வெளியீடு: புதிய ஜனநாயகம்** **விலை: ரூ.20**

**நூல் கிடைக்குமிடங்கள்**

**புதிய கலாச்சாரம்,**
**16, முல்லைநகர் வணிக வளாகம்,**
**2-வது நிழற்சாலை, (15-வது தெரு அருகில்),**
**அசோக் நகர், சென்னை-600 083.**
**தொலைபேசி: 044-2371 8706**

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
**10, அவுலியா தெரு, எல்லீசு சாலை,**
**சென்னை-600 002.**
**தொலைபேசி: 044-2841 2367**

www.padippakam.com

# அதோ... அந்த மனிதர் போல வாழவேண்டும்!

கசங்கிக் கிடக்கும் பழந்துணியைப் போல அந்தப் பாட்டியின் தோற்றம் மார்க்கெட் சுவரோரம் தென்படும். அடிக்கடி கலைந்து போகும் சுண்டை வற்றலை விட அதைக் கூறு பிரிக்கும் அவளது கைகளில் அதிகச் சுருக்கல்கள். இமைகளைக் கூட வேகமாக நிமிர்த்த முடியா தபடிக்கு தளர்ந்து போயிருந்தது அவளது உடல். வறுத்தெடுக்கும் வெயிலில் சுருளும் சுண்டை வற்றலை வைத்துக் கொண்டு, தலையில் சேலைத் தலைப்பைப் போட்டபடி அவள் உட்கார்ந்திருக்கிறாள் என்பதை விட, அவளும் ஒரு கூறுகட்டிய சுண்டை வற்றலாகக் காட்சியளிப்பாள். இந்த வயதிலும் இவள் உழைத்து வாழும்படி என்ன கஷ்டமோ? ஓய்வெடுக்க வேண்டிய வயதில் இப்படி ஒரு உழைப்பா, எனப் பலவாறு பாட்டியின் மேல் பரிதாபம் மேலிடும்.

எனக்கு சுண்டை வற்றல் தேவையோ, இல்லையோ, அந்தப் பாட்டிக்காகவே அடிக்கடி வாங்குவதுண்டு. அன்றும் அதே மனநிலையோடு பாட்டியின் தரைக்கடைப் பக்கம் போனேன். குத்துக்கால் போட்டுக் கொண்டு நான் பேச ஆரம்பித்தவுடன், நடுங்கும் முகத்தை ஒருவாறாக நேர்ப்படுத்திக் கொண்டு இமைகளைக் குழப்பி ஒரு வழியாக பார்வையை ஊன்றினாள், பாட்டி.

''ரெண்டு கூறு'' என்றேன். எடுத்துக்க! என்பது போல பிதுங்கிய உதட்டசைவில் தாடையை அசைத்தாள் பாட்டி. ''எத்தன ரூபாய்?'' என்றவுடன், ''ஆங்.. பத்து'' என்று உதடுகளை உதறினாள். வாங்கிய கூறுக்கு பத்து ரூபாயைக் கொடுத்தவுடன், நடுங்கிய விரல்களால் பணத்தைப் பிடித்து விரித்து ஒருமுறை சரிபார்த்துக் கொண்டாள்.



விரல்களின் நடுக்கத்துடனேயே அனிச்சைச் செயல் போல் அதை மடக்கி சுருக்குப்பையில் போட்டு சுமாராக கயிற்றை இழுத்து வைத்தாள். முதுமையின் அனுபவத்தையும் உழைப்பின் தீவிரத்தையும் பார்த்துக் கொண்டிருந்தவன் இரக்கம் மேலிட பாட்டிக்கு உதவி செய்ய நினைத்து, ஒரு பத்து ரூபாய் தாளை எடுத்து ''பாட்டி இந்தா வச்சுக்குங்க'' என்று நீட்டினேன். சட்டென எதுவும் புரியாத குழப்பத்தில் சுருங்கிய முகத்தை இன்னும் சுருக்கியபடி, சிரமப்பட்டு உற்றுப் பார்த்தாள் பாட்டி. ''என்னாது.. அதான் காசு குடுத்தியே.. எனக்குதான் வயசாகிப் போயிடுச்சுன்னா நீயுங் கெடந்து தடுமாற்ற'' உதடுகள் கோணலாகப் போனதைப் பார்த்து, பாட்டி சிரிக்கிறாள் என்பது லேசாகப் புரிந்தது.

''அதில்ல பாட்டி.. இதச் சும்மா வச்சுக்குங்க'' என்று நான் கையை நீட்டியவுடன் அத்தனை பலம் பாட்டிக்கு எங்கிருந்துதான் வந்ததோ, கையை விலக்கி விட்டு சத்தமாக ''தே.. என்னா சும்மா கெடைக்குதா உனக்கு காசு.. காசோட அருமை தெரியலியா.. ஒத்த ரூபா சம்பாதிக்க என்னா பாடுபட வேண்டியிருக்கு. நீ பாட்டுக்கு சும்மா தூக்கித் தர்ற.. ஹூம் இந்தக் காலத்துப் புள்ளைங்களுக்கு வலி, வருத்தம் எங்க தெரியுது.. உழைக்கிற காசுதாம்பா உடம்புல ஒட்டும்.. நல்ல புள்ளப்பா நீ..'' என்று பணத்தை வாங்க மறுத்த பாட்டி எனக்கு புத்தி சொல்லி, ஏதோ பெரும்பழியிலிருந்து தப்பியது போல முணுமுணுத்துக் கொண்டே வேறு வியாபாரத்தைப் பார்க்க ஆரம்பித்து விட்டாள்.

ரொம்பதான் பிடிவாதக்காரப் பாட்டி போல இருக்கு என்று போகிற போக்கில் பக்கத்தில் நின்றவர் தனது புரிதலுக்கு ஏற்றவாறு சிரித்துக் கொண்டு போனார்.

ஆனால், பாட்டியின் உணர்ச்சியோ உழைப்பின் அருமையையும், உழைக்கும் மக்களின் சுயமரியாதையையும் எனக்குக் கற்றுக் கொடுத்தது போலவே இருந்தது. எப்படியாவது அடுத்தவன் பாக்கெட்டில் கையை நுழைப்பதையே மார்க்கெட்டிங் மேனேஜ்மெண்ட், அரசியல் புத்திசாலித்தனம் என்று பேசுபவர்கள் மலிந்திருக்கும் இந்த நாட்டில், உழைக்கின்ற காசுதான் உடம்பில் ஒட்டும் என்ற பாட்டியின் வார்த்தையில் மிளிர்ந்த நேர்மையும், உழைப்பின் வலிமையும் எனக்கு புதிய கண்ணோட்டங்களை வழங்கியது.

அம்பானி என்னடா அம்பானி தில்லுமுல்லுக்காரன்.. தெருவில் கிடந்து நேர்மையாக உழைக்கும் இந்தப் பாட்டியல்லவா நாட்டின் அச்சாணி என்ற பெருமிதத்தோடு பாட்டியைப் பார்த்தவாறே நகர்ந்தேன்.

உழைக்கும் வர்க்கத்தின் சுயமரியாதையையும், பொறுப்புணர்ச்சியையும் வெளிப்படுத்திய இன்னொரு சம்பவத்தை சமீபத்தில் பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சிகளில் பார்க்க முடிந்தது. இராமநாதபுரம் மாவட்டம் பொந்தம்புளி கிராமத்தைச் சேர்ந்தவர் 31 வயதுடைய முத்துராமலிங்கம். இவர் திருச்சி காந்தி மார்க்கெட்டில் சுமை தூக்கும் தொழிலாளியாக உள்ளார். நம் நாடு வெளிநாடுகளில் வாங்கியிருக்கும் கடனால் ஒவ்வொரு இந்தியனுக்கும் தலைக்கு ரூ. 30,000 கடன் உள்ளது என்ற செய்தியை பத்திரிக்கையில் படித்த இவர் இதில் தனது பங்கு இந்தியாவின் கடனை அடைக்க விரும்பினார்.



படிப்பகம்

www.padippakam.com



திருச்சி தொழிலாளி முத்துராமலிங்கம்

ஒரு நாளைக்கு ரூ.100 முதல் 150 வரை சம்பாதிக்கும் சுமை தூக்கும் தொழிலாளி முத்துராமலிங்கம் கடந்த மே 8-ஆம் தேதி ''இந்தியாவின் கடனை அடைக்க'' என்று குறிப்பிட்டு ரூ.5000-க்கு டி.டி. எடுத்து பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்பியுள்ளார். தவிர முத்துராமலிங்கம் பாக்கித் தொகையையும் மெல்ல அடைப்பதாகவும் இனி ''என்னைக் கேட்காமல் என் பெயரில் கடன் வாங்கக் கூடாது'' என்றும் கூறியிருக்கிறார்.

மேலோட்டமாகப் பார்த்தால் இந்த தொழிலாளியின் செய்கை ஆளும் வர்க்கத்திற்கு எதிரான கிண்டல், குத்தல் அல்லது ஒரு வகையான அதிரடி பாணி என்று கூட நினைக்கத் தோன்றலாம். ஆழமாகப் பரிசீலித்தால் உழைக்கும் வர்க்கத்திற்கேயுரிய சுயமரியாதை, நாட்டின் மானம் காக்கும் யதார்த்தமான தேசப்பற்று, எல்லாவற்றுக்கும் மேலே என்னைக் கேட்காமல் என் பெயரில் இனி கடன் வாங்கக் கூடாது என்ற கண்டிப்பில் உழைக்கும் வர்க்கம் தனது அரசியலதிகாரத்தைப் பறைசாற்றும் தன்னிலையான போக்கு இதில் வெளிப்படுவதுதான் நாம் காண வேண்டிய, ரசிக்க வேண்டிய பகுதியாகும்.

பல ஆயிரம் கோடி கடனை வாங்கிக் கொண்டு, அரசை ஏய்த்து தொழில் செய்து கொண்டு கொஞ்சம் கூடக் கூச்சமே இல்லாமல் தங்களுக்கான கடனைத் தள்ளுபடி செய்யச் சொல்லி நியாயம் பேசும் முதலாளிகளின் கேடுகெட்ட செய்கையை இந்த சுமை தூக்கும் தொழிலாளியின் நடத்தையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த நாட்டின் உண்மையான தேசப்பற்றாளர்கள் முத்துராமலிங்கம் போன்ற உழைக்கும் மக்களே என்ற உண்மை தெரிய வரும்.

நாட்டின் மீதான தனது உரிமையை ஒரு சிறிய செயலின் மூலமாக நிலைநாட்டிக் காட்டும் முத்துராமலிங்கம் போல மக்கள் உணர்வு பெற்றுவிட்டால் ''எங்களைக் கேட்காமல் எப்படிக் கடன் வாங்கினாய்?'' என்ற கேள்வி முதல் ''எங்களைக் கேட்காமல் ஏன் சிங்கள இனவெறி அரசுக்கு உதவி செய்தாய்?'' என்ற அரசியல் கேள்விகள் வரை கேட்கும்படியாக நிலைமை மாறி விடும். இந்தத் திசையில் சிந்திக்கும்படியாக செய்கிறது, முத்துராமலிங்கத்தின் பாணி.

'படிக்கலேன்னா மூட்டை தூக்கத்தான் லாயக்கு' என்று கேலி பேசும் படித்த வர்க்கம் ஒரு கணம் யோசிக்கவும். ஒரு சாதாரண சுமை தூக்கும் தொழிலாளி, அதிகம் படிக்காதவர், தேசத்தையே சுமக்கும் அளவுக்கு உழைக்கும் வர்க்கத்தின் சுயமரியாதையுடன் தமது ஆளுமையை வளர்த்துக் கொண்டு பொறுப்புணர்வுக்கு முன்னுதாரணமாக நம்முன்னே நிற்கிறார். இப்படிப்பட்ட வழிகாட்டிகளிடம் கற்றுக் கொள்வதற்கு நிறைய இருக்கிறது. இப்படிக் கற்றுக் கொள்வதன் மூலமாகவே நாம் உருப்படுவதற்கும் வழி இருக்கிறது என்று நம்புகிறேன் நான். நீங்களும் மறுக்க மாட்டீர்கள்தானே?

● சுடர்விழி

''தே.. என்னா சும்மா கெடைக்குதா உனக்கு காசு.. காசோட அருமை தெரியலியா.. ஒத்த ரூபா சம்பாதிக்க என்னா பாடுபட வேண்டியிருக்கு. நீ பாட்டுக்கு சும்மா தூக்கித் தர்ற.. ஹூம் இந்தக் காலத்துப் புள்ளைங்களுக்கு வலி, வருத்தம் எங்க தெரியுது.. உழைக்கிற காசுதாம்பா உடம்புல ஒட்டும்.. நல்ல புள்ளப்பா நீ..''

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

கொண்டது துரோகத்தை அல்ல. கொடுமைகளையும் அநியாயங்களையும் உயிரையும் பொருட்படுத்தாம எதிர்க்கிற தைத்தான் நான் கட்சியிலே கற்றுக் கொண்டேன்..''

''படிப்பும், தோழமையும், சமத்துவமும் கத்துக்கிட்டேன். உங்களையும் உங்களது கொடுமைகளையும் ஒருநாள் போராளிகள் கோதாவரி நதியிலே மூழ்கடிக்கத்தான் போறாங்க.. நான் உங்களுக்கு அடிபணிய மாட்டேன். கம்யூனிஸ்ட் கட்சிக்குத் துரோகம் செய்ய மாட்டேன்.'' என்று ஆவேசமாகக் கூறினாள் அவள். (நூல்: பக்.9)

'இப்போதென்ன புரட்சியா வந்துவிட்டது? வரும்போது நானும் மாறிக் கொள்கிறேன். அதுவரைக்கும் ஊரோடு ஒத்துப் போவதுதான் புத்திசாலித்தனம்' என்று அநீதிக்கெதிராக சமரசமாக வாழ்வதையே சாமர்த்தியமாக வெளிப்படுத்துபவர்களின் மனப்போக்கை பண்டி ராஜக்காவின் இலட்சிய உறுதி இடித்துரைக்கிறது.

கணவனுக்கு மனைவி துரோகம், மனைவிக்கு கணவன் துரோகம், குடும்பத்திற்கு மகன் துரோகம் என்பதே வாழும் கலையாக வளர்ந்து வரும் இந்த சமூகத்தில் கட்சிக்குத் துரோகம் செய்வதையே ஆகக் கேவலமாகக் கருதும் ராஜக்காவின் சமூக உணர்வு புதிய கலாச்சார விழுமியங்களையும் நம்முன் படைத்துக் காட்டுகிறது.

''மகிழ்ச்சியான குடும்பம், அன்பான கணவன், ஆசையோடு பார்க்கின்ற அம்மா, அப்பா, தங்கையை விட்டு விட்டு கட்சிக்காக போலீசிடம் சிக்கி.. அவமானப்பட்டு.. இது உனக்குத் தேவையா?'' என்று எவ்வளவோ நைச்சியமாகப் பேசியும், ராஜக்காவிடம் சராசரிப் பெண் உணர்வை விடக் கட்சியின் இலட்சிய உணர்வே மேலோங்கி இருப்பதை நேருக்கு நேர் பார்த்து வெறுத்துப் போன போலீசும், இராணுவமும் அவளைப் பன்னிரெண்டு நாட்கள் வதைமுகாமிலே வைத்து பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியும், இரவு முழுக்க ஏரித்தண்ணீரில் நிர்வாணமாக நிற்க வைத்தும் துன்புறுத்தினார்கள்.

ராஜக்காவின் போர்க்குணமோ எதிரிகளின் அதிகாரத்தை நிர்வாணப்படுத்தி அவமானப்படுத்தியதே ஒழிய மக்களுக்காகப் போராடும் அவளது நெஞ்சுறுதி இறுதி வரை தோற்கவே இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

நூல் அறிமுகம்:

# தெலுங்கானாப் போரில் தீரமிகு பெண்கள்!

பெண் என்றால்? வம்பு பேசுவாள், வாயாடுவாள், ஜாடை பேசுவாள், இல்லையென்றால் மாமியார், மருமகள், நாத்தனார், கணவன் என அணி பிரிந்துக் கொண்டு தங்களுக்குள்ளாகவே ஒரு 'தர்ம' யுத்தத்தை நடத்திப் 'போராடுவாள்'. இன்னும் புத்திசாலிப் பெண்ணோ, மத்தியான மகளிர் மட்டும் தொடரில் வந்து எம்பிராய்டு பின்னிக் காட்டுவாள். எப்படி வீட்டிலிருந்தபடியே சம்பாதிக்கலாம் என்று விபரம் சொல்வாள். அனைத்துக்கும் மேலே கள்ள உறவுக்கு பொறி பறக்க வசனம் பேசி 'புரட்சியே?' செய்வாள்.. இப்படித்தான் தொலைக்காட்சிகளும், சினிமாக்களும் பெண்களை தமது வர்த்தக வட்டத்துக்குள் சுழல விட்டுக் காட்டுகின்றன.

ஆனால் தெலுங்கானாவின் உழைக்கும் வர்க்கப் பெண்களோ "எமது பேரழகும் ஆளுமையும் சமூக உணர்வில் தான் வெளிப்படுகின்றது" என்று இரத்த சாட்சியாக நம்முன் வந்து உரக்கப் பேசுகிறார்கள். அவ்வாறு நடைமுறையில் வாழ்ந்த தெலுங்கானா பகுதி பெண்களின் வகை மாதிரியாக ஏழு பெண்களின் வாழ்க்கைக் கதையை நம்முன் நடத்திக் காட்டி, நமது வாழ்வின் அற்பக் கண்ணோட்டங்களைத் தகர்த்து எறிகின்றது ஒரு புத்தகம். அந்தப் புத்தகத்தின் பெயர் "தெலுங்கானாப் போரில் தீரமிகு பெண்கள்".

அளப்பரிய வீரமும், தியாகமும் ததும்பி நிற்கும் தெலுங்கானாவில், ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் மக்கள் அணி திரண்டனர். நிலப்பிரபுக்களின் கேட்பாரற்ற கொடிய சுரண்டல், போலீசு இராணுவத்தின் அடக்குமுறைகள் படுகொலைகள் இவைகளைக் கண்டு பயப்படாமல், பணியாமல் நிலத்துக்காகவும், தங்கள் விடுதலைக்காகவும், அதிகாரத்திற்காகவும் ஆர்த்தெழுந்தது, தெலுங்கானா.

திருப்பித் தாக்கி திமிறி எழுந்த தெலுங்கானாவின் பெண்களில் ஒருவர் தான் இந்த நூலில் முதலில் நமக்கு அறிமுகமாகும் பண்டி ராஜக்கா. போராளிகளுக்கு சோளக்கதிரைச் சுமந்து சென்ற போது வழியிலேயே போலீசும், இராணுவமும் நிலப்பிரபுவின் ஆட்களோடு சேர்ந்து கொண்டு அவளைப் பிடித்து சித்திரவதை செய்கின்றார்கள். உதைத்தால் போராட்ட விபரங்களையும் கட்சி இரகசியங்களையும் காட்டிக்கொடுத்து விடுவாள் என்பது அவர்களது கணக்கு.

மேலும் பெண்தானே! இரகசியம் காக்க மாட்டாள். கற்பழிப்பு வரை சென்றால் பயந்து விசயத்தை வெளியிடுவாள் என்று அந்தக் கயவர்கள் கடைசி எல்லை வரைக்கும் போனாலும் அவள் உடம்பிலிருந்து இரத்தத்தைத்தான் கறக்க முடிந்ததே ஒழிய, மக்கள் விடுதலைக்காகப் போராடும் கட்சியின் திட்டங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பெற முடியவில்லை.

ஆணாதிக்கத் திமிரோடு அந்த அயோக்கியர்கள் அந்தப் பெண்ணின் மேல் உடல்வதையில் மட்டுமல்ல, சொல் வதையிலும் இறங்கினார்கள். நிலப்பிரபுத்துவத்தின் எந்த அடக்குமுறைக்கும் பணியவில்லை பண்டி ராஜக்கா. பொது வாழ்க்கைக்கு வந்து கட்சி, அரசியல் என்று செயல்படப் போனால் ஒரு பெண்ணின் ஒழுக்கத்துக்கே கேடு வந்து சேரும் என்று எக்கச்சக்கமாக யோசிக்கின்ற நடுத்தரவர்க்க மனநிலையாளர்கள் மத்தியில், பெண்டல பாடு என்ற சாதாரண கிராமத்துப் பெண்ணான ராஜக்கா எதிரிகளின் வதைமுகாமில் நேருக்குநேர் வாதம் செய்யும் துணிச்சலை நீங்களே பாருங்கள்.




"என்னடி தேவடியா? இனியாவது சொல்றியா?" என்று போலீசு இன்ஸ்பெக்டர் அதட்டினான்.

"என்ன சொல்லச் சொல்றீங்க?" என்று கேட்டாள் அவள்.

"உன்னோட ஆம்படையான்கள் சங்கதி தான்" என்று தாஸ் என்கிற ஜமீன்தார் எகத்தாளமாகக் கூறினான்.

"..., அவ சும்மாவே சொல்லுவாளா சார்? போட்டு நொறுக்குங்க! பாருங்களேன் எவ்வளவு சதை போட்டிருக்கா? இவளுக்குப் போராட்டக் குழுவில் பத்து பேர் ஆம்படையான்களாம்!" என்று கூறி, ஜமீன்தார் தூண்டி விட்டான். (நூல்: பக்.7)

நடத்தையைக் கேள்விக்குள்ளாக்கினால் 'ஓ'வென்று அழுது தங்கள் வழிக்கு வந்து விடுவாள் என்ற அவர்களின் சம்பிரதாயமான கலாச்சாரத்தின் முகத்தில் காறித்துப்பும்படி முன்னை விடத் தீவிரமாகப் பேசினாள்.

"ஒழுக்கமே இல்லாத நீ என்னை அவதூறு பேசறியா? நீ பிழைக்கிற பிழைப்பு ஒழுக்கங் கெட்ட பிழைப்பு! திங்கறதெல்லாம் இரத்தச் சோறு! உன்னையும் உன் குடும்பத்தையும் பாருக்குத்தான் தெரியாது? அப்படிப்பட்ட நீ, என்னைப் பத்தி அவதூறு பேசறியா?" (நூல்: பக்.8).

ஒரு பெண் தனது குடும்ப நலனுக்காக வாழ்வதையும், கணவனது விருப்பப்படி இருப்பதே குடும்ப லட்சணம் என்று அவன் விருப்பப்படி தாசி வீட்டுக்குத் தூக்கிச் சென்றதை இலக்கியமாக புராணமாகப் பேசும் இந்த நாட்டில் தான், பாலியல் வன்முறைக்கு உள்ளாகும் போதும் தனது சமூகத்தின் மக்களுக்காக அனைத்து இன்னல்களையும் எதிர்கொண்டு சமூக உணர்வுடன் ஒரு பெண்ணால் போராட முடியும் என்பதை நடைமுறை சாத்தியமாக்கிக் காட்டுகிறாள் ராஜக்கா.

அது மட்டுமல்ல. "பாவிகளா! உங்களிடம் உள்ள மிருகத்தனத்தை எல்லாம் காட்டிடுங்க! ஆனா நான் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் துரோகம் மட்டும் செய்வேன்னு நினைக்காதீங்க! போராட்டக் குழுக்களுக்கு நான் துரோகம் செய்ய மாட்டேன். நான் கட்சியிலே கத்துக்

தொடர்ச்சி 34-ஆம் பக்கம்



படிப்பகம்

எல்லா சித்திரவதைகளையும் கடந்து அவள் ஊருக்கு வரும்போது, போலி கம்யூனிஸ்டுகளோ போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து ஆளும்வர்க்கத்தோடு சமரசமாகித் தேர்தலில் பங்கெடுக்கப் போகின்றனர். கொள்கைக்குத் துரோகமிழைத்தவர்களைப் பார்த்து மனம் கசந்து போய் விடுகிறாள் ராஜக்கா.

எதிரிகளிடம் அவள் பட்ட சித்திரவதையை விலாவாரியாக விவரித்த நூலாசிரியர் போராட்டத்தின் துரோகிகளால் அவள்பட்ட மனத்துயரை விவரிப்பதற்கு மனமின்றி ராஜக்காவின் வருத்தத்தை ஒரு சமாரான தொனியில் பதிவு செய்து விட்டு, போலிக் கம்யூனிஸ்டுகளுக்கே உரிய 'சரிக்கட்டும்' நுணுக்கத்தோடு எந்த பரிசீலனையும் இன்றி கதையை முடிக்கிறார். ராஜக்காவின் வாழ்க்கைக் கதையில் இந்த இடத்தின் மூலம் போலிக் கம்யூனிஸ்டுகளையும் அவள் அம்பலப் படுத்தி விடுகின்றாள்.

இப்படி ராஜக்கா என்ற ஒரு பெண் மட்டுமல்ல, ரங்காபுரம் என்ற கிராமத்தில் வாழ்ந்த வெர்ரம்மா என்ற பெண்ணின் வழியாக அந்த வீட்டில் உள்ள வயதான மூதாட்டி உட்பட எப்படி மெல்ல மெல்ல போராட்டக் குழுவுக்கு ஆதரவாக தங்களது வாழ்க்கையை மாற்றிக் கொள்கிறார்கள் என்பதையெல்லாம் எதார்த்தமாக அறிய முடிகின்றது. வீட்டுக்கு போலீசு வந்தாலே, குடும்ப கவுரவம் போச்சு, நமக்கு இந்த புரட்சி அரசியல்லாம் வீண் வம்பு என்ற மதிப்பீட்டின் படி வாழச் சொல்லும் ராகவம்மா பாட்டியிடம், சீதாராமையா பேசும் வார்த்தைகள் பாட்டியை ஒத்த கருத்துடைய அனைவருக்கும் பதிலாக அமைகிறது.

"மக்கள், விவசாய சங்கத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் அமைத்து கொடுமைகளை எதிர்த்துகிட்டு இருக்காங்க! நாமும் அவங்களுக்கு துணையா நிற்போம். அவங்களோடேயே இன்ப துன்பங்களை அனுபவிப்போம். இதுதான் நம்ம குடும்பத்துக்கும் வம்சத்துக்கும் மதிப்பு தரும்! ஊரோட ஒட்டித்தான் நாம் போகணும்'' என்று கூறினான் சீதாராமய்யா. (நூல்: பக்.34)

போராட்டக் குழுக்களுக்கு உதவி செய்வதிலும், கம்யூனிச லட்சியங்களைக் குடும்பப் பண்பாகக் கருதி செயல்படுவதிலும் தன்னிகரற்று விளங்கிய பெண்களில் நடிகட்டா கிராமத்தின் கூலைவத் தொழிலாளியான லச்சம்மாவும் ஒருவர். லச்சம்மா போராட்டக்குழு தோழர்களுடன் தொடர்பு வைத்திருப்பதை அறிந்து போலீசு பட்டாளம் அவளை ஊருக்கு

**இப்படி எல்லா இன்னல்களையும் எதிர்த்துப் போராடும் மனவலிமை ஒரு பெண்ணுக்கு எங்கிருந்து வந்தது என்று நீங்கள் கேட்டால், பண்டி ரஜாக்காவும், லச்சம்மாவும், ராம் பாயம்மாவும், "எங்களது வலிமை சமூக உணர்வில், கம்யூனிச சித்தாந்தத்தில் இருக்கிறது" என்கிறார்கள் அழுத்தமாக. இது சாத்தியமா? என்பவர்கள், அவர்களுடனேயே விவாதிக்க இந்தப் புத்தகத்திற்குள் செல்லுங்கள்.**

மத்தியில் நிர்வாணப்படுத்தி, தலைகீழே மரத்தில் தொங்கவிட்டு அடிக்கிறது. "போராட்டக்குழுத் தோழர்கள் எங்கிருக்கிறார்கள்.. காட்டிக்கொடு'' என்று எவ்வளவோ கேவலமாக திட்டியும், அடித்தும் லச்சம்மாவோ மானத்திலும் பெரிதாக மக்களுக்காகப் போராடும் கட்சித் தோழர்களைப் பற்றி ஒரு வார்த்தையும் கூற மறுக்கிறாள்.

படிக்காத அந்த கூலைவத் தொழிலாளி பட்ட சித்திரவதைகளை அறிந்து பார்க்க வரும் போராட்டக் குழுவைச் சேர்ந்த ராமுலம்மாவின் ஆறுதலுக்கு லச்சம்மாவின் பதிலைப் பாருங்கள். ''அதென்னம்மா! அப்படிச் சொல்றே! எனக்கு அவமானம் நேர்ந்தா, உங்களை ஏசவானேன்? என் ஒருத்திக்கு மட்டுமா, அவமானங்களும் கஷ்டங்களும்? இந்த

நூலின் பெயர்:
தெலுங்கானாப் போரில்
தீரமிகு பெண்கள்

ஆசிரியரின் பெயர்:
எம்.ஏ. பழனியப்பன்

விலை: ரூ. 50.00

வெளியீடு:
அறிவுப் பதிப்பகம்,
சென்னை-14.

கிடைக்குமிடம்:
கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
பேச: 044-2841 2367.

பாழாய்ப் போன அரசாங்கத்தாலே எல்லோருக்கும்தான் கஷ்டங்களும், அவமானங்களும்?.." (நூல்: பக்.75)

'தனக்கு மிஞ்சிதான் தானமும் தர்மமும்,.. புரட்சியும் போராட்டமும்' என்று புத்திசாலித்தனமாகப் பேசும் படித்த வர்க்கத்தின் சுயநலத்தை இந்த இடத்தில் வெளுத்து வாங்கும் கூலைவக்காரியாக உயர்ந்து நிற்கிறாள் லச்சம்மா. இதே போல நரசம்பேட்டையை சேர்ந்த மல்லிகாம்பா, வாரங்கல் மத்திய சிறையில் அடக்குமுறைக்கு எதிராக உயிர்நீத்த ராம் பாயம்மா, சூர்யாபேட்டையைச் சேர்ந்த சிவம்மா, ஜனகாம் வட்டாரத்தைச் சேர்ந்த அகிலம்மா, .. இப்படி ஒவ்வொரு பெண்ணும் வெவ்வேறு வகையில் தெலுங்கானா மக்கள் போராட்டத்தோடு தங்கள் வாழ்க்கையை இணைத்துக் கொண்டதை நமக்கு அறிமுகப்படுத்துகிறது என்ற வகையில் இந்நூலாசிரியரின் உழைப்பு வரவேற்கத் தகுந்ததாக உள்ளது.

அதே வேளையில் தெலுங்கானாப் போராட்டத்தில் பங்கேற்ற தீரமிகு பெண்களின் போராட்ட மரபை, சீரழிந்து போன போலிக் கம்யூனிஸ்டுகள் தங்களுடையது எனப் பீற்றிக் கொள்வதற்கு எந்த நியாமும் இல்லை. "ஏன் இப்படி எங்கள் கம்யூனிச லட்சியத்தை சீரழித்தீர்கள்?" என்று தெலுங்கானாப் போரின் பெண்களின் வாரிசுகளாய் நாம் கேள்வி கேட்பதற்கான நியாயத்தை இந்நூல் வழங்குகிறது.

அறிந்தோ, அறியாமலோ இதற்கு உதவி செய்வதற்காக இந்நூலாசிரியரை நாம் பாராட்டலாம். தேர்தல் பாதைக்கு இழுத்துப் போய் தெலுங்கானாவின் இறுதி லட்சியத்தை மூழ்கடித்து விட்டோம் என்ற களிப்பில் மிதக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளின் கண்களை உறுத்தும் படி மேற்கு வங்கத்தின் நந்திகிராமிலும், லால்கரிலும் தெலுங்கானாப் போரின் தீரமிகு பெண்கள் மீண்டும் எழுந்து நிற்கிறார்கள்.

இப்படி எல்லா இன்னல்களையும் எதிர்த்துப் போராடும் மனவலிமை ஒரு பெண்ணுக்கு எங்கிருந்து வந்தது என்று நீங்கள் கேட்டால், பண்டி ரஜாக்காவும், லச்சம்மாவும், ராம் பாயம்மாவும், "எங்களது வலிமை சமூக உணர்வில், கம்யூனிச சித்தாந்தத்தில் இருக்கிறது" என்கிறார்கள் அழுத்தமாக. இது சாத்தியமா? என்பவர்கள், அவர்களுடனேயே விவாதிக்க இந்தப் புத்தகத்திற்குள் செல்லுங்கள்.

• துரை. சண்முகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, சௌந்தரதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்டர்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

www.padippakam.com

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd.No: TN/CCN/434/09-11



ஊருக்குச்செல்லும் பாதையின் துவக்கத்தில்
நிழல் காய்க்கும் அந்த வேப்பமரம்
இப்போது இல்லை,
தலைமுறைகளுக்கு சுவாசம் ஊட்டிய
பால்சுரந்த கிளைகளின் ஈரம்...
இலைகளின் வாசம்...
கொழுந்துகள் நுனியில் கூசும் சூரியன்...அனைத்தையும்
கொன்ற இடத்தில் கண்டேன் பலகையை;
''பசுமை சுய உதவிக் குழு''
உங்களை அன்புடன் அழைக்கிறது.

பெரிசுகள் ஒதுங்கி வெற்றிலைப்போடும்
அழகினைப்பார்த்து கிளிவாய் சிவக்கும்.
மிச்ச சுண்ணாம்பு தடவிய இடத்தின்
மேலே வழியும் மரக்கோந்து வள்ளத்தில்
கை நனைத்து சுட்டெறும்புகள் வரையும்
உயிரோவியத்தை காண இனி வழியில்லை!

பழைய நினைவுகள் பாதையில் குறுக்கிட்டன...
அதோ...கல்யாண முருங்கை இலை
அடை சுட்டு சாப்பிட்டால்
அடாத சளி நீங்கும்,
இதோ... ஆடாதொடை
கசாயம் குடித்தால் கடும் ஜூரம் போகும்.
அதுதான் துன்னூற்றுப் பச்சிலை
மரு நீக்கும்
அதோ குப்பைமேனி
சொறி, சிரங்கு போக்கும்...

பச்சிலைகளை உறவாக்கி
பாட்டி கூட்டிச் சென்ற வழியெங்கும்
இப்போது கருவை முட்களில்
காய்ந்துக் குலுங்கும் சாராய உறைகள்.

குட்டையின் புழுக்கம் தாங்காமல்
சட்டையைக் கழற்றிய நல்லபாம்பு
வாதாம் இலைச்சருகில் இறந்துகிடக்குது.
ஆலமரத்து டீக்கடையை
அடையாளம் தேடினாலோ,
''அதெல்லாம் இப்ப இல்லை
அதோ அந்த காய்ந்த வாய்க்கால் தாண்டினால்
முன்பு வேளான் வீடிருந்த இடத்தில்
உடைந்த பானைகள் குவிந்திருக்கும்
அதுக்கு கிழக்கால ஒரு பாழும் கிணறு
அதை ஒட்டி மதிச்சு கீத்து மேல
ஒரு பிளாஸ்டிக் தாள் போட்டிருக்கும்
அதான் இப்ப டீக் கடை'' என ஊர் சொல்லுது.

வவ்வாலும் வீட்டிற்குள் வருவதில்லை
என்ன இருக்கிறது விவசாயி வீட்டில்?
வெறும்பானையை உருட்டி
வெறுத்துப்போன எலி
விழுந்து சாக கழனிப்பானை இல்லாமல்
வீட்டை விட்டே ஓடிவிட்டது.
ஓலையில் செருகிய
கருக்கரிவாளின் கைப்பிடியை கரையான் தின்கிறது
வேலியில் காயும் வெளிர்பச்சை தாவணியை
ஆடு மேய்கிறது.

பசும்புல் துளிர்க்க வழியின்றி
பன்றிகள் காலில் மிதிபட்டு
பட்டுப்போய்... பொட்டல் வெளியான
வயலின் நடுவே
ஜோடிக்கப்பட்ட மரத்தின் உச்சியில்
கொடி ஒன்று துளிர்க்கிறது
வேடிக்கைப் பார்த்தவர்களிடம் விசாரித்தால்
ஆகஸ்டு பதினைந்து!

• துரை. சண்முகம்

படிப்பகம்